# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு.....

பெப்ரவரி 2012 விழி 08 பார்வை 79



கல்வி மதிப்பீடு – எண்ணக்கரு – மதிப்பீட்டின் தேவை




பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்திக்கு வித்திடும் காரணிகள்



பொதுவாக கற்பித்தல் – குழுமுறைக் கற்பித்தல் ஓர் ஒப்பியல் நோக்கு



கட்புல ஊடகம் – அதன் மறுமலர்ச்சியும் கட்டமைப்பும்





www.viluthu.org

விலை : 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வினைத்திறன் மிக்க ஆசிரியத்துவ நோக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800 - 1246

அகவிழி

மாத இதழ்


வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :

AHAVILI
*3, Torrington Avenue, Colombo - 07.*
*Tel : 011 - 2506272*
*E-Mail : ahavili.viluthu@gmail.com*




**உள்ளே...**


- கல்வி மதிப்பீடு - எண்ணக்கரு - மதிப்பீட்டின் தேவை — 03
- பொதுவாகக் கற்பித்தல் - குழுமுறைக் கற்பித்தல் ஓர் ஒப்பியல் நோக்கு — 07
- கட்புல ஊடகம் - அதன் மலர்ச்சியும் கட்டமைப்பும் — 12
- முகாமைத்துவம், நிர்வாகம் ஆகிய எண்ணக்கருக்களினூடாக கல்வி நிர்வாகத்திற்கான ஓர் அறிமுகம் — 16
- கல்வியியலுக்கான புதிய பார்வை - புதிய பங்களிப்பு — 18
- பூரணத்துவமான கல்வியை நோக்கி — 21
- பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்திக்கு வித்திடும் காரணிகள் — 25
- தமிழ் இலக்கண வளர்ச்சிக்கு ஈழத்தறிஞரின் பங்களிப்பு — 29
- நினைவு மற்றும் மறதி — 36
- ஆசைச் சட்டம்பியார் — 40
- கல்வியியல் எண்ணக்கருக்கள் — 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800 - 1246

அகவிழி

மாத இதழ்

ஆசிரியர் :
V.S.இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

ஆசிரியர் குழு:
க.சண்முகலிங்கம்
திருமதி பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு :

திரு.து.ராஜேந்திரம்
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி உ.நவரட்ணம்
முன்னாள் ஒப்வு நிலைப்பணிப்பாளர் - தேசிய கல்வி நிறுவகம்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வ.மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை - பேராதனைப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் இரா.வை.கனகரட்ணம்
தமிழ்த்துறை - பேராதனைப் பல்கலைக்கழகம்.

திரு.க.இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர் - தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

திரு.தை.தனராஜ்
முதுநிலை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

திரு.V.தியாகராஜா
சிரேஷ்ட ஆலோசகர் - சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை, கல்விப்பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.

லெனின் மதிவானம்
பிரதி கல்வி வெளியீட்டு ஆணையாளர், கல்வி அமைச்சு.

திரு.கே.சாம்பசிவம்
கல்வி முகாமைத்துவம் ஆலோசகர்.

திரு.ஜி.போல் அன்ரனி
முன்னாள் பிரதி பரீட்சை ஆணையாளர்.

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர் கொழும்பு கல்வி வலயம்.

## ஆசிரியர் பக்கம்



கடந்த அகவிழியில் கல்விக்காக ஒதுக்கப்படும் வள ஒதுக்கீடு பற்றியும் சம்பள முரண்பாடுகள், அதற்காக கல்விசார் ஆளணியினர் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பல ஆலோசனைகளை கேட்டிருந்தோம். பலர் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கியிருக்கின்றனர். பத்திரிகைகளிலும் இது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கல்விச் சமூகத்தினர் விரைந்து செய்யவேண்டியவை எவை என்பதையும் தங்களுக்கான சகல வளங்களையும் நியாயமாக பெறுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்பதையும் பல ஆக்கங்களிலும், பத்திரிகை செய்திகளிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கிறது ஆயினும் இது தொடர்பில் செயலாற்றவேண்டியவர்கள் பல முரண்பாடுகளோடும் பக்கச்சார்பாகவும் செயற் படுவதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அகவிழி சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளிடத்திலும் ஆசிரிய தொழிற்சங்க அதிகாரி - களிடத்திலும் பல கலந்துரையாடல்களை நடாத்த தீர்மானித்துள்ளது. பொதுவாக இருக்கக்கூடிய அனைத்து கல்விசார் தரப்பினராலும் தமது வள நெருக்கீடு பற்றி தாம் கொண்டிருக்கக்கூடிய ஆக்கபூர்வமான விடயங் - களையும் உள்ளடக்கி ஓர் கருத்திட்ட மாதிரியை முன்னெடுக்கலாம் என நம்புகிறோம்.

அரசு கல்விக்காக ஒதுக்கும் வள ஒதுக்கீடு போதுமானதென்றும் அதனை கல்விசார் ஆளணியினர் சரிவரப் பயன்படுத்துவதில்லை என்றும் கடமைகளைச் சரிவர செய்வதில்லை என்றும் கல்வி அமைச்சும் அதிகாரிகளும் கூறிவருகின்றனர். இக்கருத்துக்களும் செயற்பாடுகளும் மேலும் முரண்பாடுகளை வளர்க்குமேயன்றி தீர்வினைப்பெற்றுத்தராது மறுபுறத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையில் பல கோடிகளை அரசு பகல் கொள்ளை அடித்து விடுகிறது அதனால் தான் இந்நிலைமை எனவும் கூறப்படுகிறது. நாடு கடனில் மூழ்கியுள்ளது வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி அதிகரிப்பு, வீதியில் இறங்கிப் போராட யாரும் இல்லை எனக் கூறிக்கொள்கின்ற நிலையிலும் இந்நிலையில் ஆசிரியர்களின் சம்பள உயர்வு என்பதும் அதற்காகப் போராடுதல், அல்லது பெற்றுக் கொள்ளுதல் என்பதும் சாத்தியமற்றது என்று கூறுகின்றவர்களையும் இவற்றைப் பெற்றுக்கொள்வதால் வேறுபல சலுகைகள் அற்றுப் போய்விடுவதாக நம்புகின்றவர்களையும் காண்கிறோம். சிறிதாகவேனும் இதற்காக குரல்கொடுப்பவர்களை வேறு விதத்தில் தடைசெய்து செல்லும் போக்கும் இல்லாமலில்லை.

இவ்வாறான சிந்தனைப் போக்கு வளர்ந்து செல்லும் நிலையில் மனதளவிலாவது எமது சக்திக்கு வலுவூட்டி நாம் முயற்சிக்க வேண்டும். அதற்காக ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும் என்ற அடிப்படைவிடயத்திற்காவது ஒன்றிவருதல் என்பது கல்விசார் ஆளணியினர் ஒவ்வொருவரதும் தலையாய கடமையுமாகும்.

போராடிப் பெறுதல், முயற்சியினால் விளைதல், என்பவற்றிற்கு அப்பால் உண்மையான உழைப்பிற்கான ஊதியம் இயற்கையால் தீர்மானிக்கப்படும். சமூகத்தின் மீதான உழைப்பு என்பது அதுவும் கல்வித் தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டிற்காக உழைத்தல் என்பது எதிர்கால மனித வளம் சரியான தகுதிவாய்ந்ததாக கட்டியெழுப்பப் படுதலில் முக்கிய பங்கு வகிக்கும். எண்ணுங்கள் எண்ணங்களை வலிமையுடையதாக! கடந்த கால அனுபவங்கள் மிக எளிமையாக எமக்கு சொல்லித் தந்திருகின்றது. எதுவும் மாறாததல்ல. இயல்பாக மாறுதலும் முயற்சியினால் மாறுதலும் நிகழ்ந்த வண்ணமே இருக்கும். இது நமது சமூகம் என்ற பொறுப்புணர்வுடனான நம்பிக்கையுடன் இடையறாது உழைத்தல் என்ற நல்நோக்கு நல்ல பயனைத் தரும் என்பதும் அதனூடாக நாம் பலரது வாழ்விலும் உலக சரித்திரங்களிலும் கண்டு தெரிந்திருக்கின்றோம். முழு நம்பிக்கையோடு முயற்சிப்போம் கிடைக்கும் வரை ஆக்கபூர்வமான கருத்தாடல்களையும் திட்டங்களையும் முன்மொழிவோம்.

சகல தர நிலைகளிலும் உள்ள மாணவர்களின் கல்வி நிலையினை உயர்த்தல், ஆசிரிய வாண்மைத்துவ மேம்பாடு, கல்வியிற் கற்றல், தொடருறு கற்றலில் தம்மைத் தயார்படுத்தல் என எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஊதியம் போதுமானதாக இல்லை என்கின்ற பெருங்குறைபாட்டை ஓரளவுக்கேனும் நிறைவு செய்வதினூடாக இலங்கைத் தீவு முழுமைக்குமான கல்வித் தர மேம்பாட்டை அதிலும் தமிழ்க் கல்விச் சூழலை மேம்படுத்துவதற்காக ஒவ்வொருவரும் உங்களாலான முயற்சியை செய்யுங்கள். அதற்கான பயன் கிட்டும். ஆலோசனை பகருங்கள், அகவிழி உங்களுடன் பயணிக்கும்.

ஆயினும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் யாவும் அகவிழியின் பணியும் அல்ல, நோக்கமும் அல்ல. கல்விச் சஞ்சிகை என்ற வகையில் ஆக்கபூர்வமான ஆக்கங்களை கல்வியாளணியினருக்கு வழங்குதல் என்பதோடு கல்வித்தராதர மேம்பாடு குறித்த விடயங்களில் அறிகைசார் புலமையாளர்களைக் கொண்டு ஆக்கங்களை தருவிப்பதும் அதனுடைய முக்கிய பணியாகும். கல்வியில் தராதரம் என்பது கல்வி அடைவு சார்ந்ததாகவே நோக்கப்படுகின்றது. இது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. மாணவர்களின் பங்குபற்றல் மட்டம், ஆசிரியரின் தேர்ச்சி, அவர்களது

அர்ப்பணிப்பு, பாடசாலைத்தலைமைத்துவம், ஆய்வுகூடங்கள், நூல்நிலையங்கள், பாடநூல்கள், ஏனைய கற்பித்தல் சாதனங்கள், சமூகக்கல்விநிலை, சமூகஆதரவு, சிறந்தகலைத்திட்டம், பரீட்சைமுறை

என்பவை அவற்றுள் முக்கியமானவையாகும். தற்போதைய கல்விக்கொள்கை நோக்கங்கள் கற்றல் விளைவுகளை மேம்படுத்தும் நோக்கங்களை கொண்டுள்ளன. இதற்காக படைப்புத்திறன், தொடர்பாடல், குழுவில்தொழிற்படுதல் பொருத்த - மடைதல், முனைப்பு, பொறுப்புடைமை,தலைமைத்துவம், போன்ற அறிகைசாரா அடைவுகளையும்மேம்படுத்த வேண்டியுள்ளது. ஆசிரியர் நியமனம், செயலாற்றுகை, கண்காணிப்பு, பாடசாலைமட்டதிட்டமிடல், ஆசிரியர் அபிவிருத்தி, பரீட்சைகள் போன்ற பலவிடயங்கள் எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அரசு கூறிவருகிறது.எமது எதிர்பார்ப்பாகும். இதனை ஒரு கல்வியில் பல்துறை அறிகைசார் சஞ்சிகையாக வெளிக்கொண்டு வருவதில் அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் ஒவ்வொருவரதும் ஆதரவும் அர்ப்பணிப்பும் எங்களுக்கு அவசியமானது.

எனவே எமது கல்விப் பணிச்செயற்பாடுகளுக்கும் அகவிழியை ஆதர்சனமாக ஆதரிப்போருக்கும் நாம் கூடியவரையிலான ஆக்கங்களைத் தந்து கல்வியியலுக்கான ஓர் புதிய பாதையை திறந்து விடுகிறோம். கல்விச்சமூகம் எவ்வகையான மாறுதல்களை கொண்டு வரவேண்டும்: எதிர்கால கலைத்திட்டமாதிரிகள் எவ்வாறு அமையவேண்டும் என கல்வியியல் ஆய்வாளர்கள் மற்றும் அதனோடு இணைந்த கல்விச் சமூகத்தினரிடமிருந்து கருத்துக்களையும் ஆக்கங் - களையும் எதிர்பார்கிறோம். உங்களது கருத்துக்களும் ஆலோசனைகளும் எங்களை காத்திரமான படைப்புக்களுக்கு இட்டுச்செல்லும். அகவிழியை தொடர்ந்து வாசியுங்கள். உங்களது கல்வியியல்சார் எண்ணக்கருக்களையும் தேவைகளையும் பெரும்பாலும் பூர்த்திசெய்வதில் முன்னின்று உழைப்போம். இது எமது இன்றைய தேவையும் கூட.

வி.எஸ்.இந்திரகுமார்.



**நல்ல ஆசிரியர்**

**ஆசிரியர் ஞானம் உள்ளவராயும், சமூக ஊழல்களை அகற்றும் ஆற்றல் உள்ளவராயும் விளங்க வேண்டும். மனிதனின் கடமைகள் என்ன என்பது பற்றிய தெளிவான அறிவை அவர்கள் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகளைச் சிறந்தவர்களாக உருவாக்குகிறவர்கள் அவர்களாகையால் குழந்தை இழைக்கும் தவறுகளால் ஏற்படும் விளைவுகளைத் தாமே பொறுப்பேற்கும் தன்மையுடையவர்களாக ஆசிரியர் விளங்க வேண்டும்.**

**- ருசோ -**



**அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு. கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி" யின் கருத்துக்கள் அல்ல.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி மதிப்பீடு – எண்ணக்கரு – மதிப்பீட்டின் தேவை சிறப்புப் பண்புகள்

**கணபதி சாம்பசிவம்**
கல்வி முகாமைத்துவ ஆலோசகர்



கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் மதிப்பீடு ஓர் முக்கிய அங்கமாகும். மதிப்பீட்டு நடவடிக்கையானது ஆசிரியர்களது கற்பித்தல் திறனை விருத்தி செய்வதுடன் மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளையும் வளம்படுத்துகிறது. மதிப்பீடு ஓர் தொடர் நடவடிக்கையாகும். கல்வி நிர்வாக வியலாளர்களுக்கு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை (Educational Programmes) தயாரிக்க உதவுகின்றது. பெற்றோர்களுக்கு தமது பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிட உதவுகின்றது. எனவே பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மதிப்பீடு பற்றிய பல்வகை அம்சங்களையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

**அளவிடுதல் செயற்பாங்கு** (Measurement Proess)

கல்வியின் அளவிடுதல் என்பது கற்றல் உள்ளடக்கம், கற்றல் சாதனங்கள், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் தன்மையை அவற்றின் வேறுபாடுகளை பெரும்பாலும் எண் பரிமான அடிப்படையில் (Numerical Values) அளவிடும் நடவடிக்கையாகும். அளவிடும் அளவு கோல்கள் தேவைக்கேற்ப, அவற்றின் பொருத்தப் பாட்டிற்கேற்ப மாறுபடும். அளவிடுதல் நடவடிக்கையானது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நூற்றுக்கு நூறு வீதம் வழுவாமையானது (accuracy) எனக் கூறமுடியாது. எமது நரம்புத் தொகுதியிலுள்ள நாளம் ஒன்றின் சுற்றளவினை அளவிடுவதும் எமது உயரத்தை அளவிடுவதிலும் வேறுபாடுகள் இருக்கலாம். நாளத்தின் சுற்றளவினை அளவிடுவதற்காக விசேட விஞ்ஞான உபகரணங்கள் பயன்படுத்தப்படுவது மாத்திரமன்றி மிகவும் அவதானத்துடன் அளவிடுவார்கள். இங்கு வழுவாமையானது நூற்றுக்கு நூறு வீதம் பேணப்படுகிறது எனலாம். பயிற்சி மிக்க கண்கள் (Trained Eye) இயல்பாகவே அளவிடும் ஆற்றலுடையவை. அளவீட்டு நடவடிக்கைகள் இரு விடயங்களை உள்ளடக்கியவை.

1. அளவிடுவதற்காக பொருத்தமான அளவுத் திட்டம் ஒன்றினைத் தெரிவு செய்தல் (Selecting a Suitable Scale)

2. தெரிவு செய்யப்பட்ட அளவுத் திட்டத்தினை கொண்டு மாறிகளை அளவிடுதல்

அளவிடுதலானது ஒப்புமை காணல் நடவடிக்கையாகும்.
(Measurement is a process of Comparison)

**அளவீட்டு மட்டங்கள்** (Levels of Measurement)

**01. பெயர் சார்ந்த அளவுத் திட்டம்** (Nominal Scale)

சில பிரமாணங்களுக்கு அமைய வகைப்படுத்தி அளவிடுதல்.

உ+ம் : வகுப்பு மாணவர்களை ஆண், பெண் என்ற பாலடிப்படையில் வேறுபடுத்தி அளவிடும் நடவடிக்கை. பால் அடிப்படையில் வேறுபடுத்திய பின்னர் பெயர்களை அகரவரிசையில் நிரல்படுத்துவார்கள். இது ஓர் இயல்பான முறைசார்ந்த நடவடிக்கையாகும்.

**02. எண்வரிசை அளவுத் திட்டம்** (Ordinal Scale)

எண் பெறுமான அடிப்படையில் வரிசைப் படுத்துதல். மேலிருந்து கீழ்நோக்கியும் கீழிருந்து மேல் நோக்கியும் வரிசைப்படுத்தலாம். மாணவர்களின் உயரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஏறு நிரை, இறங்கு நிரையில் மாணவர்களை வரிசைப் படுத்தும் போது மாணவனுக்கு வரிசையில் எத்தனையாம் இடம் என்பது உறுதிப் படுத்தப்படுகின்றது.

**03. இடைவெளி அளவுத் திட்டம்** (Interval Scale)

எண்சார்ந்த நியமங்களை அடிப்படையாக அல்லது வேறு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு பிரிவுகள், தரங்களின் அடிப்படையில் வேறுபடுத்தி அளவிடுதல் முறையாகும். பாடசாலையில் மெய் வல்லுனர் போட்டிகளின் போது மாணவர்களின் வயது அடிப் படையில் கனிஷ்ட, இடைநிலை, சிரேஷ்ட பிரிவென வகுத்தல். வித்திகள், புள்ளிகளின் அடிப்படையிலும் மாணவர்கள் தரம் பிரிக்கப் படுவதுமுண்டு.

**04. கலப்பற்ற அளவுத் திட்டம் அல்லது தனி அளவுத்திட்டம்** (Absolute Scale)

தெரிவு செய்யப்பட்ட அலகு ஒன்றினைப் பூரணமாக பயன்படுத்தி அளவிடும் முறையாகும். இவ் அலகானது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நியம அலகாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வல்லுனர் போட்டிகளின் போது மற்றும் ஏனைய அளவிடல் சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் கலப்பற்ற அளவு முறையே பயன்படுத்தப்படுகின்றது. எனவே தேவையின் நிமித்தம் பல்வகை அளவுத் திட்டங்கள் அளவிடுதலுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

மாறுபடும் உருக்களை மாறிகள் (variablus) என்று அழைப்பார்கள். மாறிகள், பண்புசார்ந்த மாறிகள், அளவு சார்ந்த மாறிகள் என இருவகைப்படும். அளவுசார்ந்த மாறிகளை அளவிடுதல் சுலபம். (உ+ம் நிறை, உயரம் என்பன) பண்புசார்ந்த மாறிகளை அளவிடுவதற்கு சில நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல் அவசியமாகிறது. உ+ம் மாணவர்களது விவேகம் மற்றும் கல்விசார் தேர்ச்சிகளை அளவிடுதல் மிகவும் கடினமான கைங்கரியமாகும். இதற்கு இரு படிமுறைகள் உள்ளன.

1. அவதானித்தல் (Observation)
2. அளவு மதிப்புரு கொடுத்தல் (Quantification)

**அளவிடுதலும் மதிப்பீடும்** (Measurement and Evaluvation)

கல்வியில் அளவிடுதல் எனக் கூறும் பொழுது பெரும்பாலும் தரவுகளைச் சேகரிப்பதையே கருதுகிறது. உ+ம் மாணவர்கள் பரீட்சையில் பெறுகின்ற சாதனைப் புள்ளிகள், பரீட்சை ஒன்றை தயார் செய்து மொத்தப் புள்ளிகள் 100 என்று நிர்ணயம் செய்து மாணவனை பரீட்சைக்குட்படுத்துகின்றோம். இப் பரீட்சையில் மாணவன் 75 புள்ளிகள் பெறின் 100க்கு 75 புள்ளிகளைப் பெற்றான் எனும் அளவிடுதல் நடவடிக்கை ஒன்றையே நாம் மேற்கொள்கிறோம்.

மதிப்பீடு என்பது மாணவனது ஆற்றுகையின் பெறுமானத்தை தீர்மானிப்பதாகும். மாணவன் ஒருவன் 100க்கு 85 புள்ளிகளைப் பெறும் பட்சத்தில் இவ் எண்ணிக்கைப் புள்ளிகளை மாத்திரம் அடிப்படையாக வைத்துக்கொண்டு மாணவனின் ஆற்றுகை மட்டத்தினை கணித்துவிட முடியாது. மாணவனது பெறுபேற்றுப் புள்ளிகளுடன் ஏனைய சில காரணிகளையும் இணைத்துப் பார்க்க வேண்டும். மாணவனது ஆற்றல், வினாத்தாளின் தன்மை, பாடம் போன்ற புற அம்சங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எனவே மாணவன் பெற்ற எண் பெறுமானங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மாணவனின் ஆற்றுகை பற்றிய தீர்மானத்திற்கு வந்துவிட முடியாது.

எனவே மதிப்பீடு என்பது அளவீட்டுடன் அதன் பெறுமானமும் இணைந்த நடவடிக்கையாகும். மதிப்பீடு எண்ணளவை நடவடிக்கை மட்டுமன்றி தர நிர்ணயத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் நடவடிக்கையாகும்.

**கல்வியில் மதிப்பீட்டின் பங்களிப்பு**

மதிப்பீடு கல்வியில் காத்திரமான பங்களிப்பினை வழங்குகின்றது. கற்றல் நடவடிக்கைகளுக்கான அறிவுறுத்தல் குறிக்கோள்களை வகுக்கவும், பல்வகைக் கற்பித்தல் அணுகுமுறைகளுக்கான வியூகங்களை வகுக்கவும் கல்வியில் நிர்வாகிகளுக்கு கல்விக் கொள்கைகள், கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கவும் உதவுகின்றது. கலைத்திட்ட மறுசீரமைப்பிற்கும் மற்றும் பெற்றோர், சமூகம், மாணவர்களுக்கு வகை கூறவும் மதிப்பீடு உதவுகின்றது.

இவற்றை விரிவுபடுத்தின் - கற்பித்தலில் கற்பித்தல் நடவடிக்கைகளின் பயன் உறுதித்தன்மையை உறுதி செய்கின்றது. கற்பித்தல் உத்திகள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் நுட்பங்கள் ஆகியவற்றின் பிரயோகங்களையும் தீர்மானிக்கின்றது. ஆசிரியர்களுக்கு அவர்களின் கற்பித்தல் செழுமையாக்க நடவடிக்கைகளை செம்மை செய்வதற்கான பின்னூட்டலையும் வழங்குகின்றது.

**கலைத்திட்டம்:**

கலைத்திட்ட மறுசீரமைப்பிற்கு உதவுகின்றது. அத்துடன் பாட நூலின் ஆக்கம், விடயப்பரப்பு போன்றவற்றில் எவ்வகைத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். எவ்வகையான குணநல உள்ளீடுகளை வழங்க வேண்டும் ஆகியவையும் மதிப்பீட்டின் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது.

**சமூகம்:**

எமது நடைமுறை கலைத்திட்டம் சமூகத்தின் அபிலாசைகளை பூர்த்தி செய்கின்றதா? சமூகம் எதிர்பார்க்கும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கின்றதா? என்ற விளக்கங்களுக்கும் மதிப்பீட்டின் மூலமே விடைகாண முடியும்.

**பெற்றோர்கள்:**

தமது பிள்ளைகளின் கல்விசார்ந்த நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை பாடசாலை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மூலமே அறியும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பிள்ளைகளின் கல்வியில் தம்பால் சார்ந்துள்ள பொறுப்புக்கள், பங்களிப்புக்களை அவர்களுக்கு உணர்த்துகின்றன.

**மதிப்பீடு – வரைவிலக்கணம்**

மதிப்பீடு பற்றிய வரைவிலக்கணங்கள் இருந்த போதிலும் சி.ஈ.பீபி (C.E.BEEBY) அவர்கள் முன்வைத்த வரைவிலக்கணமே மிகவும் பொருத்தமானது எனக் கருதப்படுகின்றது. நிரற்படுத்தப்பட்ட தரவுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சரியான பொருள் விளக்கம் கண்டு பெற்ற முடிவுகளின் பெறுமானத்தின் அடிப்படையில் ஓர் தீர்மானத்திற்கு வந்து பொருத்தமான காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகும்.

**1. மதிப்பீட்டிற்கான தரவுகள், தகவல்கள்**

மதிப்பீட்டிற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் பெறும் தரவு தகவல்கள் மிகமுக்கியம். ஏனெனில் தரவு, தகவல்களின் அடிப்படையிலேயே நாம் தீர்மானங்களை மேற்கொள்ளவிருக்கின்றோம். எனவே தரவுகளின் வழுவற்ற தன்மை மிக முக்கியம்.

**2. பொருள் விளக்கம் காணல்**

பொருள் விளக்கம் கடினமான நடவடிக்கையாகும். ஊகங்கள் அகவயநோக்கு ஆகியவற்றிற்கு இடம் கொடுக்கக் கூடாது. இவை செல்வாக்கு செலுத்துமாயிற் தவறான முடிவுகளுக்கு வர வாய்ப்புண்டு.

உ+ம் மாணவர்களது குறைந்தமட்ட பரீட்சைப் பெறுபேறுகளுக்கு பல்வகைக் காரணிகளின் செல்வாக்குகள் காரணமாகலாம். பாடநூல்கள் இல்லாமை, உரிய காலத்தில் கிடைக்காமை, தரக்குறைவான கற்பித்தல் நடவடிக்கைகள் ஆசிரியர்களுக்கான வழிகாட்டிக் கைநூல்கள் கிடைக்காமை போன்ற பல காரணிகள் இருக்கலாம்.

**3 தீர்மானம் ஒன்றிற்கு வரல்**

கல்வி நடவடிக்கைகளின் பெறுமானத்தை எடைபோட்டு அறியும் ஆற்றல் உள்ளவர்களால் மட்டுமே ஓர் சிறந்த தீர்மானத்திற்கு வர முடியும்.

**4. காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்ளல்**

தீர்மான நடவடிக்கைகளை இரு கோணங்களில் நோக்கலாம்.

1. செயல் நடவடிக்கை கருதிய தீர்மானம்
2. செயல் நடவடிக்கை கருதாத தீர்மானம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி மதிப்பீட்டு நடவடிக்கைகள் செயல் நடவடிக்கைகள் கருதிய தீர்மானமாகவிருப்பதே சாலச் சிறந்ததும் அவசியமுமாகும்.

### சிறந்த மதிப்பீட்டின் பண்புகள்

**1. முறைமைத் தகுதி** (Validity)



மதிப்பீட்டு நடவடிக்கைகள் எதனைக் குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளப்படு - கின்றதோ அவற்றைச் சரி வர வெளிக் கொணரவேண்டும் . உண்மைகளை வெளிக் கொணரக் கூடிய கருவிகளைப் பயன்படுத்தி விடயங்களைத் துல்லியமாக எடுத்துக் காட்டும் தன்மையுடையனவாகஇருக்க வேண்டும். நாம் தயாரிக்கும் சோதனைக் கருவிகள் சில வேளைகளில் எதிர்பார்க்கும் விபரங்களை வெளிக்கொணர தவறிவிடுகின்றன. நாம் தயாரிக்கின்ற பல பரீட்சை வினாத்தாள்கள் மாணவன் மனனம் செய்ததை அல்லது ஞாபகத்தில் வைத்திருப்பதை மீட்டுப் பார்க்கும் (recall) தன்மை கொண்டவையாக இருக்கின்றதேயல்லாமல் மாணவனின் யதார்த்த தர்க்கிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவனவாக அமைவதில்லை. நாம் தயாரிக்கின்ற பரீட்சைக் கருவிகளானது மாணவர்களிடமிருந்து எவற்றை வெளிக்கொணர விளைகின்றோமோ அவற்றை வெளிக்கொணர வேறு அம்சங்களைப் பரிசோதிக்குமாயின் அது முறைமைத் தகுதியற்றதாகும். வினாக்களைத் தயாரிக்கும் பொழுது பொருள் தெளிவின்மை, அல்லது இரு பொருள் அர்த்த சொற்பிரயோகங்கள் இந்நிலைக்கு எம்மை இட்டுச் செல்லும் வாய்ப்புக்களுண்டு.

**2. நம்பகத்தன்மை** (Reliability)

பரீட்சிக்கும் கருவியானது மாறா மதிப்பளவை (constant) கொண்டதாக விளங்க வேண்டும். விடைத்தாள்கள் வெவ்வேறு மதிப்பீட்டாளர்களின் கைகளுக்குச் செல்லும் பொழுது இவை பெறுகின்ற மதிப்பீட்டுப் புள்ளிகளின் மாறாத் தன்மை பேண வேண்டும். இவ்வகையான வினாத்தாள்கள் தயாரிப்பது கடினமான கைங்கரியமாகும். வினாத்தாள்கள் மாறா ஒப்பியைபு நிலையுடையதாக இருக்க வேண்டும். ஒரு விடைத்தாள் வெவ்வேறு இரு பரிசோதகர்களால் பரீட்சிக்கும் பொழுது வேறுபாட்டின் இடைவெளி 75% ம் 70% மாகயிருக்குமாயின் இவ்வித்தியாசம் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாகும். இடைவெளியின் விரிசல் அதிகளவாக இருக்குமாயின் அவ்வினாத்தாள் நம்பகத்தன்மைத் தகுதியை இழக்கின்றது. முறைமைத் தகுதி பரீட்சை எப்பொழுதும் நம்பகத்தன்மையுடையதாக இருக்கும். ஆனால் நம்பகத்தன்மை பேணும் பரீட்சைகள் எல்லாம் முறைமைத் தகுதி வாய்ந்தவை அல்ல.

**3. செயல்முறைக்குகந்தவை** (Practicability)

முறைமைத் தகுதி, நம்பகத்தன்மை ஆகியவற்றின் சிறப்புத் தகுதி கொண்ட மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நிதி, நேரம் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய வளங்கள் பெருமளவில் தேவை. எனவே தான் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மெய்யியல்பு, வினைத்திறன், நடைமுறைச் சாத்தியமானவையாக அமைய வேண்டும்.

**4. தெளிவுத் தன்மை** (Fairness)

மதிப்பீடு பற்றிய விளக்கத்தை பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டும். பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை நடவடிக்கை பற்றி தெளிவுபடுத்த வேண்டும். பரீட்சை வினாத்தாளின் தன்மை, அமைப்பு, புள்ளி வழங்கல் போன்ற விபரங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

உ + ம் பல்தேர்வு வினாக்களின் தண்டனைப் புள்ளிகள் வழங்கும் முறை (Negative score system)

**5. பயனுடைமை** (Use Fulness)

மதிப்பீடு மாணவர்களுக்கு பயனுடையதாக இருக்க வேண்டும். மதிப்பீட்டின் ஊடாக பின்னூட்டல் வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும். மாணவர்களது பலம் பலவீனங்களை நிரூபிக்கக் கூடியதாக அமைய வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தமது கற்பித்தல் நடவடிக்கைகளை திட்டமிடவும் மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்குகின்ற இடர்களை அறிவதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றது.

### கற்பித்தலில் அளவிடுதல் மதிப்பிடுதல் பங்களிப்பு

(The value of measurement and evaluation in Teaching)

இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட சில பிரதான செயற்பாடுகளுக்கு முதலில் விளக்கம் கொடுத்தல் அவசியமாகும். வகுப்பறைக் கற்பித்தல் நடவடிக்கைகளின் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பெரும்பாலும் பயன் படுத்தப்படுவது சோதனை என பெயரிட்டழைக்கப்படும் தேர்வாய்வாழும் ஆட்சிப்பரப்பொன்றின் நடத்தைக் கோலத்தை அளவிடும் கருவிகளைக் கொண்டதே சோதனையாகும். அளவிடுதல் என்பது எண்ணியலான பெறுமான விபரணத்தை (numerical description) பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை - யாகும். ஒருவரிடமுள்ள ஆட்சிப்புல அளவினை எண்பரிமாணத்தில் அளவிடுதலையே குறித்துக்காட்டுகின்றது. ஆட்சிப் புலத்தின் நிறை கொள்ளளவு அளவினை தொகை ரீதியில் (how much) கணக்கிட்டுக் காட்டுகின்றது.

மதிப்பீட்டு நடவடிக்கையை நோக்குவோமாயின் வேறும் சில சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. உண்மைத் தரவுகளின் பகுப்பாய்வில் பொருள் விளக்கம் கண்டு சிறந்த தீர்மானத்திற்கு வரும் நடவடிக்கையாக மதிப்பீடு அமைகின்றது. அறிவுறுத்தல் குறிக்கோள்களின் தாக்கம் எந்தளவிற்கு மாணவர்களிடம் சென்றடைந்திருக்கின்றது என்கின்ற பண்புசார் விருத்தியை (How good) எடுத்துக்காட்டுகின்ற சிறப்பம்சம் பொருந்திய நடவடிக்கையாகும்.


உதாரணத்திற்கு மாணவர்களிடம் விஞ்ஞானபாடம் சம்பந்தமாக ஒரு தொகுதி வினாக்கள் அடங்கிய வினாத்தாள் ஒன்றினைத் தயாரித்து குறிப்பிட்ட நேரத்திற்குள் விடையளிக்குமாறு வழங்குகின்றோம். பரீட்சை வினாத்தாளின் விடைகளைப் பரிசீலனை செய்து சரியானவற்றிற்கு அவற்றின் புள்ளிப் பெறுமான அடிப்படையில் புள்ளிகளை வழங்கி நூற்று வீதத்தில் அளவிடுகின்றோம். அளவீடு பரீட்சை வினாத்தாளின் கனதி (weightage) மற்றும் கடினத்தன்மை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அளவீடுகளின் பெறுமானத்தின் அடிப்படையில் மாணவர்களின் கற்றல் மேம்பாடு இடம்பெற்றிருக்கின்றது என்ற முடிவிற்கு வருகின்றோம்.

எனவே மேற்கூறிய வினாக்களின் அடிப்படையில் நோக்குகையில் பரீட்சை என்பது பல்வகை வினாக்கள் அடங்கிய ஒரு தொகுதி. அளவீடு என்பது புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைய வழங்கப்படும் பெறுமான எண்களின் தொகுதி. மதிப்பீடு என்பது மேற்கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் திறனாய்வு நடவடிக்கையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவீடு என்பது எண் மதிப்புக்களின் அடிப்படையில் கணிக்கப்படுவது.
உ+ம் கந்தசாமி என்ற மாணவன் 40 பின்னக் கணக்குகளில் 35 பின்னக் கணக்குகளுக்கு சரியான முறையில் தீர்வுகாணும் போது இங்கு அவனது எழுத்து துப்பரவுத்தன்மை ஆகியன கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இவ் அம்சங்கள் அளவிடுதலுக்கு உட்படுத்தப படுவதில்லை. ஆனால் மதிப்பீட்டு நடவடிக்கையானது அளவிடுதலுக்கு உட்படுத்தாத அம்சங்களையம் கவனத்தில் வாங்கியே ஓர் பெறுமானத் தீர்வுக்கு (Value Judgement) வருகின்றது. பின்வரும் வரைபடம் இதனை விளக்குகின்றது.

புறப்பொருள் சார்ந்த வினாக்கள் பெரும்பாலும் அறிவுத் தொகுதியை அளவிடச் சிறந்தது. இவ்வினாக்களைக் கொண்டு விளக்கம், பிரயோகம், ஆகியவற்றையும் அளவிட முடியும். நியாயப்படுத்தல், ஒப்பீட்டு ஆராய்வு, ஒழுங்கமைப்பு என்பவற்றின் பெறுமானத்தை புறப்பொருள் சார்ந்த வினாக்கள் மூலம் அளவிட முடியாது. இவற்றை அளவிடுவதற்கு நாம் கட்டுரை வகைப் பரீட்சை (essay Type Questions) செயல்முறை ஏற்பாடுகள் (Projects) மற்றும் நியாயப்படுத்தல் நியமங்களின் மூலமே அளவிட முடியும்.




மேற்காணும் விளக்கமானது மதிப்பீடு மாணவர்களது கற்றல் மேம்பாடு அவர்களது முழுமையான விருத்தி கருதிய ஒன்றிணைந்த செயற்பாடாகும். என்பதை உணர்த்துகிறது.

### மதிப்பீட்டின் பொதுவிதிகள்

1. மாணவனின் எவ் ஆட்சிப் புலத்தை மதிப்பிடுவது என முதலில் தீர்மானிப்பது மிக முக்கியம். மாணவர்களின் காத்திரமான கற்றல் நடவடிக்கைகளை அளவிட வேண்டுமாயின் முதலில் நாம் அளவிட முனையும் கற்றல் வெளிப்பாடுகள் எவை என்பதை தீர்மானித்து அவை எவ்வெவ் ஆட்சிப் புலத்தை சார்ந்தவை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

2. நாம் எடுத்துக்கொண்ட கற்றல் வெளிப்பாடுகளை அளந்தறிவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களை தேர்ந்தெடுத்தல் முக்கியமாகும். இவ் நுட்பங்கள் அளவிட முனையும் விடயம், திட்பநுட்பம் (accuracy) சூழலிசைவு (convenience) ஆகியவற்றை கவனத்திற்கொண்டே தெரிவு செய்ய வேண்டும். நாம் வெளிக்கொணர முனையும் கற்றல் வெளிப்பாடுகளுக்கும் அதற்காக தயாரிக்கும் சோதனைக் கருவிகளுக்குமிடையே நெருங்கிய பொருத்தப்பாடு அவசியம்.

3. பல்வகை வேறுபாட்டுத் தன்மை கொண்ட மதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்துதல் வேண்டும். இங்கு கருத்து வெளியீடுகளும் விடை ஒழுங்கமைப்புமே முக்கியமானவையாக கருதப்படுகின்றன. அவதானிப்பு நுட்பங்கள் மாணவர்களது பல்வகைத் திறன்களையும் நடத்தைகளையும் அளவிடுவதற்கு பொருத்தமானவையாகும்.

4. மதிப்பீட்டு நுட்பமாதிரிகளைப் பயன்படுத்தும் போது அவற்றின் வரையறைகளைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். அல்லாவிடின் மாதிரித் தவறுகள் (Sampling errors) ஏற்பட வாய்ப்புண்டு. மாணவனின் சமூகப் பொருத்தப் பாட்டினை அளவிடுவதற்காக தயாரிக்கப் பட்ட அவதானிப்புக் கருவிகள் மூலம் மாணவனின் பண்புத்திறன் (Traits) அல்லது தோற்றக் கூறை அளவிடல் தவிர்க்கப் படவேண்டியது. மாணவனின் தகுதி, திறமை, சாதனை ஆகியவற்றை அளவிடும் சோதனைக் கருவிகளுக்கும் அவதானிப்பு, சுயமதிப்பீட்டுக் கருவிகளுக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு.

5. மதிப்பீடு என்பது குறிக்கோள் கருதியதாகவும் அக்குறிக்கோள்களைப் பூர்த்தி செய்யும் செயல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாதனமாகவும் அமைய வேண்டும். அதைவிடுத்து குருட்டுத்தனமான வகையில் தரவுகளைச் சேகரிப்பதும் அவை என்றோ ஒரு நாள் உதவும் என்ற நிலைப்பாட்டில் பாதுகாத்து வைப்பதும் நேரத்தையும் முயற்சியையும் வீணடிக்கும் செயலாகும். மதிப்பீடு என்பது முடிவுகளை மேற்கொள்ள கையாளப்படும் சாதனமேயன்றி அதுதான் இறுதி நடவடிக்கை என்ற நிலைப்பாடல்ல.

> கல்வி என்பது மனப்பண்பு, செயற்பண்பு, மெய்ப்பண்பு ஆகியவற்றில் உதித்த மனிதப் பண்பு
>
> \- வள்ளுவப் பெருந்தொகை

> கல்வியென்பது சமூகப் புனரமைப்புச் சாதனம். அது பயனுள்ளதாக அமைதல் வேண்டும், சமூகத்தில் உள்ள குறைபாடுகள் கல்வியின் மூலம் தீர்க்கப்படலாம்.
>
> \- ஜோன் டுயி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவாகக் கற்பித்தல், குழுமுறைக் கற்பித்தல் ஓர் ஒப்பியல் நோக்கு

அபூபக்கர் நளீம்
வருகைதரு விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## அறிமுகம்

கற்பித்தல் முறைகளில் வகுப்புக்கு பொதுவாகக் கற்பித்தல், குழு முறையில் கற்பித்தல் ஆகிய இரண்டு முறைகளும் முக்கியமானவையாகும். மிகப்பழமை வாய்ந்த கற்பித்தல் முறையான பொதுவாகக் கற்பிக்கும் முறை இன்று பலராலும் விமர்சிக்கப்படுகின்ற போதிலும் இம்முறையை அவ்வப்போது பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளதால் இன்றும் நடைமுறையிலுள்ளது.

குழுமுறைக் கற்பித்தலைப் பொறுத்தவரையில் தற்காலத்தில் கல்வியியலாளர்களால் வலியுறுத்தப் படுகின்ற கற்பித்தல் முறையாக இது கருதப்படுகின்றது. மாணவர் மைய அடிப்படையிலான கற்பித்தல் முறைகளில் ஒன்றாக இதனை அடையாளப்படுத்தலாம்.

வகுப்புக்கு பொதுவாகவும், குழு முறையிலும் கற்பிக்கும்போது இம்முறைகளுக்கேற்ற வகையில் ஆசிரியரும் மாணவர்களும் தங்களது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் கற்றல், கற்பித்தல் செயற்பாடு வினைத்திறனுடையாதாக மாறும். இந்தவகையில் இக்கற்பித்தல் முறைகளின் போது ஆசிரியரும் மாணவர்களும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை தனித்தனியே நோக்குவோம்.

### பொதுவாக கற்பிப்பதில் ஆசிரியரின் பொறுப்புக்கள்

பொதுவாக கற்பிக்கும்போது ஆசிரியர் பல்வேறு பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற வேண்டியுள்ளது. பொதுவான கற்பித்தலில் ஆசிரியரின் முக்கிய கடப்பாடுகளாக பின்வருவனவற்றை அடையாளப் படுத்தலாம்.

#### பாடத்தைத் திட்டமிடல்.

குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்னர் பாடக்குறிப்பு, கற்பித்தல் உபகரணம், போன்றவற்றை பொதுவான கற்பித்தலுக்கேற்ற வகையில் ஆசிரியர் திட்டமிட்டுக் கொள்வது அவசியமாகும்.

#### வகுப்பறை முகாமைத்துவத்தைப் பேணுதல்.

பொதுவாக கற்பிக்கின்ற போது மாணவர்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து விரிவுரை முறையே பெரும்பாலும் பயன்படுத்தப்படும். அப்போது மாணவர்களின் கவனத்தை தன்பக்கம் ஈர்க்க வைத்து வகுப்பறை முகாமைத்துவத்தை பேணுவதற்கு ஆசிரியர் முயற்சிக்க வேண்டும். அப்போது தான் கற்றல் கற்பித்தல் வெற்றிகரமாக அமையும் இதற்காக அடிக்கடி மாணவர்களிடம் சிறு வினாக்களைக் கேட்டல், கட்புலத் தொடர்பை (Eye contact) மேற் கொள்ளுதல் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தலாம்.

#### எல்லா மாணவர்களையும் கருத்திற் கொண்டு கற்பித்தல்

எல்லா மாணவர்களுக்கும் விளங்கும் வகையில் சத்தமாகவும் நல்ல வார்த்தைப் பிரயோகத்துடனும் கற்பிக்க வேண்டும். அத்தோடு வகுப்பிலுள்ள மீய்த்திறன் கூடிய மாணவர்கள் மெல்லக் கற்போர் ஆகிய எல்லா மாணவர்களின் நிலமையையும் கருத்திற் கொள்ள வேண்டும். பட அட்டைகள் போன்றவற்றை காட்சிப் படுத்தும் போது பின் வரிசையிலுள்ள மாணவர்களுக்கும் தெரியக்கூடிய விதத்தில் காட்சிப் படுத் - துவதுடன் அவற்றைப் பெரிதாக வரைவதும் அவசியம் ஆகும்.



#### மாணவர்களின் கவனத்தையும் உற்சாகத்தையும் கற்றலின் பக்கம் அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

மாணவர்கள் கற்றலில் ஆர்வம் காட்டக்கூடியவிதத்தில் வகுப்பிற்கு பொதுவாக கற்பிக்கின்ற ஆசிரியர் கவர்ச்சிகரமாக கற்பித்தலை அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்காக நவீன கற்பித்தல் சாதனங்களான பல்லூடகக் கருவி (Multimedia) போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க நேரம் ஒதுக்குதல்.

வகுப்பிற்கு பொதுவாக கற்பிக்கும் போது மாணவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். பொதுவாக கற்பிக்கின்ற பொழுது மாணவர்களுக்கு சில சந்தேகங்கள் ஏற்படலாம். எனவே உங்களுக்கு எவை விளங்கவில்லை சந்தேகங்கள் ஏதுமுண்டா? என்று கேட்டு அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும்.

பொருத்தமான கற்பித்தல் சாதனங்களை சரியாக பயன்படுத்துதல்.

பொதுவாக கற்பிக்கும்போது பாடத்தினை சிறப்பாக மாணவர்களுக்கு விளக்குவதற்கு பொருத்தமான கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்த வேண்டும். அதிலும் அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதும் முக்கியமாகும். உதாரணமாக கரும்பலகையைப் பயன்படுத்தும்போது அதனை எல்லா மாணவர்களுக்கும் தெரியக்கூடிய விதத்தில் வைத்தல், ஒளித்தெறிப்பின் மூலம் கண்களுக்குப் புலப்படாமல் இருப்பதைக் கவனித்தல், பெரிதாக எழுதுதல் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களின் அடைவை மதிப்பிடல்.

கற்பித்த பாடப்பரப்பினுள் மாணவர்கள் எந்தளவு அடைவினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதனை பொதுவான கற்பித்தலுக்கேற்ற முறைகளினூடாக மதிப்பிடல் வேண்டும்.

பொதுவான கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் பொறுப்புக்கள்

பொதுவான கற்பித்தல் இடம்பெறும் போது மாணவர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியாக நிறைவேற்றும் போதே பாடத்தில் சிறந்த அடைவைப் பெற்றுக் கொள்ளமுடியும். இந்தவகையில் மாணவர்களின் கடப்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அமைதியைப் பேணுதல்.

ஆசிரியரின் கற்பித்தலுக்கு இடைஞ்சல் விளைவிக்காத வகையில் அமைதியைக் கடைபிடிப்பது மாணவர்களது பொறுப்பாகும். வகுப்பறையில் மாணவர்களின் சத்தம் அதிகரிக்கின்ற போது ஆசிரியரின் கற்பித்தல் வினைத்திறனற்றதாகிவிடும்.

கற்பித்தலில் கவனம் செலுத்துவதுடன் ஊக்கத்துடன் ஈடுபடல்.

மாணவர்கள் கற்றலில் உற்சாகமாக ஈடுபடுவதோடு ஆசிரியர் கூறும் விடயங்களை மிக அவதானமாக செவிமடுத்து கிரகித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் சரியான விதத்தில் பாடத்தை விளங்கிக் கொள்ளமுடியும்.

ஆசிரியரின் கட்டளைகளுக்கேற்ப செயற்படுதல்.

ஆசிரியரின் கட்டளைகளை மதித்து அதற்கேற்ற விதத்தில் செயற்படுவது மாணவர்களின் பொறுப்பாகும். உதாரணமாக "அமைதியாக இருங்கள்" என்று ஆசிரியர் கூறும்போது அல்லது சிலரை முன்னுக்குவருமாறு அழைக்கும்போது மாணவர்கள் கட்டளைக்கேற்ப துலங்கலைக் காட்ட வேண்டும்.

வினாக்களுக்கு விடையளித்தல்.

எழுத்து மூலமாக அல்லது வாய்மொழி மூலமாக ஆசிரியர் வழங்கும் வினாக்களுக்கு மாணவர்கள் தங்களால் இயன்றளவு சிறப்பாக விடையளிக்க வேண்டும் அப்போதுதான் ஆசிரியரால் சிறப்பாக கணிப்பிட முடியும்.

குழுமுறைக் கற்பித்தலில் ஆசிரியரின் பொறுப்புக்கள்

பாடத்தை திட்டமிடுதல், பொருத்தமான கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துதல், வகுப்பறை முகாமைத்துவத்தைப் பேணுதல், மாணவர்களின் கவனத்தை கற்றலின் பக்கம் ஈர்த்தல், மாணவர் அடைவை மதிப்பிடுதல் போன்ற விடயங்களுடன் குழுமுறைக் கற்பித்தலில் பின்வரும் கடமைகளை ஆசிரியர் நிறைவேற்ற வேண்டும்.

குழுக்களை சரியாகப் பிரித்தல்.

உரிய பாடத்தினைக் கற்பிப்பதற்கு பொருத்தமான விதத்தில் மாணவர் எண்ணிக்கை,நேரம்,மாணவர்களின் தன்மை போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு பொருத்தமான முறையில் மாணவர்களை குழுக்களாக்க வேண்டும்.

குழுக்களை கண்காணித்தலும் வழிநடத்தலும்.

குழுக்கள் செயற்பாட்டிலே ஈடுபடும்போது ஆசிரியர் ஓரிடத்தில் நிலைத்திருக்காது ஒவ்வொரு குழுவின் அருகிலும் சென்று உரிய இலக்கை அடைய குழுக்களை வழிநடத்துவதுடன் அவற்றை கண்காணிக்கவும் வேண்டும்.

குழச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்

குழுச்செயற்பாடு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அதுபற்றிய விளக்கம், அதற்கான வரையறைகள், நிபந்தனைகள் என்பனவற்றை ஆசிரியர் மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

குழுக்களுக்கேற்ற செயற்பாடுகளை வழங்குதல்.

ஒவ்வொரு குழுவினதும் அளவு, தன்மை என்பனவற்றைப் பொறுத்து அதற்கேற்ற வகையில் குழுச்செயற்பாடுகளை வடிவமைத்து வழங்குவது ஆசிரியரின் கடப்பாடாகும்.

குழு முன்வைத்தலை நெறிப்படுத்துதல்.

ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடுகளை எல்லா மாணவர்களும் அறியும் விதத்தில் முன்வைக்க வேண்டும். இதன்போது சரியான விதத்தில் முன்வைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும்.

மாணவர்களுடன் கலந்தாலோசித்து முடிவுரை வழங்குதல்

குழுக்களின் முன்வைப்புக்கள் முடிவடைந்ததும் மாணவர்கள் கலந்துரையாடி மேலதிக விளக்கங்களை வழங்கி, அவர்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து, முடிவுரை வழங்கி, பாடத்தை முழுமைப்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுமுறைக் கற்பித்தலில் மாணவர்களின் பொறுப்புக்கள்

மேலுள்ள பொதுவான கற்பித்தலின் போதுள்ள பொறுப்புக்களுடன் குழுமுறைக் கற்பித்தலின் போது மாணவர்கள் பின்வரும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும்.

குழுவுடன் இணைந்து செயற்படல்.

தான் சார்ந்துள்ள குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டை சரியாகச் செய்து முடிக்க குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவனும் செயற்படுவது அவசியமாகும். இல்லையேல் குழுமுறைக் கற்பித்தல் பயனளிக்காது.

ஆசிரியரின் குழுக்களுக்கான அறிவுறுத்தல்களை மீறாதிருத்தல்.

ஒவ்வொரு குழுவுக்கும் ஆசிரியரால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை அக்குழு மாணவர்கள் பின்பற்றுவதுடன் அவற்றை மீறிச் செயற்படாதிருத்தல் மாணவர்களின் பொறுப்பாகும்.

குழுத்தலைவரை தெரிவுசெய்தலும் முடிவினை முன்வைத்தலும்.

குழுக்கள் தங்களுக்குள் ஒரு தலைவரை நியமித்துக் கொள்வதுடன் குழுச்செயற்பாட்டின் முடிவினை உரிய நேரத்தினுள் சிறப்பாக முன்வைக்க வேண்டும்.

ஆசிரியருடன் கலந்தாலோசித்து இறுதி முடிவுக்கு வருதல்

ஆசிரியரால் மேலதிகமாக வழங்கப்படும் விளக்கத்துடன் தமது சந்தேகங்களையும் வினவி ஆசிரியருடன் கலந்துரையாடி இறுதி முடிவுக்கு மாணவர்கள் வர வேண்டும்.

பொதுவாகக் கற்பிப்பதன் அனுகூலங்கள்

பொதுவாகக் கற்பிக்கும் விரிவுரை முறைக்கற்பித்தல் பலரது விமர்சனத்திற்கும் உள்ளாகியிருக்கிறது. இருப்பினும் இம்முறை ஒருசில அனுகூலங்களையும் கொண்டிருப்பதனைக் காணலாம் இதன் அனுகூலங்களாக பின்வருவனவற்றை அடையாளப படுத்தலாம்.

- பெருந்தொகையான மாணவர்களுக்கு கற்பிக்க பொருத்தமானதாக இருத்தல்.
- ஏதாவதொரு தலைப்பை அல்லது பாட அலகை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வதற்கு இதனைப்பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்.

பொதுவாகக் கற்பிப்பதன் பிரதிகூலங்கள்

வகுப்பிற்கு பொதுவாகக் கற்பிக்கின்ற விரிவுரை முறைசார்ந்த கற்பித்தல் பல்வேறு பிரதிகூலங்களைக் கொண்டிருக்கிறது. குழுமுறைக் கற்பித்தலில் அடையப்பெறுகின்ற பல அடைவுகளை இம்முறைக் கற்பித்தலின் ஊடாக அடைந்து கொள்ள முடியாது. எனவேதான் இம்முறைக்கற்பித்தல் பலரது விமரசனத்திற்கும் உள்ளாகியிருக்கிறது. பொதுவாகக் கற்பிப்பதன் பிரதிகூலங்களை பின்வருமாறு நோக்கலாம்.

- வகுப்பறை முகாமைத்துவத்தை மேற்கொள்வது கடினம்.
- ஆசிரியருக்கு பேச்சு, விரிவுரை என்பன அதிகரிக்கும்.
- மாணவர் செயற்பாடு குறைந்தளவிலேயே இருக்கும்.
- மாணவர்கள் உரிய பாடத்தினை விளங்கி விட்டார்களா என்பதை மதிப்பிடுவது கடினம்.
- மெல்லக் கற்போர் கவனிக்கப்படாமல் பின்தங்கும் நிலை அதிகரிக்கும்.
- மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் இருக்காது.
- மாணவர்களின் இயலுமையை அளவிடுதல் கடினமாக இருக்கும்.

குழுமுறைக் கற்பித்தலின் அனுகூலங்கள்

குழுமுறைக் கற்பித்தலின் போது பல்வேறு அனுகூலங்களை ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றுக கொள்ளக்கூடியதாக இருக்கும். அவையாவன

☐ கற்பித்தல் இலகுவாக இருத்தல். குழுமுறைக் கற்பித்தலில் ஆசிரியர் அதிகம் சிரமப்பட வேண்டியதில்லை. மாணவர்களுக்கு செயற்பாடுகளை வழங்கிவிட்டு ஒரு மேற்பார்வையாளர் ஆகவும், வழி காட்டியாகவும், நெறிப்படுத்துபவராகவும் உதவுபவராகவும் ஆசிரியர் இயங்கினால் போதுமானது.

☐ மாணவர்களை இலகுவாக கணிப்பிடவும் அவர்களது ஆற்றல்களை இலகுவாக கண்டறியவும் முடியும். மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களை அவதானித்து இலகுவாக கணிப்பிட முடிவதுடன் அவர்களின் ஆற்றல்களையும் ஆசிரியரால் இலகுவாக இனங்கண்டு கொள்ளமுடியும்.

☐ மாணவர்களின் தன்மைக்கேற்ப கற்பிக்கக் கூடியதாக இருத்தல். ஒவ்வொரு குழுவினதும் இயலுமை, தன்மை, விருப்பம் என்பவற்றை கருத்திற் கொண்டு அதற்கேற்ற வகையில் செயற்பாடுகளைப் பிரித்து வழங்கி கற்றல் கற்பித்தலை இலகுபடுத்தலாம்.

☐ ஆசிரியருக்கு விரிவுரை பேச்சு என்பன குறைவடையும். மாணவர்களை குழுக்களாக செயற்பாட்டில் ஈடுபடுத்துவதால் ஆசிரியர் அதிகம் பேச வேண்டிய தேவை ஏற்படாது. இதனால் ஆசிரியரின் சக்தி வீண்விரயமும் குறைவடையும்.

மாணவர்களின் சார்பில் அடையப்பெறும் அனுகூலங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

☐ மாணவர்களுக்கிடையில் பரஸ்பரம் ஒற்றுமை ஏற்படும்.

☐ குழுவாகச் செயற்படும் பண்பு உருவாகும்.

☐ மெய்த்திறன் கூடிய மாணவர்களிடமிருந்துமெய்த்திறன் குறைந்த மாணவர்கள் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

☐ மாணவர்களின் ஆற்றல் வெளிப்படும்.

☐ மாணவர்களுக்கு அதிக வாய்ப்புக் கிடைக்கும்.

☐ மாணவர்களின் திறன் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ தலைமைத்துவ பண்புகள் உண்டாகும்.

குழுமுறைக் கற்பித்தலின் பிரதிகூலங்களும் சிரமங்களும்

குழுமுறைக் கற்பித்தலின் போது சில பிரதிகூலங்களையும் கண்டுகொள்ள முடிகிறது. அவையாவன

இரைச்சல் அல்லது சத்தம் அதிகம் காணப்படல்.

குழுமுறைக் கற்பித்தலின் போது குழுக்கள் தங்களுக்குள் கலந்துரையாடுவதாலும் சிலர் தேவையற்ற விடயங்களைப் பேசுவதாலும் வகுப்பறையில் அதிக இரைச்சல் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

எல்லா மாணவர்களும் இயங்காமை.

ஒவ்வொரு குழுவிலும் குறிப்பிட்ட சில மாணவர்கள் அக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபட ஏனைய சிலர் இயங்காமலிருப்பதை அவதானிக்கலாம். இதனால் குறிப்பிட்ட சிலர் கற்றுக்கொள்ள வேறுசிலர் கவனமெடுக்காமலிருக்க வாய்ப்பிருக்கிறது.

இடநெருக்கடி.

குழுக்களைப் பிரித்து தனித்தனியே வைப்பதற்கு இடவசதி தேவைப்படும். பெரும்பாலான பாடசாலைகளில் உள்ள வகுப்பறைகள் இடவசதி குறைந்ததாகவே காணப்படுவது பொதுவாக குழுமுறைக்கற்பித்தலில் எதிர்நோக்கப்படுகின்ற ஒரு சிரமமாகும்.

அதிக நேரம் தேவைப்படல்.

குழுக்களைப் பிரிப்பதற்கும் ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டின் முடிவை முன்வைக்கவும் அதிக



நேரம் தேவைப்படும் பிரச்சினையை ஆசிரியர் எதிர் நோக்கலாம்.

எல்லாக் குழுக்களையும் ஒரே நேரத்தில் கண் காணிப்பது சிரமம்.

குழுக்கள் பல இயங்கும் போது ஒரே நேரத்தில் அவர்களைக் கண்காணிப்பதும் அவர்களது தேவைகளை ஒரே நேரத்தில் பூர்த்தி செய்வதும் ஆசிரியருக்கு சிரமமாக இருக்கலாம்.

பிரதிகூலங்களையும் சிரமங்களையும் குறைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகள்

குழுமுறைக் கற்பித்தலில் ஏற்படும் பிரதிகூலங்களையும் சிரமங்களையும் குறைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

குழுச்செயற்பாடுகளை தொடங்குவதற்கு முன்னர் கள விதிகளை(Ground rules)கூறல்.

குழுச்செயற்பாடு ஆரம்பிக்க முன்னர் எவ்வாறு செயற்பட வேண்டும், செய்ய வேண்டிய செயற்பாடுகள் என்ன, அமைதி எவ்வாறு பேணப்பட வேண்டும், போன்ற விடயங்களை ஆசிரியர் குறிப்பிட வேண்டும். இதனால் இரைச்சலையும் சத்தத்தையும் குறைத்துக்கொள்ள முடிவதுடன் வகுப்பறை முகாமைத்துவத்தைப் பேணவும் முடியும்.

இடவசதியை ஏற்படுத்தல்.

குழுச்செயற்பாடுகளுக்கு பெரிய வகுப்பறைகளை தெரிவு செய்யலாம். அல்லது இடவசதியுள்ள இடங்களில் குழுச்செயற்பாடுகளை நடத்தலாம். இதன் மூலம் இடநெருக்கடியை குறைத்துக் கொள்ளலாம்.

தேர்ச்சிகளை நேரத்திற்கேற்ப தேர்ந்தெடுத்தல்.

குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக் கொள்ளக்கூடிய அளவு பாடப்பரப்பிலிருந்து தேர்ச்சிகளை பிரித்தெடுத்து கற்பிப்பதனூடாக நேரம் போதாமையை தீர்த்துக்கொள்ளலாம்.

நன்கு திட்டமிடல்.

முன்கூட்டியே பாடத்தினை நன்கு திட்டமிடுவதினூடாக ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அதற்கேற்ப செயற்படுத்தும் போதும் அதிகநேரம் தேவை எனும் பிரச்சினையை குறைத்துக் கொள்ளலாம்.

குழுக்களை சென்று அவதானித்தல்.

குழுச்செயற்பாடு இடம்பெறும்போது ஆசிரியர் ஓரிடத்தில் நில்லாது ஒவ்வொரு குழுவுக்கருகிலும் சென்று அவதானிப்பதனூடாக எல்லாக் குழுக்களையும் அவதானிக்கவும் அவற்றுக்கு உதவக்கூடியதாகவும் இருக்கும்.

மாணவர்களை அவதானித்து ஊக்குவித்தல்.

மாணவர்கள் யாராவது இயங்காமல் இருக்கிறார்களா என்பதை அவதானித்து, அவ்வாறு இயங்காத மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறான விடயங்களில் ஆசிரியர் கவனம் செலுத்தி குழுமுறை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை அமைத்துக் கொள்ளும்போது அது வெற்றிகரமானதாக அமையுமென்பதில் ஐயமில்லை. பொதுவாக கற்பிக்கும்போது மாணவர்களின் கவனம் உற்சாகம் என்பன குறையாமலிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வகுப்பறை முகாமைத்துவத்தை சரியாகப் பேணுவதற்கு இடையிடையே சிறு சிறு வினாக்களைக் கேட்டல், பல்லூடகக் கருவி (Multi


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Media) போன்ற கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல் ஆகிய அம்சங்களை ஆசிரியர் கடைப்பிடித்தால் இம்முறைக் கற்பித்தலை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களையும் வெற்றிகரமாக்கிக் கொள்ளலாம்.

ஆசிரியரும் மாணவர்களும் தமது கடப்பாடுகளை சரியாக நிறைவேற்றும் போதே இவ்விரு கற்பித்தல் முறைமைகளினூடாக கற்றல், கற்பித்தல் வினைத்திறன் உடையதாக மாறும்.


## உசாத்துணைகள்

01. பாலசுப்றமணியம்.த(2003) "கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள் (விளைத்திறனான ஆசிரியத்திற்கு வழிகாட்டும் நூல்) யாழ்ப்பாணம்.

02. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (2003) கல்வித் தொழிநுட்பம் தொகுதி-1 கற்பித்தல் பொதுமுறைகள், கல்விபீடம், இ.தி.ப., நாவல, நுகேகொட.

03. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்(2003) கல்வித் தொழிநுட்பம் தொகுதி-11 விசேட முறைகள், கல்விபீடம், இ.தி.ப., நாவல, நுகேகொட.

04. அப்துல் லத்தீப்.எம்.ஐ. (2007) "பரிகார வாசிப்பு கற்பித்தல் நுட்பங்கள், கலைதல் அச் பிரசுரம்,


### பரீட்சைத் திணைக்களம் பின்வரும் பிரதான பரீட்சைகளை நடாத்துகிறது.

**5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை**

சுமார் 2500 பரீட்சை நிலையங்களில் சுமார் 350,000 மாணவர்கள் இப்பரீட்சையை எழுதுகின்றனர். இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.

**க.பொ.த (சா/த) பரீட்சை**

சுமார் 3800 பரீட்சை நிலையங்களில் சுமார் 550,000 மாணவர்கள் இப்பரீட்சையை எழுதுகின்றனர். சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளில் 52 பாடங்களுக்கான வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**க.பொ.த (உ/த) பரீட்சை**

சுமார் 1700 பரீட்சை நிலையங்களில் சுமார் 250,000 மாணவர்கள் இப்பரீட்சையை எழுதுகின்றனர். மும்மொழிகளிலும் 47 பாடங்களுக்கான வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

பதவி உயர்வுக்கான தொழிலல்சார் பரீட்சைகளையும் இத்திணைக்களம் நடத்துகிறது. கடந்த தசாப்த காலத்தில் இப்பரீட்சைகள் நடாத்தப்படவில்லை. இவ்வாறான கோரிக்கைகளை முன்வைக்காமை கல்வி அமைச்சின் குறைபாடாகும். எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான பரீட்சைகள் யாவற்றையும் வருடாந்த ரீதியில் அட்டவணைப்படுத்தி ஆளனியினரின் தெரிவு, நியமனம் மற்றும் பதவி உயர்வை உரிய காலத்தில் கொண்டு நடத்துவதற்கு வசதியாக பெறுபேறுகளை வெளியிட திணைக்களம் உத்தேசித்துள்ளது.

மேற்படிப் பரீட்சைகளைத் தவிர தெரிவு, பதவி உயர்வு மற்றும் சான்றிதழ் தொடர்பான மேலும் சுமார் 300 பரீட்சைகளை இத்திணைக்களம் நடத்தி வருகின்றது. சுமார் 1000 வினாப்பத்திரங்கள் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்றன. பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் அல்லது பல்வேறு இடங்களில் தேவைக்கேற்றவாறு நடாத்தப்படுகின்றன.

**பிரதான பிரச்சினைகள்**

வினாப்பத்திரங்களைத் தயாரித்தல், அவற்றை அச்சிடுதல், விநியோகித்தல், பரீட்சைகளை நடாத்துதல், வினாப்பத்திரங்களை மதிப்பிடுதல், பெறுபேறுகளை வெளியிடுதல், சான்றிதழ் வழங்குதல், பெறுபேறுகளையும் மதிப்பீட்டு அறிக்கைகளையும் பகுப்பாய்வு செய்தல் ஆகியவை இத்திணைக்களத்தின் பிரதான பிரச்சினைகளாகும்.

**சீர்திருத்தங்களின் அடிப்படையில் இரு பிரதான பொறுப்புக்கள்**

பரீட்சைகளையும் மதிப்பீடுகளையும் நவீனமயப்படுத்துதலே இந்த சீர்திருத்தங்களின் நோக்கம். இதில் இரண்டு பிரதான பணிகள் உள்ளன. முதலாவது நினைவாற்றலைப் பரிசோதிக்கும் அறிக்கை சார் உருப்படிகளைத் தவிர்த்து, உயர் திறன்களை மதிப்பீடு செய்யும் புதிய கலைத் திட்டத்தின் எதிர்பார்ப்புக்களை அடையக்கூடியதாக க.பொ.த சா/தர மற்றும் உ/தர பரீட்சைகளின் தரத்தை மேம்படுத்தல். இரண்டாவது தரம் 5, தரம் 8 இல் வருடாந்த தேசிய கணிப்பீட்டு பரிசோதனையை நடத்துதல். இந்தப் புதிய பணி சவால் மிக்கது. தற்போதைய 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பதிலாக 5, 8 ஆம் தரங்களில் கற்கும் சகல மாணவர்களும் இந்தத் தேசிய கணிப்பீட்டு சோதனைக்குத் தோற்றுவார். தற்போதைய 5ஆம் தர புலமைப்பரிசில் மேலும் திருத்தப்படும். தரம் 8 பரீட்சை 2010 இல் அறிமுகப்படுத்தப்படும். மாணவர், பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம் என்ற அடிப்படையில் பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. 2015ஆம் ஆண்டளவில் ஆகக் குறைந்த திருப்திகரமான தராதரத்தை உறுதிசெய்து கொள்வதற்காகவும் தேவையான பரிகார ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் மாணவர், பாடசாலைகள், கோட்டங்கள், வலயங்கள், மாகாணங்களின் செயலாற்றுகை மட்டங்களை தேசிய கணிப்பீடு ஒப்பிட்டுப் பார்க்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்புல ஊடகம்
# அதன் மலர்ச்சியும் கட்டமைப்பும்

**தலைப்புகள்**

1. தொலைக்காட்சி
2. வரலாற்று நோக்குகள்
3. தொலைக்காட்சி முன்னேற்றமும் விமர்சனமும்
4. தொலைக்காட்சியின் எதிர்காலம்

**எண்ணக்கரு**

1. தொலைக் காட்சியின் வரலாற்றை ஆரம்பத்திலிருந்து இன்றுவரை நோக்குதல்
2. தொலைக்காட்சியின் சமூகத்தாக்கம்
3. தொலைக்காட்சி நிறுவகக் கட்டமைப்பு

**நோக்கங்கள் குறிக்கோள்கள்**

◎ தொலைக்காட்சியின் அபிவிருத்திக் கட்டங்கள்
◎தொலைக் காட்சிக்கும் வெகு ஜனங்களுக்கும் இடையிலான தாக்கப் பிரதி தாக்கங்கள்.

**தொலைக்காட்சியின் சாதக பாதகங்கள்.**

<u>அறிமுகம்</u>



கட்புல ஊடகம் பற்றிய பாடமானது, புராதன கால குகைச் சித்திரங்கள் முதலாக இன்றைய உலகில் செய்மதிகள் மூலம் நமது படிப்பு அறைக்கு கட்புலக் காட்சிகளைக் கொண்டு வருவதற்குப் பயன்படும் இலத்திரன் ஊடகம் வரையான சித்திரத் தொடர்பு - கள் சார் அடிப்படை அம்சங்கள் யாவற்றையும் தழுவி நிற்க வேண்டும். ஆனால் நோக்கெல்லை மிக விசாலம் ஆனது. ஆதலின், நாம் நமது நோக்கை தொலைக் காட்சி ஊடகம் அளவில் மட்டுப் படுத்திக் கொள்வோம் தொலைக்காட்சி பற்றிய முக்கிய அபிவிருத்திக் கட்டங்களையும் வெகு ஜனங்கள் பால் அது ஏற்படுத்தும் தாக்கங்களையும் இங்கு பார்ப்போம்.

இரண்டாவது உலக யுத்தத்தினால் இதன், பிரயோகம் தாமதமாகி விட்டபோதும் 1940களின் பிற் பகுதியில் அல்லது 1950 களின் முற்பகுதியில் வளர்ச்சியுற்ற நாடுகளில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கத் தலைப்பட்டது. வானொலியைப் போன்றே தொலைக்காட்சியும் சினிமா என்றழைக்கப்படும் பெரிய கட்புல ஊடகத்தின் மூலமாக யாவர்க்கும் கட்டுப்படியான வசதியான வடிவத்தில் மகிழ்வூட்டும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை வழங்குவதன் மூலம் பெருந்தொகையான பார்வையாளர்களை ஈர்க்கும் இயல்பு உடையதாயிற்று. எவ்வாறாயினும் தொலைக்காட்சி செய்தி பரப்பலின் போது நடக்கும் சம்பவங்களைப் பார்க்கக்கூடிய தன்மையிருப்பதால் அவை பார்வையாளரிடத்தில் கூடிய கருத்துப் பதிவினை ஏற்படுத்துகின்றன. சம்பவஞ்சார் நிகழ்ச்சிகள் (படமாகவோ நாடகமாகவோ தயாரிக்கப் படுவனவாயினும்) நிகழ்வுறும் சம்பவங்களை குறிப்பாக வெளிநாட்டில் இடம் பெறுவனவற்றை யதார்த்தமாக நோக்கும் பாங்கில் இவை உருவாக்கப்படுகின்றன. கடந்த இரு தசாப்தங்களில் வண்ணப் படங்களின் தோற்றமும் வீடியோ கசற் உருவாக்கமும் தொலைக்காட்சியின் தரிசனத் தெளிவையும் உபயோகப் பரப்பெல்லையையும் அதிகரிக்கச் செய்துள்ளன.

ஆராய்ச்சியாளர் குறித்துள்ளவாறு, ஒரு புதிய தொழில்நுட்பச் சாதனத்தை முன்னோடியின் வரையறைக்குள் எவ்வாறு மட்டுப் படுத்தியமைத்துக் கொள்ள முடியுமென்பதற்கு தொலைக்காட்சி ஒரு சிறந்த உதாரணமாகும். தொலைக்காட்சிச் சமிக்கைகள், தந்தி மூலம் ஒளிகடத்திக்கு விநியோகிக்கப்பட்டுப் பின்னர்கம்பியின் மூலம் ஒரு வீட்டு உச்சியிலுள்ள உள்வாங்கும் உணர்வுக் கொம்புக்குச் செலுத்தப்படுகின்றன. வானொலிச் சாதனத்தில் இந்த உத்தியே கைக்கொள்ளப்பட்டது. பின்னர் இது தொலைக்காட்சிச் சாதனத்தினால் மேற்கொள்ளப்படலாயிற்று. இவ்விரு ஊடகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு நமக்குத் தெரிந்த ஒன்றே. வானொலி ஒலி ஊடகத்தைச் சார்ந்தது. தொலைக்காட்சி வானொலியின் தம்பி என்று குறிக்கப்படுவதும் உண்டு.

**வரலாற்று நோக்கு**

1884 - 1923 இக்காலப் பகுதியில் தான் தொலைக்காட்சியின் தோற்றத்திற்கிடமான ஆராய்ச்சி நடைபெற்றது. 1920ஐ அடுத்த ஆண்டுகளின் முதற்பகுதியில் தொலைக்காட்சி ஊடகத்தை உருவாக்குவது பற்றிய கோட்பாடு ரீதியான ஆராய்ச்சி பூர்த்தியாக்கப்பட்டது. வானொலி ஊடகம் போன்று தொலைக்காட்சி உருவாக்கப்பட்ட முறை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற மின்சாரத் துறைப்பட்ட தீவிர பரிசோதனைகளின் விளைவாக வளர்ச்சிபெற்றது. <u>ஜேம்ஸ் மாக்ஸ்வெல்</u> அவர்களும் <u>ஹெயின்ரிச் ஹேர்ட்ஸ்</u> அவர்களும் மின்காந்தக் கோட்பாட்டுத் துறையில் மேற்கொண்ட அடிப்படை ஆராய்ச்சி, குகிளிமோ மார்க்கோனி அவர்களின் செயல்முறைப் பரிசோதனைகளுக்கு வழி கோலியது. இவர்களது கம்பியில்லாத் தொடர்புச் சாதனம் பற்றிய ஆராய்ச்சிகள் இடம்பெற்ற காலகட்டத்திலே 1980களில் போல்நிப்போ, சார்ல்ஸ் கெங்கின்ஸ் என்ற இருவர், கம்பி மூலம் காட்சிப் படங்களை அனுப்புதற்கியன்ற பொறியியல் அலகிடல் தட்டு உபயோக முறைபற்றிப் பரிசோதனை நடத்திக் கொண்டிருந்தனர். தொலைக்காட்சி சம்பந்தமான ஆரம்பகாலப் பரிசோதனைகள் பொறியியல் முறையினையே பிரயோகித்தன. 20ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் முற்பகுதியில் வானொலி உபயோகம் பல்கிப் பெருகியதால் தொலைக்காட்சி தொடர்பான ஆராய்ச்சிகள் தளர்வுற்றன. ஆனால் 1923 இல் வலாடியர் கே.எஸ்வொரிக்கின் என்பவர், ஐக்கோனஸ் கோப் எனப் பெரிய எலத்திரனியக்க நிழற்படக் கருவிக் குழாயைக் கண்டுபிடித்ததோடு அது தமது உரிமை எனவும் பிரகடனப்படுத்தினர். வானொலிச் சாதனம் செயல்படத் தொடங்கி மூன்று நூற்றாண்டுகளுக்குள் எலத்திரனியல் தொலைக்காட்சி முறைமையும் உருப்பெற்றது.

### தொலைக்காட்சி உருவாக்கப்படிமுறை

எனினும் ஆரம்பக் கட்டத்தில் அதன் பயன்பாடு சித்தியெய்தவில்லை. எவ்வாறாயினும் 1925 இல் ஜெங்கின்ஸ் அவர்களின் பொறியியல் முறையிலமைந்த தொலைக்காட்சி மூலம் முதன் முதலாகக் காட்சிப் பரப்பு இடம்பெற்றது. ஸ்வோர்க்கின் அவர்களின் எலத்திரனியல் தொலைக்காட்சிச் சாதனம் எளிமையானதாகத் தோன்றியது. இதன் மூலம் உருவாக்கப்பட்ட படம் கூடிய தெளிவுடன் காணப்பட்டது. 1920 களில் இலத்திரன் காட்சி முறை தொடர்பில் பல பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இப்பரிசோதனைகளுள் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன் லொயிட்ஜ் பெயர்ட் அவர்களின் பரிசோதனைகளும் அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்ஸ்சான்டோர்சன் பார்ன்ஸ்வோத் ஆகியோரது பரிசோதனைகளும் உட்பட்டன. இத்தகைய பரிசோதனைகள் 1930 களிலும் தொடர்ந்தன. 1937 அளவில் அமெரிக்காவில் பதினேழு தொலைக்காட்சி நிலையங்கள் வர்த்தக நோக்குச் சாராது பரிசோதனை உத்தரவு அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருந்தன. 1939 இல் நியூயோக்கில் ஜனாதிபதி பிராங்கிலின் ருஸ்வெல்ற் தொலைக்காட்சியில் தோன்றிய காட்சி அமெரிக்க உலகச் சந்தையில் அதி முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டது.

1947 இன் முடிவில் சந்தையில் மேலும் மேலும் காட்சிப் பெட்டிகள் பெருகின. தொலைக்காட்சி வசதிகள் சார் தேவை தீவிரமாக உணரப்பட்டது. தொலைக்காட்சி நிலையங்கள் கூடுதலாக அமைக்கப்படவேண்டும் எனக் கோரிக்கைகள் எழுந்தன. தொழில் நுட்பவியலில் அதி முன்னேற்றம் கண்ட நிலையில் தகவலோடு பொழுது போக்கு இணைந்து அளிக்கப்படும் சாத்தியம் பற்றிய சிந்தனையும் தீவிரம் பெற்றது. அமெரிக்காவில் தொலைக்காட்சியின் எதிர்காலத்தை மூன்று முக்கிய காரணிகள் பாதிப்பனவாயின.

1. சமஷ்டி தொடர்பு ஆணைக்குழு தொலைக்காட்சி நிலையங்கள் மீது உறைவு விதித்தமை.
2. தொலைக்காட்சி நிறுவனங்களின் அபிவிருத்தி
3. தொலைக்காட்சி வீடியோ நிகழ்ச்சி வடிவமைப்பின் வளர்ச்சி,

பெரிய பிரித்தானியாவில் இரண்டு காரணிகள் விருத்தியுற்றன.

◎ ஒன்று நேரடித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் அறிமுகம்,

◎ மற்றையது உலகின் ஏனைய பாகங்களுடன் தொலைக்காட்சி நிறுவன ரீதியான இணைப்பு இதன் நோக்கம் உள்ளூரில் தொலைக்காட்சியை சிறந்த வளமுடையதாகச் செய்தல்.

### தொலைக்காட்சி தொடர்பான சில உண்மைகள்

1936 இல் இங்கிலாந்தும் பிரான்சும் ஒழுங்காக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் தொடங்கியதுடன் தொலைக்காட்சிச் சகாப்தம் தோன்றியது எனலாம். 1950 இல் ஐந்து நாடுகள் தொலைக்காட்சிச் சேவையை ஒழுங்காக நடத்தின. 1955 இல் இத்தொகை பதினேழாக அதிகரித்தது. 1960இல் இத்தொகை நான்கு மடங்காகப் பெருகியது. இன்னொரு தசாப்தம் கழிந்த போது நூறு நாடுகள் தொலைக்காட்சிச் சேவைகளை நடத்திக் கொண்டிருந்தன. இன்று 138 நாடுகளில் தொலைக்காட்சிச் சேவை இடம் பெறுகிறது. உலகளாவிய ரீதியில் நோக்கினால் நாற்பது கோடி தொலைக்காட்சிப் பெட்டிகள், இன்று மக்களின் உபயோகத்தில் உள்ளன. இத்தொகை செய்திப் பரப்பிலும் நிகழ்ச்சி விநியோகத்திலும் வானொலிச் சாதனம் கொண்டிருக்கும் பிரமிப்பூட்டும் ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கிறது. வெகு அண்மையில் கிடைக்கப்பெற்ற தரவின் படி 1960 க்கும் 1976 க்கும் மிடைப்பட்ட காலத்தில் தசலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொண்டுள்ள நாடுகள் 13 இல் இருந்து 36 ஆக அதிகரித்துள்ளன. ஒரு கோடித் தொலைக்காட்சிப் பெட்டிகள் உடையனவாக ஆகக்குறைந்தது ஒன்பது நாடுகள் விளங்குகிறது. இன்னொரு வகையிற் சொன்னால் நாட்டில் உள்ள இல்லங்களின் தொகையை தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை அண்மித்துக்கொண்டிருக்கின்றன.

### தொலைக்காட்சி அதன் முன்னேற்றமும் கண்டன விமர்சனமும்

தொலைக் காட்சி வெகு ஜனத் தொடர்பு சாதனம் என்ற வகையில் மக்களினது அல்லது பார்வையாளர்களது நாட்டத்தை தகவல், பொழுது போக்கு ஆகிய இருதுறைகள் தொடர்பிலும் வெகுவாக ஈர்த்து உள்ளது. என்பதில் ஐயம் இல்லை. முன்னேற்றம் விமர்சனம் ஆகிய இரு சொற்களில் தொலைக் காட்சி தொடர்பில் மக்களிடையே குறிப்பாக 1960 இலிருந்து நிலவும் மனப்பாங்கினை அடக்கிக் கூறலாம். கிழக்கு ஐரோப்பாவில் பெரும்பாலான நாடுகளில் தொலைக் காட்சிக்கு மூடப்பெட்டி என்றும் பெயர் சூட்டியிருந்தார்கள். இப்பாதகமான தொடர்பு வெகுஜனங்களுக்கிடையே எத்தகையது என்பதைப் புலப்படுத்துகிறது. தொலைக்காட்சி ஒரு பொழுது போக்குச் சாதனம் என்ற கருத்து வளர்ந்த அதே துரித வேகத்தில் அது பற்றிய கண்டன நோக்கும் பரவியது. இதன் விளைவாக சமூகவிஞ்ஞானிகள் கல்வியாளர்கள் சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் வாதிகள் சட்ட ஆலோசகர்கள் என்ற பல்திறத்தினர் அவ்வப்போது இவ்வூடகத்தைத் தாக்க முற்பட்டனர். மாதர்கள் சிறுவர் சிறுமியர் மீது தொலைக்காட்சி ஏற்படுத்தவல்ல தாக்கம் பற்றி பற்பல ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.




இவ்வாராய்ச்சிகளின் விளை வாகத் தோன்றிய முடிவு, யாதெனில் தொலைக் காட்சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தை ஏற்படுத்துவது உண்மையே, ஆனால் அத்தாக்கம் எத்தகையது அது எங்ஙனம் பாதிக்கிறது? என்பது பற்றி எவரும் தீர்க்கமாகக் கூறியதாகத் தோன்றவில்லை. வர்த்தக விளம்பரம் மக்கள் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனப் பல ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். சமூக விழுமியங்களைப்பொறுத்தவரை வாங்குதல் இயல்பையும் உளப்பாங்கையும் கலக்க முயற்சி செய்கின்றன என்பது உண்மையே. ஆனால் இத்துறையில் சில நன்னெறி விழுமியங்களைப் புகுத்துவது அவசியம் ஆகத் தோன்றியது.




1960 களில் அரசியல் பிரசாரத்தில் தொலைக்காட்சியின் செல்வாக்கு வெகுவாக ஆதிக்கம் செலுத்தியது. அமெரிக்காவில் நிக்ஸன் - கெனடியுடன் ஆரம்பித்து 1968 இல் இத்தகைய ஆதிக்க நிலைப்பாடு தொடர்வுற்று இன்றுவரை நின்று நிலவுவதைக் காணமுடிகிறது. செய்தி முகாமைகள், முக்கியமான செய்தி வெளியீடுகளின் போது வியட்னாம் போர், அண்மையில் இடம்பெற்ற வளைகுடா யுத்தம் போன்றவற்றின் செய்தி விமர்சனத்தின் போது மக்கள் மத்தியில் ஒருவர் ஜனரஞ்சகரசனை உணர்வை ஏற்படுத்திவிடுகின்றன. காலப்போக்கில் செய்மதிச்சேவை மேலும் மேலும் முக்கியத்துவம் அடைவதாயிற்று. சமீப கால செய்மதிச்சேவையில் அதி முக்கியமானதாகக் கணிக்கப்படுவது, சந்திரமண்டல உலா வெகுசனத் தொடர்பு சாதன வரலாற்றில் இது ஓர் அற்புத நிகழ்வாகக் கருதப்படுகிறது.

### இன்றைய தொலைக் காட்சிச் சேவையின் கட்டமைப்பு

தொலைக்காட்சிச் சேவைகள் உலக நாடுகளிலெல்லாம் நலன் தோறும் அபிவிருத்தி அடைந்து வருகிறது. ஏனைய தொழில்களுக குள்ள -வாறே வழமையான முகாமை உத்திகள் இத்தொலைக்காட்சித் தொழிலுக்கும்பிரயோகிக்கப்படுகிறது. தொலைக் காட்சிக் கலைக் கூடக் கோட்டம் நிகழ்ச்சி களாகிய உற்பத்திப் பொருள் ஆக்கப்படும் ஒரு இலத்திரன் தொழிற்சாலை எனலாம். தோலைக 'காட்சியினது நிகழ்ச்சிச் சித்திரம் எழுதுவது போன்ற படைப்புத் துறையிலும் மகாமை அம்சம் இடம் பெறவே செய்கிறது. ஆதிக தேர்ச்சியும் ஆற்றலும் மிக்க தொலைக் காட்சி எழுத்தாளர்கள் கூட பல்வேறு வழிகளில் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். தோலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய பாங்கில் பிரதிகளை எழுதும் படி எழுத்தாளர்கள் கோரப்படுகிறார்கள். ஒவ்வொரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு நிதி உதவிவேண்டி ஆதரவாளர்கள் நாடி அழைக்கப 'படுகின்றார்கள். ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன. எல்லா அம்சங்களுள் உற்பத்தித் தகவு முக்கிய இடம்பெறுகிறது. இவ்வாறு நிகழ்ச்சி தயாரிப்புப் படி முறையில் பல்வேறு அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் தேர்ந்தெடுக்கப்படும் நிகழ்ச்சியின் தரம் வீழ்ச்சியடைவதை

அவதானிக்கலாம். இக் காலகட்டத்தில் (கண்டன) விமர்சனம் உதயமாகிறது. சந்தையில் உள்ள பொருள்களின் உற்பத்தியில் ஆகு செலவு கணிக்கப்படுதல் போன்றே நிகழ்ச்சித் தயாரிப்பு விடயத்தில் இக் கணிப்பு, அவசியமாக இடம் பெறுகிறது. இன்று பெரும்பாலான தொலைக 'காட்சி நிலையங்களில் முகாமைத்துவம் படி முறைகள் கணனி மயமாக்கப்பட்டுள்ளன. தொலைக 'காட்சி நிகழ்ச்சிகள், இன்று உற்பத்தி செய்யப் 'பெறும் வர்த்தகப் பண்டங்கள் போலாகி விட்டன. சந்தைப் பொருள்களைப் போல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் விற்பனைக்கு உண்டு.

தொலைக்காட்சித் தொழில் அடிப்படை ஒழுங்கு விதிகளை மீறுவதாக உள்ளது பிரபல்யம் வாய்ந்த தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் வீடியோப் பொறிமுறை மூலம் களவாடப்படுவதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். ஒரு குறித்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் போது அது பதிவு செய்யப்பெற்று பின்னைய உபயோகத்திற்காகப் பேணப்படுகிறது. இது சட்டவிரோதச் செயலானபோதும் இத்தகைய மீறுகை நாளாந்தம் நடைபெறுகிறது. சந்தையிலுள்ள ஏனைய பண்டங்களைப் போன்று வீடியோ பதிவுகள் விலை குறிக்கப்பெற்று வாங்கவும் விற்கவும் படுகின்றன.

தொலைக்காட்சிச் சேவையில் பார்வையாளர் அளவீடுகள் என்ற பதம் குறித்த ஒரு நிகழ்ச்சியைக் கண்டு களிக்கும் பார்வையாளர் தொகையைக் குறிக்கப்பயன்படுத்துகிறது. இங்கிலாந்தில் சில நிகழ்ச்சிகள் வெகுசில பார்வையாளர்களையே கவருவனவாக உள்ளன. அவற்றுக்கு ஆதரவாளர்களின் சகாயம் கிட்டுவதில்லை. அத்தகைய நிகழ்ச்சிகள் ஊடகத்திலிருந்து நீக்கப்பட்டு புதிய நிகழ்ச்சிகள் புகுத்தப்படுகின்றன. பார்வையாளர்கள் அளவீடுகள் குறித்த ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியின் செலவு லாபங்களையும் உள்ளடக்குகின்றன. இக்கணிப்பு பார்வையாளர் வீத அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

### தொலைக்காட்சியின் எதிர்காலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி ஏனைய ஊடகங்களான பத்திரிகை வானொலி சினிமா என்பவற்றுடன் ஒப்புநோக்குகையில் அதிக இலாபகரமான வசதியான உயர்நிலையை எய்தியுள்ளது என்று கூறவேண்டும். தொலைக்காட்சி அதிபரந்த விசாலமான தகவல் பரம்பலையுடையதாக விளங்குகிறது. இன்னும் வீடியோ கசெற் நாடாப் பதிவுமுறை அறிமுகமானதையடுத்து இவற்றைச் சேமித்து வைக்க இடமில்லாப் பிரச்சினை உருவாகுமளவிற்கு இவற்றின் உற்பத்தி பெருகியுள்ளது. இன்று உலகின் அனேகமான நவீன நூலகங்களில் நூல்களோடு வீடியோ கசற் தொடுப்பும் ஒரு பிரதானமாக அமைந்து காணப்படுகிறது. தொலைக்காட்சி கல்விப் போதனைக்கு ஓர் உகந்த சாதனம் என்ற தன்மையில் செல்வாக்கப் பெற்று வருகிறது. கல்வியாளர்கள் தொலைக்காட்சியை ஒரு பிரதான வகுப்பறை, பரிசோதனைக்கூட உபகரணமாகக் கருதவும் பயன்படுத்தவும் தலைப்பட்டுள்ளனர். புல வகைப்புலன்கள் மூலம் ஒரே நேரத்தில் தகவல்களைப் பெற்று கொள்ள வானொலி நமக்குப் பயிற்சியளிக்கிறது. என்பது மக்லூான்கள் என்ற அறிஞரின் கூற்றாகும். இங்ஙனமாக முன்னைய சந்ததியினர் மீது அச்சுப்படைப்பு திணித்த வரிவழி (வாசித்து) சிந்திக்கும் பங்கிலிருந்து வானொலி நமக்கு விடுதலையளித்துள்ளது எனலாம். அச்சு ஊடகத்திற்குப் பதிலாக தொலைக்காட்சித் திரையை உபயோகிப்பது உகந்தது என்பது பல ஆராய்ச்சியாளரின் கருத்து. அவ்வாறு அமையுமாயின் தொலைக்காட்சியை தினச்செய்தித்தாள் போன்று நாம் பயன்படுத்தலாம்.


**வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் பொதுவான சில பண்புகள்.**

◎ கேட்போர், பார்வையாளர் தொகை.
◎ கேட்டல், பார்வை நேரம்.
◎ கேட்டல், பார்த்தலின் உச்சநேரங்கள்.
◎.அலைவரிசைத் தெளிவும் அலைவரிசை விசுவாசமும்
◎ நிகழ்ச்சி தெளிவுகளும் நிகழ்ச்சி விசுவாசமும்
◎ விடயதான விருப்பத்தெரிவு
◎ அறிவுத் தேட்டம்
◎ உள்ளதை இசைவுறுத்தும் தீவிரம்
◎வேறுபட்ட வயதினர் சமூக நிலையினர் என்போராலும் ஆண் பெண் இருபாலராலும் விரும்பிக் கேட்கப்படலும் பார்க்கப்படலும்
◎கேட்போர்,பார்ப்போர் பல்வகை தொகையினராய் விளங்கல்.

குறிப்பு: 1980 களுக்குப்பின் கட்புல ஊடகங்களின் அசுர வளர்ச்சி பற்றி இக்கட்டுரையில் ஆய்வுசெய்யப்படவில்லை. பிறிதொரு இதழில் இதன் தொடர்ச்சி பிரசுரிக்கப்படும்.

நன்றி
ஊடகக் கற்கை
திறந்த பல்கலைக்கழகம்.

**இலங்கையின் கல்விமுறையின் அமைப்பு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவம், நிர்வாகம் ஆகிய எண்ணக்கருக்களினூடாக கல்வி நிர்வாகத்திற்கான ஓர் அறிமுகம்

P. உமாசங்கர்
மருதானை தொழில்நுட்பக் கல்லூரி
கொழும்பு - 10.

முகாமைத்துவம் என்பது பல்வேறு துறைகளில் இருந்து அறிவு ரீதியாக வளர்ச்சியடைந்த பல்வேறு பாடத்துறைகளான பொருளியல், பொறியியல், கணிதம், சமூகவியல், மானிடவியல், உளவியல் ஆகியவற்றின் ஓர் ஒருக்கிணைக்கப்பட்ட பாடப் பரப்பே இதுவாகும். மனித சமூகத்தின் விருத்திக்கும் நவீன உலகிற்கேற்ப முகாமைத்துவமும் அதன் தேவையும் நாளுக்கு நாள் விரிவடைவதுடன் புதிய சிந்தனைகளும் தோற்றம் பெற்று வருகின்றன.



முகாமைத்துவம் தொடர்பான சிந்தனைகள் மற்றும் கருத்துக்கள் கி.மு 3000-4000 ஆண்டுகளில் காலத்தல் இருந்தே பின்பற்றப்பட்டு வந்துள்ளதை பல வரலாற்றுச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தலாம். ஆவற்றுக்கு உதாரணமாக கி.மு 2900ம் ஆண்டளவில் எகிப்தில் 481 அடி உயரத்தில் கட்டப்பட்ட பிரமிட், 18ம் 19ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி விளைவு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு பழமை வாய்ந்த ஆனால் தற்போதும் கூட புதிய சிந்தனைகளை உள்வாங்கி புது வடிவம் பெற்று விளங்கும் இம் முகாமைத்துவத்திற்கு அதனது வரைவிலக்கணம் தொடர்பில் இன்னமும் முகாமை அறிஞர்களுக்கும் நடைமுறையாளர்களுக்கும் இடையில் ஓர் பொது இணக்கப்பாடு தோற்றம் பெறவில்லை என்பது வெளிப்படை. இம் முகாமைத்துவத்தின் மையம் நிறுவகம் அல்லது அமைப்பு என சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

முகாமைத்துவம் என்பதற்கு பின்வருமாறு காலத்திற்குக் காலம் பல்வேறு முகாமைத்துவ அறிஞர்களால் பல்வேறு வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டு வந்ததை அவதானிக்க முடிகிறது.

**அவற்றுள் பின்வரும் சில முக்கிய வரைவிலக்கணாங்களை நோக்குவோம்.**


Management எனும் ஆங்கில பதத்தின் கருத்து
Manage + Men = (T) factfully = Management
முகாமை + ஊழியர்கள் + உபாயம் = முகாமைத்துவம்
அதாவது உபாயங்களை அடைவதற்கு ஊழியர்களை முகாமை செய்யும் கருமம் முகாமைத்துவம்.

## Mary Parker Fallett இன் கருத்து

பல்வேறு நபர்களை கொண்டு கருமங்களை செய்விப்பது தொடர்பான கலை முகாமைத்துவம் ஆகும். அதாவது நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியரிடமிருந்து எதிர்பார்த்த செயற்பாட்டை பெற்றுக் கொள்வதாகும். இதன் பிரகாரம் ஒவ்வொரு ஊழியருக்கும் விங்கப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றிக் கொடுக்கும் கருமமாக முகாமைத்துவம் வரைவிலக்கணப் படுத்தப்படும்.

## Stoner & Free man இன் கருத்து

நிறுவனத்தில் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைவதற்காக நிறுவனத்தில் கிடைக்கக் கூடிய ஊழியர்களையும் ஏனைய அனைத்து வளங்களையம் பூரணமாகப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற திட்மிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் கருமங்களை உள்வாங்கிய ஓர் செயன்முறையே முகாமைத்துவம் என வரைவிலக்கணப்படுத்தப்படும்.




முகாமைத்துவம் எனும் மேற்படி வரைவிலக்கணங்களுள் உள்ளடங்கும் அடிப்படைக் கூறுகளை பின்வருமாறு நோக்கலாம்.

☺ **நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பு**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் குழு பொது இலக்கு ஒன்றை அடைவதற்காக ஒத்துழைத்து செயற்பட தன்னிச்சையாக ஒன்று சேர்தலைக் குறிக்கும்.

☺ **இலக்கு அல்லது நோக்கம்**

நிறுவனமொன்று நீண்டகாலத்தில் அடைய எதிர்பார்க்கும் விரிவானதும் குறிப்பானதுமான பெறுபேற்றைக் குறிக்கும்.

☺ **வளங்கள்**

நிறுவன நோக்கங்களை அடைவதற்காக நிறுவனம் கொண்டிருக்கும் உருவமுள்ள உருவமற்ற வளங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதித்துவப்படுத்தும். இது 5m ஆல் குறிக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| Men | Money | Material | Machines | Method |
| மனிதவளம் | பணம் | பொருள்கள் | பொறிகள் | முறைகள் |

### ☺ வினைத்திறன்

வினைத்திறன் என்பது சரியாகச் செய்தலாகும். அதாவது குறைந்தளவு வளத்தினை குறைந்தளவு கிரயத்துடன் ஈடுபடுத்தி அதிகளவு வெளியீட்டை பெற்று கொள்வதை குறிக்கும்.

### ☺ செய்திறன் அல்லது பயனுறுதி

செயல் திறன் என்பது சரியானவற்றை செய்தலாகும். அதாவது நோக்கத்தை உச்சளவில் அடைந்து கொள்ள நிறுவனத்தினால் வரையறுக்கப்பட்ட முறைகளை சரியானவாறு பின்பற்றி உரிய காலத்தில் நிறைவேற்றுவதை குறிக்கும்.

### ☺ உற்பத்தித்திறன்

குறிப்பிட்டதோர் காலப்பகுதியில் நிறுவனத்தின் உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொடர்பினை விளங்குவதாகும்.

### ☺ முகாமைத் தொழிற்பாடுகள்

திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் என்பனவாகும்.

அடுத்து நிர்வாகம், முகாமைத்துவம், ஆகிய இரண்டும் ஒரே நோக்கில் நோக்கப்படினும் பின்வரும் விரைவிலக்கண ரீதியாக வேறுபட்டவையாகும்.

நிர்வாகம் எனப்படுவது நிறுவனத்தின் பிரதான கொள்கைகளையும் நோக்கங்களையும் தீர்மானிப்படுதன் நிறுவன ஊழியர்களை நிறுவன உடமையாளர்களை குறித்து நிற்கிறது. இது முகாமையின் ஒரு பகுதியாக கருதப்படுவதுடன் இது செய்முறை அல்லது செயற்பாடுகளை திட்டத்திற்கமைய கட்டுப்படுத்தி மதிப்பிடுகின்ற நடைமுறைகளை தீர்மானித்தலுடன் செற்படுத்தலுடனும் தொடர்புடைய ஓர் செயற்பாடே இதுவாகும்.

கல்வி நிர்வாகம் தொடர்பில் ஆராயுமுன்னர் முகாமைத்துவம், நிர்வாகம், தொடர்பில் தெளிவான விளக்கம் பெறும் நோக்கில் மேற்படி விளக்கம் தரப்பட்டுள்ளது. மேலும் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையும் பரீட்சையின் விடய ஆய்வு பகுதிக்கும் மேற்படி விளக்கம் அவசியமான - தொன்றாகும்.

இலங்கைக் கல்வி நிர்வாகமானது கிராமப் பாடசாலை, குருகுல பாடசாலை, பிரிவெனா என்பவற்றிலிருந்து போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சி காலக் கல்வி, பிரித்தானிய ஆட்சிக் கால கல்வி, 1865 மோர்கன் குழுவின் ஆலோசனை, 1931 டொனமூர் அரசியல் சீர்திருத்தம், 1939ம் ஆண்டு 31ம் இலக்கக் கல்விச் சட்டம், 1945 இலவசக் கல்விச் சட்டம், 1960 - 1961 பாடசாலைகள் கையேற்பு, 1961 கல்வி நிர்வாக பன்முகப்படுத்தல் மாநாடு, 1966, 1972 கல்விச் சீர்திருத்தம், 1981 வெள்ளை அறிக்கையின் படி 1985 இல் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகப் பன்முகப்படுத்தல், 1988 இல் மேற்கொள்ளப்பட்ட மாகாண சபை கல்வி 13ம் சீர்திருத்தம், 1990 இல் உருவான தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி உயர்கல்வி அமைச்சு, 2003 மனித விருத்தி தொடர்பான எதிர்கால நோக்கு.

எனவே இவ்வாறு வளர்ச்சி பெற்ற வந்த இலங்கையின் கல்வி நிர்வாகமானது தற்போது புதிய முகாமைத்துவ சிந்தனைகளையும் உள்வாங்கி வளர்ச்சி பெற்றுள்ளது. அவ்வகையில் பாடசாலை, கோட்டக்கல்வி அலுவலகம், வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வி அலுவலகம், கல்வி அமைச்சு என கல்வி நிறுவனங்களும் அவற்றை அதிபர், பிரதி அதிபர், பிரதித்தலைவர், கோட்டக்கல்வி அதிகாரி, சமயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் கல்வி அமைச்சர் ஆகிய நிர்வாக அதிகாரிகளும் உரியவாறு ஏற்படும் கல்வி நிர்வாகப் பிரச்சினைகளையும் சவால்களையும் திறமையாக முற்கொண்டு வழிநடத்துகின்றனர். எனவே இவ்வாறான சீரான கல்வி நிர்வாக நடவடிக்கைகளுக்கு முகாமைத்துவம், நிர்வாகம், கல்வி நிர்வாகம் ஆகிய எண்ணக்கருக்கள் இன்றியமையாதன என்றால் மிகையாகாது.




மனிதன், ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும், கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்.

- இராமகிருஷ்ணர்

கல்வி அறிவை வளர்ப்பது, ஆற்றல்களை வளர்ப்பது, உணர்ச்சிகளைப் பண்படுத்துவது, மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது, மனிதனின் சமூக நடத்தையை மாற்றி அமைப்பது, மக்களில் உள்ளடங்கியிருக்கும் ஆன்மப் பண்புகளை படிப்படியாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்துவது.

- காந்தியடிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியலுக்கான புதிய பார்வை – புதிய பங்களிப்பு

லெனின் மதிவானம்
பிரதி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



திருக்குறளில் கல்விச் சிந்தனைகள் ஒரு சமூக நோக்கில் மறுவாசிப்பு என்ற நூல் கலாநிதி ந.இரவீந்திரனால் எழுதப்பட்டு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் (விஞ்சு பதிப்பகத்துடன் இணைந்து) வெளியீடாக வெளிவந்துள்ளது. பொதுவாகவே கலாநிதி ந. இரவீந்திரனின் எழுத்துக்கள் சமூக அநீதியையும் அடக்கு முறையையும் அவற்றுக்குரிய பண்பாட்டு தளத்தில் அடையாளம் கண்டு வெளிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் திருக்குறளின் வழி கல்வி சிந்தனைக் குறித்த ஆய்வையும் புதியதோர் கோணத்தில் ஆய்வு செய்ய முனைகின்றது இந்நூல்.

மிக அண்மைக் காலம் வரை திருக்குறள் கல்வித் தளத்தில் நிராகரிக்கப்பட்டு வந்துள்ளது. நவீன காலத்தே எழுந்த சிந்தனைகளில் மேற்கத்தேய கல்வி மரபே, மனித சமுதாயத்தின் வளர்ச்சியை அதன் ஆரோக்கியமான திசையில் வளர்த்தெடுக்க முடியும் எனவும் கீழைத்தேய சிந்தனைகள் யாவும் காலாவதியானது என்ற சிந்தனை மூன்றாம் உலக நாடுகளை சார்ந்த புத்திஜீவிகளின் மூளைகளை கசக்கி பிழிந்துள்ளது என்பதை கல்வித் துறைசார்ந்த ஆய்வுகளில் காணக்கிட்டுகின்றது. இந்த சிந்தனைப் போக்குகள் இரு தளங்களில் வெளிப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இன்றைய உலகமயமாதல் சூழலில் மேற்கு நாடுகளின் மேலாதிக்க பண்பாட்டை மக்களிடம் திணிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பண்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அதன் வினைப் பொருளாக தோன்றியுள்ள பின் நவீனத்துவம் முதலிய கோட்பாடுகள் அடித்தள மக்களின் விடுதலைக்கு தடையாக மதப்பற்றும் சாதிப்பற்றும் மட்டுமல்ல மொழிப்பற்றும் கூட தடையாக இருக்கின்றன என்ற அடிப்படையில் தமிழரின் பண்பாட்டு பாரம்பரியங்கள் சகலவற்றையும் நிராகரிக்கின்றன. தமிழரின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் வெறும் பார்பணிய கலாசாரமாக மட்டுமே கருதியதால் ஏற்பட்ட சிந்தனையாகும். இத்தகைய சிந்தனைகளின் மூலமாக நமது பண்பாட்டில் முகிழ்ந்து வந்த போர்குணமிக்க உள்ளடக்க கூறுகளையும் வடிவங்களையும் நிராகரிப்பதுடன் மக்களின் வாழ்விலிருந்து விடுபட்டு தொலைதூர தீவுக்குள் ஒதுங்கி விட்ட இந்த புத்திஜீவிகள் திருக்குறளை நிராகரிகரிப்பது தற்செயல் நிகழ்ச்சியல்ல.

மறுபுறத்தில், முற்போக்குவாதத்தையும் மார்க்சியத்தையும் இன்றைய யதார்த்த சூழலுடன் பொருத்தி பார்க்காது வெறுமனே மூல நூலை ஒப்புவிப்போரும் பாராயணம் செய்வோரும் கருதுகோள்களையும் முடிவுகளையும் மனப்பாடம் செய்துவிட்டு அவ்வப்போது மேற்கோள் காட்டி விட்டாலே எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவிடலாம் என முழங்கிய இவர்கள் திருக்குறளை நிராகரிப்பது வியப்பிற்குரியதொன்றல்ல. தமிழர் சூழுலுக்குகேற்றவகையில்- இனக்குழு வாழ்க்கை முறையையும் அறியாது ஐரோப்பிய வர்க்க ஆய்வு முறையை அப்படியே பிரயோகிக்க முற்பட்டனர். இவ்வம்சம் தமிழ் சூழலில் முனைப்புற்றிருந்த இனக்குழு வாழ்க்கை முறையையும் கலாசார காரணிகளையும் புறக்கணிப்பதற்கு ஏதுவாக அமைந்தன. நமது பாராம்பரியம் கலாசாரம் என்பனவற்றை சமுதாய பின்புலத்தில் வைத்து நோக்கி அதனை ஒடுக்கும் வர்க்க மரபுகள், ஒடுக்கப்படும் வர்க்க மரபுகள் எனக் கண்டறிந்து சமூகமாற்றத்திற்கு சாதமான கூறுகளை இனங்காண்டு மனித குலத்தின் மேன்மைக்காக அதனை பயன்படுத்திக் கொள்ளல் காலத்தின் தேவையாகும். இந்நிலையில் திருக்குறள் பற்றிய மீள் வாசிப்பு அவசியமானதொன்றாகும். இந்நிலையில் திருக்குறள் பற்றிய இவர்களது பெரும்பாலான ஆய்வுகளில் திருக்குறள் குறித்து எழுந்த மொழிப்புரையே ஆய்வுக்கான மூல நூலாக அமைந்திருக்கின்றது. எனவே திருக்குறளில் வெளிப்பட்ட சமுதாயம் சார்ந்த சிந்தனையை இவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது இருக்கின்றனர். அதன் விளைவாக திருக்குறளை, நிலவுடமை மற்றும் அதிகார தரப்பு சார்ந்த நூல் எனவும் அது பெண்ணடிமைத் தனத்தை போற்றுகின்ற நூல் எனவும் கருத்துக்கள் கூறப்பட்டன.

இவ்வாறானதோர் சூழலில் திருக்குறளின் மூல நூலை சமூக நோக்கில் மறு வாசிப்பு செய்த இந்நூலாசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் கல்வி குறித்த சிந்தனை முதன்மைப் பெற்றுள்ளது, என்பதனையும் அந்நூலில் சமத்துவ நோக்கு, அதிகாரத்துவ எதிர்ப்பு, பன்மைத்துவத்தை போற்றும் நெறி, உழைப்பிற்கு முதன்மை தரும் நோக்கில் உலகியலை போற்றும் பண்பு முதலிய குறித்த பார்வைகளை சமூதாய நோக்கில் எவ்வாறு வெளிக் கொணர்கின்றது என்பதை தக்க ஆதாரங்களுடன் முன்வைக்கின்றார்.

இன்றைய கல்வியியல் பற்றிய ஆய்வுகளை உன்னிப்பாக நோக்குகின்ற போது ஓர் உண்மை புலனாகாமல் போகாது. அதாவது கல்விச் சிந்தனையாளர்கள் ஒரு நாட்டின் சமூகவமைப்பில் கல்வி என்பது ஒரு தனித்துவமான பலம் என்றும் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, மதம் முதலியன ஏனைய சுயேச்சையான தனித்தனிப் புலங்கள் என்றும் கருதினர். அதனால் கல்விப்புலத்தை ஒரு சுயேச்சையான முழுமையான புலம் என எண்ணி அதன் அடிப்படைக் கோட்பாடுகள், அதில் தொன்றும் பிரச்சனைகள், அவற்றுக்கான தீர்வுகள் ஆகியவை பற்றி சுய அணுகுமுறையின் அடிப்படையில் தம் சிந்தனையில் தோன்றிய கருத்துக்களை அப்படியே வெளியிட்டனர். கல்விக் கோட்பாடுகளில் மாற்றங்களை கொண்டு வருவதன் மூலமாக அல்லது கல்வி இலக்குகளில் மாற்றம் கொண்டு வருவதன் மூலமாக, கலைத்திட்டங்களில் சீர்த் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமாக கல்விப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்பட்டனர். மாணவன் ஒருவனை தமது சமூகவமைப்பிலிருந்து பிரித்தெடுத்து தனியே வைத்து இன்றைய சமூகவமைப்பிற்கு ஏற்றவகையில் அவர்களது குணாம்சங்களையும் நடத்தைகளையும் எவ்வாறு மாற்றலாம் என்றவகையிலேயே தான் கல்வி கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வகையான கோட்பாடுகள் காலத்திற்கும் யதார்த்தத்திற்கும் பொருத்தமற்றவவையாக காணப்பட்டன.

இன்றைய காலச் சூழலில் போற்றப்படும் கல்விச் சிந்தனையாளர்களான சாக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில், ரூசோ, பிரோபல், ஜோன்டுயி, விவேகானந்தர், இரவீந்திரநாத்தாகூர் முதலியோர் முன்வைத்த கல்விச் சிந்தனைகள், மற்றும் யுனேஸ்கோவின் கல்வி பற்றிய அறிக்கைகளில் கூறப்பட்ட கருத்துக்கள் திருக்குறளில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதை தக்க ஆதாரங்களுடன் வெளிக் கொணர்கின்றது இந்நூல் மேற்குறித்த கல்விச் சிந்தனையாளர்கள் யாவரும் சமூகத்திற்கும் கல்விக்கும் இடையிலாக உறவு குறித்து சிந்தித்ததை விட, கலைத்திட்டத்தின் மூலம், பாடத்திட்டத்தின் மூலமான சமூகத்திற்கு பொருத்தமான நற்பிரஜையை உருவாக்குவதையே தமது இலக்காக கொண்டு செயற்பட்டனர். இவர்களின் சிந்தனையில் சமத்துவமற்ற சமூக அமைப்பு குறித்தோ அதனடியாக வெளிப்பட்டு நிற்கின்ற வறுமை, வேலையின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், களவு, பொய், மோசடி, ஏமாற்று என்பன குறித்தோ அவற்றினை உருவாக்கும் சமூக அமைப்பு குறித்தோ கவனமெடுக்க தவறிவிட்டனர். எனவே எல்லோருக்கும் பொதுவான, கல்வி முறையை முன் மொழிந்தார்கள். அச்சிந்தனை யதார்த்ததிற்கு பொருத்தமற்றதாக அமைந்திருந்தது.

கல்வியானது எல்லோருக்கும் பொதுவானது என சிலர் தத்துவம் பேசினாலும், ஒரு வர்க்க சமூகவமைப்பில் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கேற்பவே கல்வி முறையும் அமைந்து காணப்படும் என்பது சமூக நியதி. அந்தவகையில் சொத்துடமை சமூகத்தில் உடமை வர்க்கத்தின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான நற்பிரஜைகளை உருவாக்குவது கல்வியின் அடிப்படை இலக்காகும். திருக்குறளில் எவ்வாறு இவ்வேறுபாடுகள் களையப்பட்டு சகலருக்கும் சமமான கல்வி வழங்கப்படவேண்டும் என்ற சிந்தனை முன் வைக்கப்படுகின்றது என்பதை இந்நூலாசிரியர் தக்க ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியிருக்கின்றார். இது தொடர்பில் நூலாசிரியரின் பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது:

திருக்குறள் சமத்துவநெறிக்கு முதன்மையளிக்கையில் சமஸ்கிருத இலக்கியங்கள் பாலின சாதி பேதங்களை நியாயப்படுத்தியதற்கான காரணம் ஆராயத்தக்கது. ஒரு அடிப்படையான விடயத்தை மட்டும் இங்கு குறிப்பிடுதல் அவசியம். கௌடலியம் மகதப்பேரசு உருவாக்கத்திற்கு கட்டியம் கூறியது: ஏனைய இரண்டும் குப்தப் பேரரசுக்கு முன்னோட்டமாய் அமைந்தவை. அத்தகைய பேரரசுகளை உருவாக்க முனையும் சிற்றரசர்களுக்கான படைப்புகளாய் அவை அமைந்தன. சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கட்டிக் காத்து சுரண்டும் வர்க்கத்தினருடைய சுகபோக வாழ்வை உத்தரவாதப்படுத்தி உழைப்பு சக்தி முழுவதையும் பிரயோகிக்க செய்துவிட ஏற்றதாக அரசு அமைவதற்கு வழிகாட்டுவன அந்த இலக்கியங்கள். மாறாக எந்த அரசையும் தனது வாசகப் பரப்பாக கொள்ளவில்லைத் திருக்குறள். முழுச்சமூகத்தையும் முன்னிறுத்துவது போலவே அரசுக்குரியவற்றையும் முன்மொழிகிறது திருக்குறள்.

மேற்குலக கல்விச் சிந்தனை மரபில் கிரேக்க சிந்தனை மரபின் தாக்கம் அதிகமானதாகும். கிரேக்க சிந்தனை மரபில் சாக்கிரடீஸின் சிந்தனை மரபின் தொடர்ச்சியான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலானோரின் காலத்தில் கிரேக்க நாடு பலவிதமான அரசியல் குழப்பங்களுக்கும் முறைக்கேடுகளுக்கும், ஒழுக்க கேடுகளுக்கும் உட்பட்டிருந்த காலப்பகுதியாகும். எனவே இவர்களின் சிந்தனைகளில் அரசியல் அறிவியல் தொடர்பான கருத்துக்களே அதிகம் தாக்கம் செலுத்தக் கூடியவையாக அமைந்திருக்கின்றன. கல்விக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவை முதன் முதல் கல்வி உலகில் அறிமுகப்படுத்திய பிளேட்டோ ஆளும் வகுப்பினரையும் ஆள்வோரையும் ஞானமுள்ளவர்களாகவும் சுயநலனற்ற நற்பண்புடையோராகவும் மாற்றுவதே கல்வியின் அடிப்படை இலட்சியம் என வலியுறுத்தினார். அரிஸ்டாட்டில் காலத்தில் கிரேக்க நகர அரசுகள் பல மாசிடோனிய மன்னனால் வெற்றி கொள்ளப்பட்டு ஐக்கியப்பட்டு பேரசின் ஆதிக்கம் நிலவியது. இந்த சூழலில் இவர்களின் கல்விப் பற்றிய சிந்தனை அரசு தழுவியதாக அமைந்திருந்தது. இதனை நாம் வட இந்திய கல்விச் சிந்தனை மரபிலும் காணக்கூடியதாக உள்ளது. சாணக்கியன் முதலானோர் மகத பேரசுக்கு உரித்தான கல்வி முறையினை முன்மொழிந்தனர். கௌத்தம புத்தர் அறம் சார்ந்த கல்வியை வலியுறுத்தயிருந்த போதும் அக்கல்வி முறையினை பரப்ப அரசு தேவையென்றவகையில் பிம்பிசாரனை ஆதரித்து இருந்த நிலையினை காணலாம். ஒரு வகையில் இச்சமூகவமைப்பில் அரசு தோற்றம் பெற்று நிலையூன்றியிருந்தமையினால் இவர்களின் சிந்தனை முறைகளிலும் இதன் தாக்கத்தை காணக்கூடியதாக இருந்தது. ஆனால் தமிழகத்தின் சமூக நிலைமை வேறு விதமாக அமைந்திருந்தது. அதாவது சங்ககாலத்தில் இனக்குழு வாழக்கை முறையில் தோன்றியிருந்த மூவேந்தர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியில் விவசாயம் கீழ் நிலை எய்துவதும், உழைப்பும் உழைப்பாரும் கீழாக பார்க்கக் கூடிய காலப்பின்னணி அது. இந்த சூழலில் திருக்குறள் எவ்வாறு ஒரு வர்க்கச் சார்பற்ற நூலாக தோன்றியது என்பதை நூலாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

வணிக வர்க்கம் அதிகார வலுவை உறுதியாகப் பற்றிவிட்ட காலத்தவையான சிலப்பதிகாரம், மணிமேகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நூல்களின் சமண, பௌத்த சார்புபோலக் குறளில் வணிகச்சார்புத் தத்துவக் கூறுகள் முழு ஆளுமையுடன் மேலாதிக்கம் கொள்ளவில்லை. அதேவேளை விவசாய வாழ்முறை மாற்றுத் தத்துவமான வைதிக நெறிகள் சார்ந்து முழுதாய் நிலத்துடன் பிணைக்கப்பட்ட சாதியப் பிளவுகளை வாழ்த்தி வரவேற்றிடவுமில்லை. வரலாற்று மாற்றத்தின் முற்போக்கான அம்சங்களை உள்வாங்கியதில் வணிகவர்க்கச் சார்பை கொண்டிருந்த அதேவேளை, வறுமையை வளர்ப்பதற்கு ஏதுவான- உழைப்புக்கு எதிரான வணிக கருத்தியல் பண்புகளிலிருந்து விலகிநிற்க குறளால் முடிந்தது. ஏரின் பின்னது உலகம் எனப் பிரகடனப்படுத்தியதன் வாயிலாக வணிகவர்க்கப் பக்கமான முழுச்சாய்விலிருந்து மீண்டது. இத்தகைய மாற்றம் காலச் சூழலில் பேணிக் கொண்ட சமநிலையின் பேறெனலாம்.

அந்தவகையில் எல்லோருக்கும் சமத்துவமான கல்வியை வழங்க வேண்டும் என்ற சிந்தனை திருக்குறளின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளதை வரலாற்று அடிப்படையிலும் தக்க ஆதாரங்களுடனும் ஆசிரியர் வெளிக் கொணர்ந்துள்ளார்.

பல நூறாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய திருக்குறளில் இன்றைய கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளது என்பதனையும் இந்நூல் அழகுற எடுத்துக் காட்டுகின்றது. இன்று யுனெஸ்கோ அறிக்கையில் முன் வைக்கப்பட்ட கல்வியின் நான்கு தூண்களாக அறிதலுக்காக கற்றல் எனும் விடயம் திருக்குறளில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடமை எனும் அதிகாரங்களில் எவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளது எனவும், செயலாற்றலுக்காக கற்றல் எனும் இரன்டாவது விடயம் திருக்குறளில் வினைநுட்பம், காலமறிதல், வினை செயல்வகை, போன்ற அதிகாரங்களில் வெளிக்கொணர்வது பற்றியும், சேர்ந்து வாழக் கற்றல் எனும் மூன்றாவது விடயம் திருக்குறளில் வாழ்க்கை துணைநலம், இல்லறம், மக்கட்பேறு, அன்புடமை முதலிய அதிகாரங்களில் வெளிக் கொணர்வது பற்றியும் வாழ்வதற்காக கற்றல் எனும் நான்காவது விடயம் மக்கட் பண்பு நலம் எனும் அதிகாரத்தில் எவ்வாறு சிறப்பாக வெளிக் கொணரப்பட்டுள்ளது என்பது பற்றியும் ஆய்வு நிலை நின்று வெளிப்படுத்தியிருப்பது சிறப்பானதாகும். திருக்குறளில் கல்விச் சிந்தனை என்னும் இந்நூல் திருக்குறள் ஆராயச்சி வரலாற்றில் ஒரு புதிய வரவு என்பார் பேராசிரியர். இ. சுந்தரமூர்த்தி. திருக்குறள் ஆராய்ச்சி துறையில் மாத்திரமன்று கல்வித்துறை சார்ந்த ஆராய்ச்சி வரலாற்றிலும் இந்நூல் புதிய வரவாக அமைந்துள்ளது எனலாம்.

இங்கு சமூகமாற்ற சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள் மாற்றுக் கல்விக்கான சிந்தனையை முன் வைத்தார்கள். அத்தகைய தமிழியியல் சூழலில் அத்தகைய சிந்தனைக்கான அடித்தளம் திருக்குறளில் இருப்பதை இந்நூலின் ஊடாக அறிய முடிகின்றது. எதிர் காலத்தில் திருக்குறளில் வெளிப்பட்டுள்ள கல்வி சிந்தனையை பாரதியார், மற்றும் மார்க்சிய சிந்தனைகளின் கல்விக் கொள்கைகளுடன் ஒப்பு நோக்குவதன் மூலமாக சுதந்திரமான கல்வி ஆய்வுகளை வெளிக் கொணரலாம். இத்தகைய ஆய்வுக்கு இந்நூல் வழிகாட்டியாக அமைந்துள்ளது எனக் கூறின் தவறாகாது.

(திருக்குறளில் கல்விச்சிந்தனை எனும் நூலின் விமர்சனம் அல்ல இக்கட்டுரை. கல்வியியல் சிந்னைகளுக்கான அடிநாதமாக இக்கட்டுரை விளங்குகிறது. கல்விசார்ந்த,சாராத அனைத்து தரப்பினராலும் வாசிக்கப்படவேண்டிய ஓர் உன்னதமான

சுற்றாடலில் ஏற்படும் சிதைவு, தொழில்நுட்பத்தினால் ஏற்படும் தொந்தரவுகள், பொருளாதார நெருக்கடி, வறுமை என்பவற்றைப் பொறுத்தவரையில் ஒத்துழைப்பினால் சில நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு. வறுமைக்கு எதிரான போராட்டத்திற்கு அறிவானது ஆற்றல் மிக்க ஒரு கருவியாகும். ஆனால் அப்போராட்டம் அடிக் கட்டமைப்புக்களை நிர்மானித்தல், நுண்முறை (Micro) செயற்றிட்டங்களைத் தொடங்குதல் (இவை ஒவ்வொன்றும் நீடித்து நிலவ பெரும்பாலும் வெளிநாட்டு நிதி தேவை) அல்லது நிறுவனப் பொறிமுறைகளை மேம்படுத்தல் என்பவற்றோடு நின்றுவிடக் கூடாது. குறைந்த விருத்தியுடைய நாடுகளின் விடயத்தில் இது கேள்விக் கிடமாக்கப்படும் அடிக்கட்டமைப்பும் ஆற்றலைக் கட்டியெழுப்புதலும் முக்கியமானவை தாம். பல கிழக்கு நாடுகளும் தென்கிழக்காசிய நாடுகளும் அடைந்த வெற்றிக்கு அவை கடந்த தசாப்தங்களில் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் செய்த பெரும் முதலீடு ஒரு பிரதான காரணம். இது வளர்முக நாடுகளுக்குப் பயன்படக் கூடிய ஒரு உதாரணமாகும். இயலுமையை ஒழித்துக் கட்ட உதவிய இவ்வனுபவங்களில் இருந்து வளர்முக நாடுகள் பல பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு நோக்குமிடத்து அறிவார்ந்த சமூகங்கள் என்ற சிந்தனை வடபுல நாடுகளின் தொலைநோக்கைக் கொள்ள வேண்டியதில்லை. அவை புதிய தொலைநோக்கினை உருவாக்கிக் கொள்ள முடியும். தென்புல நாடுகளுக்கு பொருத்தமான அபிவிருத்தி அணுகுமுறையாக அது அமைய முடியும்.

UNESCO (2005 - 2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரணத்துவமான கல்வி
# (Holistic Education)

**சாந்தி சச்சிதானந்தம்**
தவிசாளர்
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்

### அறிமுகச் சுருக்கம்

கல்வி கற்பிக்கப்படுவதற்கான தேவைகள் காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம் மாறுபாடடைந்து வந்திருக்கின்றன. வாழ்க்கையை நடத்தக்கூடிய வாழ்க்கைக் கல்வியுடன் ஆரம்பித்த இந்த வரலாறு, பின்பு சமூகங்கள் சிக்கலான கட்டமைப்புக்கள் கொண்டவையாக மாற மாற, அவற்றின் ஆளும் வர்க்கங்களின் தேவை கருதி வனையப்படுவதாகத் தொடர்ந்தது. கல்வி முறைகளுக்குள் ஓர் சமூக அரசியல் சித்தாந்தம் இருப்பதை இனம் கண்டு கொண்டால் இந்த வரலாற்றைப் புரிந்து கொள்ளலாம். ஆயினும், 20ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் மனிதர்களை மனிதாபிமான உணர்வு மிக்கவர்களாக மாற்றுவதே கல்வியின் குறிக்கோளாகும் என்கின்ற சிந்தனை மாற்றுக் கருத்தியலாளர்கள் மத்தியில் வளரலாயிற்று. ஒவ்வொருவரும் தாம் கொண்டுள்ள வித்தியாசமான ஆற்றல்களினை விருத்தி செய்யவும், சுயாபிமானம் மிக்கவர்களாக தன்னம்பிக்கை கொண்டு வாழ பிற மனிதர்களுடனான உறவுகளில் சம நிலையைப் பேணும் உயரிய பண்பைக் கொள்ளவுமே கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று இவர்கள் வாதிட்டனர். இக்கல்வியைப் போதிக்கவெனவே பிரத்தியேக பாடசாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஆயினும், உத்தியோகம் பெறுவதே கல்வியின் முதல் நோக்கமாக இருப்பதால் இவை இன்னமும் மாற்று கலாசாரங்களாக இருக்கின்றனவே தவிர பிரதான நீரோட்டத்தில் இயங்குகின்ற பாடசாலைகளாக வளரவில்லை.









இன்று சகல பெற்றோர்களுக்கும் தங்களது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைக் கொடுப்பதுதான் மிகப்பெரிய கவலையாக இருக்கின்றதைப் பார்க்கின்றோம். அவர்களுடைய கவலை நியாயமானதுதான். ஆனால் அவ்வகையான சிறந்த கல்வி என்றால் எப்படி இருக்கும், அதனை எதைக் கொண்டு அளவிடலாம் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. இந்தக் கட்டுரை நல்ல கல்வி என்றால் என்ன, அதன் நோக்கங்கள் எதுவாக இருக்கலாம் போன்றவற்றை ஆராய்கின்றது. பாரம்பரிய முறைகளிலிருந்தும் மாற்றுச் சிந்தனை முறைகளிலிருந்தும், எமது காலத்துக்கும் கலாசாரத்திற்கும் பொருத்தமான கல்வி முறையைத் தெரிவு செய்வது எப்படி என்கின்ற கேள்விக்கு விடை காண எத்தனிக்கின்றது.

### நவீன பாடசாலைக் கல்வியின் ஆரம்பம்

மனித இனம் வாழ்ந்த காலந்தொட்டு பலவகையான கல்வி முறைகள் எங்கள் மத்தியில் இருந்திருக்கின்றன. ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கையைக் கொண்டு நடத்தத் தேவையான அறிவைக் கல்வியாகப் போதிக்க ஆரம்பித்தது. மனித சமுதாயம் ஆதிக்குடிகளின் வாழ்க்கையில் பார்த்தீர்களானால், வயது முதிர்ந்த சந்ததியினரின் ஆலோசனைப்படி வழிநடக்கின்ற இளைஞர் சமூகத்தைக் காணலாம். வாழ்க்கையைப் பற்றிப் பெரியோரிடமிருந்து கற்றுக் கொண்டவற்றைக் கொண்டு பிற்காலத்தில் இவர்கள் தலைமைப் பதவியை அடைகிறார்கள். சமூகங்கள் வளர்ந்து பரந்து விரிவடைய, மனிதர்கள் அறிய வேண்டிய விடயப்பரப்பும் அதிகமாகியது. குருகுலங்கள் தோன்ற ஆரம்பித்தன. இதில் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குருவுடன் ஒரு சில மாணவர்கள் பல வருடங்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றனர். அவர்கள் நாளும் பொழுதும் அக்குருவுடன் வாழ்ந்து கற்றுக் கொள்ளுவதன் மூலம் பல்வேறு நூல்களைப் பற்றிய தங்கள் அறிவை ஆழமாக்கிக் கொண்டார்கள். இதே போலவே தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், மற்றும் கலைஞர்கள் தங்கள் தொழிலைச் செய்யும் பட்டறைகளில் தம்மைச் சிறுவயது முதல் இணைப்பதன் மூலம் தொழிலைக் கற்றுக் கொண்டார்கள். அனேகமாக இவையெல்லாம் அக்காலங்களில் குடும்பத் தொழில்களாகவே தொடர்ந்து வந்தன. அதுவே அவர்களுடைய கல்வியாயிற்று. சில மத நிறுவனங்களும் சின்னச் சின்னப் பள்ளிக்கூடங்களைத் தாபித்து முக்கியமாக சமய நெறிகளைப் போதித்து வந்தன. இங்கு மதநூல்களை வாசித்தறிந்து கொள்ளும் தேவைக்கெனவே எழுத்தறிவும் ஊட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்த முயற்சிகளெல்லாம் ஒரு சிறு மாணவர் குழுவுக்கே சென்றடைந்தன என்பதை நாம் உய்த்தறியலாம். சகல மக்களும் எழுத, வாசிக்க, சிந்திக்க வேண்டும் என்கின்ற ரீதியில் சகலருக்குமான கல்வி முறை எங்களுக்கு முதன் முறையாக ஐரோப்பியரின் ஆட்சியிலேயே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அந்தக் காலத்தில் ஐரோப்பாவில் சகலருக்குமான கல்வி என்பது பல போராட்டங்களின் மூலம் நிலைநாட்டப்பட்டு விட்டதே இதற்குக் காரணமாகும்.

ஐரோப்பாவில் சகலருக்கும் கல்வி வேண்டும் என்கின்ற கோரிக்கை ஆரம்பித்தது ஒரு சுவாரசியமான வரலாறாகும். மக்கள் கொத்தடிமைகளாக ஒரு சில நிலச்சுவான்தார்களின் காணிகளில் பரம்பரை பரம்பரையாக வேலை செய்து வந்த நிலப்பிரபுத்துவ முறை நிலவி வந்த காலம் 17ம் நூற்றாண்டு. தொழில் நுட்பம் வளர்ந்ததாலும் புதிய சந்தைகள் சர்வதேச ரீதியில் கண்டு பிடிக்கப்பட்டதாலும் உற்பத்தியைப் பெருக்கும் முதலாளித்துவ அமைப்பு தானும் சமாந்திரமாக விரைவாக வளர்ந்து வரலாயிற்று. ஊர்கள் தோறும் முதலாளிகள் தொழிற்சாலைகளைக் கட்டி பலவிதமாக உற்பத்திகளைப் பெருக்கினர். ஆனால் இந்த தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்குப் தொழிலாளர்கள் குறைபாடு ஒரு பெரிய பிரச்சினை ஆகிற்று. அதுவும் வடிமானமாக இருந்து சொல்லிக் கொடுப்பதைக் கிரகித்து, இயந்திரங்களை இயக்கி, தரமாக உற்பத்தியைச் செய்யக்கூடிய வினைத்திறன் மிக்க தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். ஆனால் தொழிலாளவர்க்கமோ இன்னமும் வெளியே வர முடியாமல் நிலச்சுவான்தாரர்களிடம் விவசாயிகளாக அடிமைகளாகி எழுத வாசிக்கவே தெரியாமல் கிடந்தது. அவர்களை வெளிக்கொண்டு வந்து தங்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்விக்க வேண்டுமென்றால், முதலில் அவர்கள் தங்கள் நிலங்களிலிருந்து விடுவிக்கப்படவேண்டும், அடுத்தது அவர்கள் அடிப்படையான கல்வியையேனும் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே சுதந்திரம், சமத்துவம் என்கின்ற கோஷம் உருவாகி, சகலருக்குமான கல்வி என்கின்ற கோரிக்கையும் முதலாளித்துவவாதிகளால் முன்வைக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் காரணமாக கூலி விவசாயிகள் தங்கள் ஊர்களிலிருந்து விட்டு விடுதலையாகி தாம் விரும்பிய இடத்திற்குச் சென்று வேலை செய்யும் உரிமை பெற்றார்கள். ஊருக்கு ஊர் பாடசாலைகள் நிறுவப்படலாயின.

இந்த வரலாற்றிலிருந்து, மக்களை நல்ல தொழிலாளர்களாக விருத்தி செய்யும் நோக்கத்துடனேயே முதன்முதலில் பொதுப் பாடசாலைகள் நிறுவப்பட்டன என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். அந்தக் கல்வி முறையையே எங்கள் காலனித்துவ ஆட்சியாளர்கள் எங்கள் நாட்டுக்குக் கொண்டு வந்தனர். இங்கு அது இன்னும் ஒரு படி தாண்டி, காலனித்துவ ஆட்சியாளர்களின் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பதற்குத் தேவையான திறன்களை வளர்க்கும் கல்வி முறையாக சற்றே மாற்றி அமுல்படுத்தினார்கள். அதாவது, ஒரு கிளார்க் உத்தியோகம் பார்க்க மட்டும் உதவும் கல்வியாக, வேறெந்தத் தொழிலைப் பற்றியும் ஒரு அறிவையும் வழங்காத கல்வியாக எங்கள் கல்வி முறை இருந்தது. அது மட்டுமல்லாது, அக்கல்வி எங்களுடைய பாரம்பரிய அறிவினை இழிவு படுத்தும் கல்வியாகவும் வெள்ளைக்காரர்களுடைய கலாசாரத்தையும் அறிவையும் சிலாகித்துக் கூறும் கல்வியாகவும் இருந்தது. அந்த முறையிலிருந்து நாம் எவ்வளவோ மாறியிருந்தாலும்கூட, இன்னமும் அரசாங்க உத்தியோகத்தினை (அல்லது அலுவலகங்களில் வேலை செய்யும் வெள்ளைக் கொலர் தொழில்) செய்வதற்கான படிப்பு முறையிலிருந்து நாம் அவ்வளவு மாற்றம் காணவில்லை என்றே கூற வேண்டும். இன்னமும் மாணவர்கள் தாங்கள் படித்துப் பட்டதாரிகளாகி அரசாங்க உத்தியோகம் பெறத்தான் பாடுபடுகின்றனர். கோழி மேய்ச்சாலும் கோர்ண்மேந்தில மேய்க்க வேணும்.. என்ற பழமொழி இன்னும் பொய்த்து விடவில்லை.

### கல்வியின் பயன்

எங்கள் சமூகங்களில் பொதுவாகவே நல்ல உத்தியோகம் (அதன் மூலமாக உயர்ந்த சமூக அந்தஸ்து, தொடர்ந்த வருமான நிலைமை) எடுப்பதற்கான கருவியாகவே கல்வி பார்க்கப்படுகின்றது. எனவே பரீட்சைகளில் சித்தி பெற்று உயர்கல்விக்குள் நுழைந்து பெரிய பட்டங்கள் பெற வேண்டும் என்பதே எமது கல்வியின் இன்றைய குறிக்கோள். பட்டங்கள் எடுத்தவர்களுக்குத்தான் உயர் உத்தியோகங்களும் வழங்கப்படுகின்றன. பட்டங்கள் எடுப்பதற்கான நுழைவாயில் எங்களுடைய பரீட்சைகளும் புள்ளிகள் வழங்கும் கட்டமைப்புமாகும். தங்கள் பிள்ளைகளின் படிப்பைப் பற்றி எந்தப் பெற்றோரைக் கேட்டாலும் அந்தப் பிள்ளை பரீட்சையில் பெற்ற புள்ளிகள், அல்லது வகுப்பில் பெற்ற இடம் என்று இவ்வாறு அந்தப் பிள்ளையின் பரீட்சைப் பெறு பேறுகளைப் பற்றி மட்டும்தான் பேசுவதை நாம் காணலாம். பரீட்சைகளில் நல்ல புள்ளிகள் எடுப்பதை நிச்சயப்படுத்தவே போதனா வகுப்புக்கள் இன்று ஒரு பாரிய தொழிற்றுறையாக வளர்ந்திருக்கின்றது. பரீட்சைகள்தான் பிள்ளைகள் பெற்ற கல்வியின் தரத்தை அளவிடும் ஒரே அலகாக இருப்பதனால் இது தவிர்க்க முடியாததாகும். ஆனால், பரீட்சையில் தேறும் அறிவுச் செயற்பாடு மட்டுமே ஒரு பெண்ணையோ ஆணையோ சமூகத்திற்கு பயனுள்ள உறுப்பினர் ஆக்காது என்பது கண்கூடு. எமது இன்றைய கல்வி முறைகள் என்னவகையான மனிதர்களைத் தோற்றுவிக்கின்றன என்பதை சிறிது பார்த்துவிட்டு மேலே செல்லலாம்.

### சொன்னதைச் செய்யும் சுப்படகளாய் இருத்தல்

எந்த வேலைக்கும் சில பல நோக்கங்கள் உண்டு. அவற்றை முறையே விளங்கிக் கொண்டு இருக்கும் வளங்களை வைத்துக் கொண்டு அந்த நோக்கங்களை அடைவதற்கான செயற்பாடுகளைச் செய்வதுதான் வேலையாகும். ஒருவர் எப்படி தங்களுக்குக் கிடைத்த வளங்களையும் வாய்ப்புக்களையும் உபயோகித்து, புதுவிதமான அணுகுமுறையுடன் வேலையை இரட்டிப்பாகச் செய்தனர் என்பதில்தான் அவரவருடைய புத்தாக்கத் தீர்வுகள் பிரசன்னமாகின்றன. இவ்வாறு சவால்களை ஏற்றுக்கொள்வதினால்தான் கற்றுக்கொள்ளவும் முடிகிறது. ஆனால் இன்று எங்களுடைய அலுவலகங்களில் இப்படி வேலை செய்பவர்கள் ஆயிரத்திலொருவரே. மற்ற எல்லோரும் சொன்னால் சொன்னபடி செய்து விட்டு அடுத்த கட்டளைக்காகக் காத்திருப்பவர்களாகும். அனேகம் பேர் பொறுப்பெடுக்கக்கூடப் பயப்படுவார்கள். இப்படியானவர்கள் தொடர்ந்து கற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் இல்லாததனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட் செல்லச் செல்ல அவர்களுடைய சிந்தனா ஆற்றல்கள் மழுங்கித் தேய்ந்து போய்விடும். சகல அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் பொதுவாகவே வேலைகள் எல்லாமே வினைத்திறன் இன்றி அலம்பலாகவும் தாமதமாகவும் செயற்படுத்தப்படுவது இவர்களினால்தான்.

### கருணை, இரக்கம், அனுதாபம் இன்றிய மனிதர்கள் பெருகுதல்

மனிதர்களின் கூட்டான வாழ்க்கைக்கு இவை இன்றியமையாத உணர்வுகளாகும். இதில் அனுதாபம் (empathy) என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, இன்னுமொருவரின் நிலைமையை உய்த்து உணர்வதுதான் அந்நிலை. எமது சக மனிதர்களின் உள்ளார்ந்த தேவைகளைப் புரிந்து கொள்ளும் கூருணர்வு இல்லாதவர்களே இன்று அதிகமாகும் என்றால் மிகையாகாது. ஒரு ஜீவனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது சட்டம் கதைக்கும். யுத்தக் கோரங்களுக்கு மத்தியில்கூட தான் மட்டும் எப்படியாவது ஏதாவது இலாபம் ஈட்டுவதற்காய் அலைகின்ற இயல்பிற்கு இது இட்டுச் செல்லும். இயற்கையுடனும் சக மனிதர்களுடனும் சுமுகமான உறவுகளைப் பேணும் அறிவு வளரும்போதுதான் காருண்யம், அனுதாபம் போன்ற இயல்புகள் மேம்படுகின்றன. இவையில்லாத மனிதர்களை மிருகங்கள் (இது பொருத்தமில்லாத உதாரணமென்றாலும்) என்றுதான் பொதுவாக அழைப்பர்.

### சமூகப் பொறுப்பும் நேர்மையும் கொண்ட மனிதர்கள் குறைதல்

தான் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதை உணர்ந்த மனிதர்கள் சமூகத்துக்காய் பல கடமைகளைச் செய்யத் தயங்க மாட்டார்கள். எங்கும் எப்பொழுதும் சம்பளம் எதிர்பார்க்காமல் தொண்டுகள் பலவற்றில் ஈடுபடுவார்கள். சம்பளம் வாங்குகின்ற வேலை செய்தாலும் கூட வாங்கிய சம்பளத்துக்காய் சிரத்தையுடன் வேலை செய்வார்கள். ஆனால் எங்களது அலுவலகங்களைச் சுற்றிப் பாருங்கள். "எனக்கு நல்ல வேலையப்பா? முக்கால்வாசி நேரம் சும்மா இருக்கலாம்.." என்று சொல்வார்கள். களப்பார்வைக்குப் போகின்றேன் என்று சொல்லி விட்டு குஷாலாக வீட்டில் நிற்பார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டுப் படித்து வேலை எடுத்தது சும்மா நேரம் போக்கத்தானா என்று கேட்க வரும். இலஞ்சம் வாங்குவார்கள்,"சம்பளமில்லாத உத்தியோகம்.." என்று தொண்டர் வேலைகளைப் பொதுவாகவே இழிவாகப் பேசுவார்கள். இந்த இயல்புகள் பிற மனிதர்களுடனான உறவுகளைப் பேண முடியாத, சமூகத்துடன் ஒன்றித்து நிற்க இயலாத அறிவுக் குறைபாட்டினால் ஏற்படுகின்றது.

### முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளும் தன்மை அதிகரித்தல்

இன்று ஆராய்ந்து பார்த்தால் உட்பூசல்கள் இல்லாத அலுவலகமே இலலை என்று சொல்லலாம். அதே போல தகராறுகள் இல்லாத குடும்பங்களைக் காட்டக் கஷ்டப்படுவோம். ஒருவர் எமது கருத்துக்கு எதிர்வாதம் செய்தாலே அவரை ஜன்ம எதிரியாகப் பார்க்கும் நிலை; ஒருவருடைய நிலையில் நின்று அவருடைய கண்ணோட்டத்தில் பிரச்சினையை நோக்கி அனுதாபப்படமுடியாத இறுக்கம்; இருவருக்கிடையில் ஏதாவதொரு புரிந்துணர்வின்மை ஏற்பட்டால் உடனேயே நேருக்கு நேர் முகம் பார்த்து உண்மையை விளக்கி அந்த முரண்பாட்டைத் தீர்க்கும் தைரியமின்மை; இவையெல்லாம் சேர்ந்து எங்களை ஒருவருக்கொருவர் எதிராளிகளாக ஆக்கியிருப்பதுதான் உண்மை. ஒன்றாகச் சேர்ந்து ஒரு நோக்கத்துக்காகப் பாடுபடத் தெரியாத சமூகமாக நாம் மாறியிருப்பதுதான் இதன் பரிதாபமாகும். இதே விதமான குறைத் தொடர்பாடல்களை நாம் எமது அரசியலிலும் தொடருகின்றோம். அதனால்தான் எங்களது அரசியலிலும் இவ்வளவு வன்முறை வளர்ந்து விட்டது. எதையும் அடித்து மிரட்டிச் சாதிக்க முயல்கின்றனர் என்பதைவிட, அதைப் பார்த்து நிற்கும் சமூகமும் அந்த அரசியல் தலைவர்களுக்கு தமது ஆதரவினைத் தெரிவித்து நிற்பதுதான் மிக மோசமான விளைவாகும். ஆன்மீக அறிவின் முதிர்ச்சி இல்லாத காரணத்தினாலேயே இந்தக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

தன்னுடைய சக ஊழியர்களின் திறமையைத் தட்டிக் கொடுத்து வளர்க்க இயலாத்தன்மையும், தன்னுடைய பதவியைப் பற்றிப் பிடிக்கும் பேராசையும் மலிந்து விடல் தங்களுடைய ஆற்றலில் நம்பிக்கை இன்றிய மனிதர்களே சக மனிதர்களை வளர விடாதவர்களாவார்கள். இவர்கள் தங்களுடைய பதவிகளிலும் தங்களுடைய பட்டங்களிலுமே அதீத நம்பிக்கை கொண்டவர்கள். அந்த நம்பிக்கையில் ஒரு எள்ளளவும்கூட தங்கள் மீது இல்லாததால் இவற்றின் மூலம்தான் தங்களுடைய பெறுமதியை உலகுக்குக் காட்ட முடியும் என்று நினைத்து மயங்குகின்ற மனிதர்கள் ஆவார்கள். அதனால்தான் கிடைத்த பதவியை விட்டுக் கொடுக்க முடியாமல், அதற்குள் மற்றவர்களை வர விடாத சின்னத்தனமான சதித் திட்டங்களிலெல்லாம் ஈடுபடுவார்கள். அது மட்டுமல்லாது இவர்கள் திட்டமிட்டு தங்களிலும் திறமை குறைந்தவர்களைத்தான் தங்கள் உதவியாளர்களாகப் பதவிகளில் அமர்த்துவார்கள். வந்தவரும் அப்படியே நடக்க தரம் குறைந்த அந்தப் பாரம்பரியம் அந்த அலுவலகத்தில் காலம் காலமாய்த் தொடர்ந்து போய்க்கொண்டு இருக்கும்.

இது அலுவலகங்களில் மட்டுமில்லாது எமது சமூக நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் ஆகிய எல்லாவற்றிலும் மலிந்து விட்டது. ஒவ்வொரு தலைவரும் தான் சாகும்வரை தலைமைப் பதவியிலிருக்கவே ஆசைப்படுகின்றார். அவரை அகற்ற வேண்டுமானால் ஏனைய அங்கத்தவர்கள் பாரிய சதித் திட்டங்களைத் தீட்டித்தான் அகற்ற வேண்டும் என்கின்ற நிலைமை. இது எவ்வளவு பண்பற்ற நடத்தை என்பதைக்கூட எமது சமூகம் உணர்வது கிடையாது.

சுயமரியாதையும் சுய கௌரவமும் தன்னம்பிக்கையும் கொண்டவர்கள், யாரைப் பார்த்தும் அவர் தனக்கு போட்டியாக வந்து விடுவோரோ என்று நினைத்துப் பயப்பட மாட்டார்கள். சக ஊழியர்கள் சிறப்பாகச் செய்தால் முழு மனதோடு தட்டிக் கொடுத்து அவர்களையும் வளர்த்து விடுகின்ற பண்பு கொண்டிருப்பார்கள். தங்கள் ஆற்றலில் முழு நம்பிக்கை கொண்டு தங்கள் பதவிக்காலம் முடிவுற்றவுடன் மிக்க கௌரவத்துடன் வேறு கடமைகளை நோக்கிச் சென்று விடுவார்கள். இந்த இயல்புக் குறைபாடு தன்னகத்துடன் தான் கொள்ளும் உறவினைப் பேணி வளர்க்க முடியாத அறிவுக் குறைபாட்டினால் ஏற்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980கள் தொடங்கி இந்தக் கல்வி முறை விமர்சனத்துக்குள்ளாக்கப்படத் தொடங்கியது. குடும்ப மற்றும் சமூக வன்முறையில் ஈடுபடுவதும், வெறும் பண இலாபத்துக்காக ஈடுசெய்யமுடியாத இயற்கைச் சூழலை கண் மண் தெரியாமல் மாசுபடுத்தி இந்தப் பூமியில் வாழும் சகல சீவராசிகளுக்கும் அச்சுறுத்தலைக் கொடுப்பதும், வர்த்தக நன்மைகளுக்காக வேற்று நாடுகள் மீது படையெடுக்கும் அளவுக்கு இழிவான அரசியலைக் கைக்கொள்வதும், போன்ற நடைமுறைகளை அனேக நாடுகளின் சமூகங்களில் கண்டார்கள். இந்த இயல்புகள், இயற்கையை கனம் பண்ணி அதனுடன் ஒருங்கு சேர்ந்து வாழும் சமநிலையைப் பேணி வாழ்ந்த எமது மூதாதையரிலிருந்து எவ்வளவோ வேறுபட்டதைக் கண்டார்கள். இவையெல்லாமே இந்த விமர்சனங்களுக்கு தூபமிட்டன. இதைத் தவிர, அதிகாரத்துக்குக் கீழ்ப்படிவான பிரஜைகளை உருவாக்கும் கல்வி முறையாகவும் இதைப் பார்த்தார்கள். எனவே, என்ன கொடுங்கோலான ஆட்சி முறை நடந்தாலும், அதற்கு சவால் விடுவதற்கான சிந்தனா முறை இல்லாத, அப்படி சவால் விட விரும்பினாலும் செய்வதற்கான தைரியமும் தன்னம்பிக்கையும் இல்லாத சந்ததிகளை இந்தக் கல்வி முறை வளர்த்தெடுக்கின்றது என்று அனேக விமர்சகர்கள் கருதினார்கள். உண்மைதான், வகுப்பறைகளில் ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்கும் விஷயங்களில் தவறு இருந்தால் கூட அதனைக் கேள்விக்குட்படுத்தப் பயப்படும் மாணவ சமூகங்களைத்தான் நாம் உருவாக்கி வைத்திருக்கின்றோம். இவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி வேலைக்குப் போகின்ற காலத்தில், தங்கள் மேலதிகாரிகளுடன் சமமாகப் பழகுகின்ற தைரியம் அற்றவர்களாக, அதே போல் கண்மூடித்தனமாக ஒரு அரசியல் தலைவரை ஆராதனை செய்கின்றவர்களாகத்தான் அனேகமாக இருக்கின்றார்கள்.

மேற்கூறிய பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு மனிதனும் தன்னை இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் வேறாகப் பிரித்து தனியனாகப் பார்க்கும் சிந்தனை முறையினால்தான் அவை தோன்றுகின்றன என்பதை உணரலாம். இந்தப் பூமியில் ஒன்று விடாமல் சகல தாவர உயிரினங்களும் ஒரு சங்கிலித் தொடர் போன்று தங்களுடைய இருப்புக்கு வேறு ஏதாவதொரு உயிரினத்தில் தங்கியிருக்கின்றது. எமது சமூகங்களில் ஒவ்வொரு அங்கத்தவருடைய நல்வாழ்வும் ஏனைய அங்கத்தவர்களுடைய நல்வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றது. ஆனால் எங்கள் கல்வியோ எங்களுக்கும் நாங்கள் படிக்கின்ற பொருளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பதுபோல் பாடங்களை நடத்துகின்றது. நாங்கள் சமூகமாக வாழத் தேவையான விழுமியங்களை கற்றுக் கொடுக்கத் தவறி விட்டது.


எனவேதான் நல்ல கல்வி எது என்று தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தமது சமூகம் பற்றிய ஒரு தரிசனம் வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. என்னவிதமான மனிதர்களை உருவாக்க நாம் விரும்புகின்றோம்? அவர்கள் இந்த சமூகத்தில் என்னவிதமான பாத்திரங்களை வகிக்க வேண்டும் என்று கருதுகின்றோம்? இதில் பெண்கள் என்ன செய்ய வேண்டும், ஆண்கள் என்ன செய்ய வேண்டும்? இவையெல்லாவற்றையும் ஒரு காட்சியாகக் கருத்தில் கொண்டு செயற்பட்டதாலேயே பூரணத்துவமான கல்வி என்கின்ற செயன்முறை உருவாக்கப்பட்டது.

தொடரும்

மாந்தர்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக் கொணர்ந்து விளக்கம் பெறச் செய்வதே கல்வி
- மகாத்மா காந்தி

உண்மை, அழகு, செம்மை முதலியன நிறைந்த வாழ்வில் மக்கள் தம் உள்ளக் கமலம், கூப்பிய கைக் காந்தள், நாட்ட விழி நெய்தல் முதலியவற்றை இறைவனுக்குப் படைத்து மகிழ வேண்டுவது கல்வியின் பயன்
- விபுலாநந்தர்

கல்விக்குப் பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம், கல்வி எ[illegible] அறமும் முக்தியுமாகும். கல்வி என்றென்றும் இளமை பொருந்திய[illegible] உண்மையினை அணிகலனாகக் கொண்டது.
- நாவலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்திக்கு வித்திடும் காரணிகள்

சாமஸ்ரீ தேசமான்ய S.L. மன்சூர்
அட்டாளைச்சேனை.

கல்விக்கு பலரும் பலவிதமான கருத்துக்களை கூறினாலும் டாக்டர் ஆல்பிரட் அட்லர் என்பாரின் கூற்று தைரியமாக வாழ்வதற்கு வகை செய்யக்கூடிய ஒன்றே கல்வியின் குறிக்கோளாக இருக்க முடியும் என்று கூறுகின்றார். அந்தவகையில் எதிர்காலத்தில் சிறப்பான சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதற்குகந்த முறைமையை ஒழுங்குபடுத்துவதும் கல்வியாகும். எது எவ்வாறாக இருப்பினும் இன்றைய காலத்தில் கல்வியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகிறது. இலங்கையின் பாடசாலைக் கல்வியில் பல்வேறு விருத்திச் செயற்பாடுகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் அண்மைக் காலமாக குறிப்பாக 2000ம் ஆண்டிற்குப் பின்னரான காலத்திலிருந்து பாடசாலையின் முகாமைத்துவச் செயற்பாட்டினை உறுதி செய்யும் நோக்கின் அடிப்படையில் தர உறுதிப்பாட்டுக்கான பணிக்கூறுகள் கல்வி அமைச்சினால் அறிமுகப் படுத்தப்பட்டு அவை பாடசாலை மட்டத்தில் அமுல் படுத்தப்பட்டும் வருகின்றன.

பொதுவாக கல்வியின் பண்புத்தரத்தினை உறுதி செய்கின்ற பொறுப்பு நேரடியாக கற்றலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களிடமும், அதனை உறுதிப்படுத்துகின்ற அதிபர் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்கள் மட்டுமின்றி கல்வியதிகாரிகள் அனைவரையும் சார்ந்ததாகவும் அமைகின்றது. நாட்டினது அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக அமைகின்ற கல்வியை அரசு இலவசமாகவே வழங்குவதுடன், இதற்காகவேண்டி பணத்தையும் வாரி வழங்கி வருகின்றது. நமது நாட்டு பாடசாலை முறைமையின் அடிப்படையில் பௌதீகவளம், மனித வளம் என்பனவற்றை உள்ளீடு செய்கின்றபோது அதனை முகாமை செய்யாதவிடத்து விழலுக்கு இறைத்த நீராகி விடும் என்பதனால்தான் எட்டுவகையான விடயங்களைத் தொட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதன் மூலம் தொழில் வாண்மைத்துவத்தில் விருத்தியுற்று சிறப்பான அம்சங்களை பாடசாலையானது சமூதாயத்திற்கு வழங்குவதற்கு வழியேற்படுத்துகின்றது.

தரமான சமூகத்திற்கும் தரமான வாழ்க்கைக்குமான தரமான கல்வி எனப்படுகின்ற தூரநோக்குடன் இயங்குகின்ற தற்கால கல்வியின் நோக்கு வெற்றியடைய பல்வேறு பிரயத்தனங்களை பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்துகின்ற அதேவேளை இதன் வெற்றி ஆசிரியர்களினதும் அதிபர்களான பாடசாலையின் முதற்தர முகாமையாளர்களையும் சார்ந்ததாகவே அமைகின்றது. 2006ஆண்டிலிருந்து பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் கொண்டுவரப்பட்ட வெளிவாரி மதிப்பீடானது(External Assessment) சரியான முறையில் அமைவதற்குகந்த பண்புத்தரங்களை விருத்தியுறச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகின்றது. மிலேனிய நூற்றாண்டு எனப்படுகின்ற இக்கால கட்டத்தில் பிரச்சினைகளையும், சவால்களையும் வெற்றி கொள்வதற்கான பாடசாலைகளை உருவாக்குவதும் அவசியமாகும்.

உலக வங்கியின் கடந்தகால (1989) அறிக்கையின்படி சமவாய்ப்பும் உள்வாங்கல்களும் (Equity and Access) கல்வியின் பொருத்தப்பாடு(Relevance of Education), கல்வியின் பண்புத்தரம்(Quality of Education), வளப்பற்றாக்குறை(Lack of Resources), கல்வியில் வகைகூறலும் பயனுறுதியும் (Accountability & Efficiency) என்கிற விடயங்கள் இன்னும் முற்றுப்பெறாத பிரச்சினைகளாகவே பாடசாலைகளில் இன்றும் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு கல்வியின் பண்புத்தரத்தை விருத்திக்கும் வகையில் முகாமைத்துவ தர உறுதி பேணப்பட்டு கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இவை பின் - பற்றப்படுகின்றன.

இவ்வாறு பின்பற்றப்படுகின்றபோது பாடசாலையினது முறைமையினுள் காணப்படுகின்ற பலம், பலவீனம் போன்றவற்றை இனங்கண்டு வினைத்திறன் மிக்கதோர் பாடசாலையாக்க முடியும். கல்வித்துறை அபிவிருத்தி சட்டகத்தின் கூறுகளாக கருதப்படுகின்ற மிகப் பிரதானமான விடயங்களான சமவாய்ப்பு(Equity), பண்புத்தரம், (Quality), வினைத்திறன்மிக்க வளப்பகிர்வு(Resources Efficiency), நல் ஆளுகை(Good Governance) ஆகிய துறைகளினூடாக பாடசாலையின் மதிப்பீட்டினை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டங்களையும், செயற்றிட்டங்களையும் ஒழுங்கமைத்து தேசிய கல்வித்தரத்தினை ஏற்படுத்த பண்புத்தரத்தின் அடிப்படையில் அமைகின்ற சுட்டிகள் ஊடாக நிறுவனத்தின் வினைத்திறனும், விளைதிறனும் அதிகரிக்கச் செய்வதற்கு குறிப்பாக ஆசிரியர்கள் தங்களது வாண்மைத்துவத்தில் தேர்ச்சிமிக்கவர்களாக மிளிரவேண்டும்.

**கல்வியில் பண்புத்தரத்தின் பயன்பாடுகள் :-**

பாடசாலையின் அனைத்துவளங்களுமே கல்வியின் நோக்கை அடைவதற்கு உதவுதல் வேண்டும். அந்த அடிப்படையில் உரியவாறு நடைபெறுகின்றதா? என்பதைக் கவனிப்பதே மதிப்பீடாகும். இதனைத் தீர்மானிப்பதற்கு குறிப்பிட்ட சில எண்ணக்கருச் சட்டகங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அதில் காணப்படுகின்ற பல சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு பண்புத்தரம் தீர்மானிக்கப்படுகின்றது. இச்சுட்டிகள், நியதிகள், பண்புத்தரங்களுக்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சுய அபிவிருத்திச் செயற்பாடுகளையும், உள்வாரி, மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளையும் செய்வதற்கு பொருத்தமான பண்புத் தரங்களையும், சுட்டிகளையும் பயன்படுத்துவதானது பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் உறுதிப்பாட்டினை அடைந்து கொள்ள உதவுகின்றது.

பண்புசார் தன்மைபற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமான கருத்துக்களை கூறியிருக்கின்றனர். J.M. Juran



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பாரது கூற்றுப்படி தேவைகளுக்குரிய அனுகூலத்தின் மையமே பண்புசார் தன்மையாகும் என்றார். அந்தவகையில் பண்புசார் தன்மையின் உள்ளடக்கமாக பின்வரும் விடயங்களைக் கொண்டு கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்குரிய முகாமைத்துவ நடைமுறையை சக்திமிக்கதாக்க இதனை உள்ளடக்குதல் அவசியமாகும். அவையாவன :-

- செயலாற்றுகை (Performance)
- நம்பகத்தன்மை (Reliability)
- பொருத்தமான பண்புகள் (Features)
- பொருத்தப்பாடு (Conformance)
- நீடித்தபாவனை (Durability),
- மீள தயாரிக்கக் கூடியதாக இருத்தல் (Serviceability),
- கவர்ச்சிகரமாக இருத்தல் (Aesthetic) என்பனவாகும்.

பாடசாலைகளில் தலைமைத்துவப் பண்பினை தனதாக்கிக் கொள்கின்ற அமைப்பினர் (முகாமைத்துவக் குழு) இதனை சரியான முறையில் தெளிவாக விளங்கிக்கொண்டு நடைமுறைப்படுத்துகின்றபோது சமுதாயம் எதிர்பார்க்கின்ற நற்பிரஜைகளை உருவாக்கலாம். ஆதலால் இவ்வாறான பண்புத்தரத்தின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் பின்வருமாறு அமையுமெனவும் கூறப்படுகிறது.

பாடசாலையின் சகல உள்ளக மதிப்பீட்டு செயன் முறைகளையும் தேசிய தரக் கோட்பாடுகளுக்கமைய சுயமாக ஆற்றிக் கொள்வதுடன் அம் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமை ஒன்றினை வருடந்தோறும் கட்டியெழுப்ப.

உரிய பண்புத்தர அடிப்படையில் செயலாற்று - கின்றபோது அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட சகல ஆளணியினரும் தொழில் தேர்ச்சி விருத்தி யடைவதனால் தொழில்வாண்மைத்துவ விருத்தியேற்பட.

☐ வினைத்திறன்மிக்க முகாமைத்துவமும், சேவையும் விருத்தியுறுவதனால் வேலை செய்கின்ற ஆற்றல் அதிகரிக்கின்ற நிலை தோற்றம் பெறுகின்றமை.

☐ பௌதீக வளங்களின் மூலம் உச்சப் பயனை பெற.

☐ கல்வித்துறையின் சகல பிரிவுகளும் உரிய பண்புத்தரத்துடன் செயலாற்றுவதனால் கல்வித் துறையில் கூட்டுமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புக்கள் அதிகரிக்க.

☐ கல்வியின் பிரதிபலனைப் பெறுகின்ற மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் திருப்தியுற.

☐ பாடசாலை முறைமையிலுள்ள பலம் பலவீனங்கள் கண்டறியப்பட்டு உரிய தீர்வினை வழங்கிட.

☐ கல்விக்கென செலவாகும் அனைத்து முதலீடுகளும் எதிர்காலத்திற்கான பயனுறுதி வாய்ந்த சேமிப்பாக கருதிட

☐ பண்புத்தரத்தினை உறுதி செய்வதுடன் உரிய தரத்தில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு கலாசாரமொன்றினை பாடசாலை அமைப்பில் தாபித்தலும், அத்தகவல் முறைமையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கும் செயலொழுங்கினை நடைமுறைப்படுத்திட.

☐ சகல பாடசாலைகளும் சிறப்புற, ஒழுங்குபடுத்தப்பட்ட சீரான முறைகளைக் கடைப்பிடிக்கும் சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொடுப்பதனால் பாடசாலை முறைமையில் பண்புத்தரம் உறுதி செய்யப்படும் (நன்றி - கல்வியமைச்சின் மேலதிக செயலாளரின் அறிக்கையொன்றிலிருந்து)

**தர உறுதிப்பாட்டிற்கு துணைபுரிகின்ற கருவிகள் :-**

பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை உறுதிப்படுத்தும் நோக்குடன் கல்வியமைச்சினது கல்வித்தர உறுதிப்பாட்டு செயன்முறையில் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டுக் கருவிகளாக ஏழுவகையான விடயங்களின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டு வந்தன. தற்போது அவற்றில் மேலும் ஒருவிடயத்தை சேர்த்து எட்டு(08) அம்சங்களாக மாற்றம் பெற்றுள்ளன. பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை உச்சநிலைக்கு மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்யும் கருவியாக இத்திட்டம் கருதப்படுகின்றது. பாடசாலையின் உள்ளக, மற்றும் வெளிவாரி மதிப்பீட்டுத்துறைகள் (Domains) இதுவாகும். சுற்றுப்புறச் சூழல், சமூக விழிப்புணர்வுகள் போன்றவற்றின் மூலம் மாணவர்களின் கற்றல் திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் இம்மதிப்பீடு அளவிடப்பட்டு இதற்கு புள்ளிகளும் வழங்கப்படுகின்றன. "External Evaluation" இன் அடிப்படையில் பின்வரும் எட்டு அம்சங்களும் அமைகின்றன:-

1. பொதுமுகாமைத்துவம்
2. பௌதீக மற்றும் மனிதவள முகாமைத்துவம்
3. முறையான கலைத்திட்ட முகாமையும் வகுப்பறை மதிப்பீடும்
4. இணைப்பாடவிதான செயற்பாட்டு முகாமைத்துவம்
5. மாணவர் அடைவு மட்டம்
6. மாணவர் நலன்புரிச் சேவை
7. பாடசாலையும் சமூகமும்
8. அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்திற்காக மாணவர் அபிவிருத்தி. ஆகியனவையாகும்.

இங்கு காணப்படும் ஒவ்வொரு அம்சத்திலும் பண்புத்தரங்கள், பண்புத்தர மட்டங்கள், சுட்டிகளாகப் பிரிக்கப்பட்டு அதற்கான நியதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு சுட்டிகளுக்குமான புள்ளிகள் உச்சமாக ஐந்து (5) வழங்கப்படுகிறன. இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் பாடசாலை அடைந்துள்ள பண்புத் தரத்திற்கான மட்டத்தை தீர்மானிக்க உதவுகின்றது.

பண்புசார் விருத்தியானது முடிவில்லாத பயணம்போன்றது அது பாடசாலையில் தொடர்புள்ள கல்விசார், கல்விசாரா ஆகிய அனைத்து ஆளணியினரும் தொடர்ச்சியாக கற்கும் அமைப்பொன்றை ஏற்படுத்துவதாகும். அறிஞர் R. Ellis கருத்தின்படி பண்புசார் தன்மை என்பது பல அர்த்தங்களையும் அளிக்கும் ஒரு பதமே என்பதோடு தரம் மற்றும் விசேடத்துவம் ஆகிய விளக்கங்களை அளிப்பதுமாகும். என்று கூறியுள்ளதை நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

உண்மையில் இம்மதிப்பீடு முறையானது பாடசாலையின் பல்வேறு வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைகின்றது. மேலும், அதிபரின் முகாமைத்துவ செயற்பாடுகள் அனைத்தும் சிறப்பான முகாமைத்துவத்தின் அடிப்படையில் சீர் செய்யப்படுகின்றன. ஆசிரியர்களினது வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளும் இக்கல்வித்தர உறுதிப்பாட்டினது மதிப்பீட்டுக் கருவிகள் மூலம் அளவிடப்படுவதனால் கற்பித்தலில் அடைவு மட்டத்தை உயர்வடையதாக்குகிறது. மேலும் ஒவ்வொரு துறைக்குமான இம்மதிப்பீட்டுப் புள்ளிகளுக்கேற்ப பாடசாலையின் பிரச்சினைகள், சிறப்பம்சங்கள் இனங்காணப்பட்டு அவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்திக்கப்படுவதற்கும், தமது இலக்கு நோக்கி முன்னோக்கி நடைபயிலவும் பாடசாலையின் கல்வித்தர சுட்டியை (School Educational Quality Index) அடையவும் உதவுகின்றது எனலாம்.

இன்று பாடசாலைக்கு பாடசாலை ஆசிரியருக்கு ஆசிரியர் தமது புள்ளிகளின் அடிப்படையில் விவாதிக்கின்ற ஒரு தன்மை காணப்படுகிறது. உண்மையில் இப்புள்ளிகள் ஒருவரை ஒருவர் ஒப்பிடுவதற்கோ, பாடசாலையை இன்னொரு பாடசாலையுடன் ஒப்பிடுவதற்கோ அல்ல. பாடசாலையின் சுற்றுப் புறச்சூழல், வளப்பங்கீடுகள் போன்றவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் இன்று அனைத்துப் பாடசாலைகளிலுமே காணப்படுகின்றன. இதனைக் கருத்திற் கொள்ளாது தூரப்பிரதேசத்துப் பின்தங்கிய பாடசாலையையும், ஒரு தேசியப்பாடசாலையையும் ஒப்பிட்டு நோக்குவது எவ்வாறு சாத்தியப்படும். தத்தமது பாடசாலையின் நிலையை வெளிவாரி மதிப்பீட்டாளர்களினால் எவ்வாறு கையாளப்படுகின்றது, இதனை பாடசாலையின் சுயஅபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தீர்மானிக்கவேயாகும்.

எனக்குத் தெரிந்த ஒரு பாடசாலையில் வெளிவாரி மதிப்பீட்டாளரினால் ஆசிரியர் ஒருவருக்கு அவரது செயற்பாடுகளின் அடிப்படையில் சுட்டிகள் நியதிகளின்படி பெற்றுக் கொண்ட உச்சப்புள்ளிகள் 65ஆகும். தன்னைவிட வேறொரு ஆசிரியருக்கு இதனைவிட 15புள்ளிகள் அதிகம் கிடைத்தது. தனக்கு குறைவான புள்ளிகள் கிடைத்தமையினால் மிகவும் அழுது புலம்பி மதிப்பீட்டாளரைத் திட்டித்தீர்த்தார். பின்னர் ஒருவாரம் பாடசாலைக்கே செல்லாது லீவில் நின்றார் அந்த ஆசிரியர். இத்தனைக்கும் அந்தப்பாடசாலை ஒரு பின்தங்கிய, வளங்கள் பற்றாக்குறையாகவுள்ள ஒரு பாடசாலையாகும். இவ்வாறான நிலைமைகளை தங்களுக்குள்ளேயே ஏற்படுத்திக் கொள்கின்ற விடயம் தெரியாத ஆசிரியர்களும் இன்றைய நாட்களில் உள்ளனர். காரணம் நாளாந்த விடயங்கள், மாற்றங்கள், தினசரிப்பத்திரிகை வாசிக்காமை போன்ற எவ்வித தேடலுமற்றவர்கள் இத்தொழிலில் எப்படியோ நுழைந்து விட்டமை ஒரு காரணமாக இருக்கலாம் என ஒரு அதிபர் தெரிவித்த கருத்துக்களை இச்சந்தர்ப்பத்தில் கூறவேண்டியதாகிவிட்டது.

### கலைத்திட்ட முகாமையும், தர உறுதிப்பாடும் :-

இன்று பாடசாலைக் கலைத்திட்டத்தில் தர உறுதிப்பாடுகள் பலமாகவே பேசப்படுகின்ற ஒருவிடயமாகும். உண்மையில் வெறுமனே ஏட்டுக் கல்வியின் மூலம் எவ்வித பிரயோசனமும் அற்ற நிலையை விடுத்து தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தின் மூலமாக இன்றைய நவீன உலகிற்கேற்ற சிறப்பானதோர் நற்பிரஜையை தோற்றுவிக்கலாம் என்பதனால்தான் இன்று எட்டுவகையான அடிப்படை அம்சங்களைத் தொட்டு உள்வாரி மற்றும் வெளிவாரி மதிப்பீடுகள் அமையப்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் தங்களுக்குரிய பாடத்திட்டங்களை சரிவர செய்கின்றார்கள் என்பதைக் கவனத்திற்கொண்டு எந்தவொரு விடயத்திற்கும் ஒரு மதிப்பீடு, கணிப்பீடு காணப்படவேண்டும். அது பாடசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவக் குழுவினரால் மேற்பார்வை செய்யப்பட்டு வந்தாலும் அதன் திறனை மதிப்பீட்டின் நம்பகத்தன்மையை வெளிக்காட்டும் வகையில் வெளிவாரி மதிப்பீடு உறுதி செய்வது சிறந்தாக அமைகின்றது.

அதேவேளை உரிய இலக்குநோக்கிய பயணத்தில் சேவை வழங்குநரும், பெறுநரும் பூரண திருப்தியை அடைவதற்காக மட்டும் இத்தர உறுதிப்பாடு மட்டுப்படுத்தப்படவில்லை. பாடசாலை தொடர்பான அனைத்து தரப்பாரினதும் திருப்தியை பெற்றுக் கொள்வதற்காகவேண்டியே இத்தர உறுதிப்பாடு முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. அந்தவகையில் அமையப்பெற்றுள்ள கல்வி பண்புத்தரங்கள், அதற்கான சுட்டிகள் இவ்வாறு அமையப் பெற்றுள்ளன.

1. பொதுமுகாமைத்துவம் -
இதில் ஐந்து வகையான பண்புத்தரங்கள் வெளிக்காட்டப்பட்டுள்ளன. இதற்கான சுட்டிகளாக 22 விடயங்கள் காணப்படுகின்றன.

2. பௌதீக மனிதவள முகாமைத்துவம் -
இதில் ஐந்துவகையான பண்புத்தரங்கள், சுட்டிகள் 30

3. முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் -
இங்கு 11வகையான பண்புத்தரங்கள், சுட்டிகள் 29

4. இணைப்பாடவிதான செயற்பாடுகள் -
இங்கு 04வகையான பண்புத்தரங்கள், சுட்டிகள் 14

5. மாணவர் அடைவு மட்டம் - பண்புத்தரங்கள் 12, சுட்டிகள் 42

6. மாணவர் நலம்புரி சேவை பண்புத்தரங்கள் 06, சுட்டிகள் 26

7. பாடசாலையும் சமூகமும் - பண்புத்தரங்கள் 04, சுட்டிகள் 17

8. அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்திற்காக மாணவர் அபிவிருத்தி - இங்கு பண்புத்தரங்களாக 19 அம்சங்களும், 40 வகையான சுட்டிகளும் இணங்காட்டப்பட்டுள்ளன. இதனை சரியான முறையில் நிவர்த்தி செய்கின்றபோது நோக்கக்கூற்றுக்கமைவாக தேசிய கல்வித் தரத்தினை பூரணமாக நிறைவேற்றிய திருப்தியில் சமத்துவமிக்கதான பண்புத்தரங்கள் ஊடாக வினைத்திறனுடன் கூடிய சிறந்த முகாமைமைத்துவத்தை கல்வியில் பாடசாலை மட்டத்தில் பெற்றுக் கொள்ள இத்தர உறுதிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் வழிவகும் என திடமாகவே நம்பலாம்.

ஏனெனில் பாடசாலைகளின் முன்னால்(சுவரில்) பாடசாலையின் நோக்கக்கூற்று (Vision), மகுடவாசகம் (Mission) போன்ற வாசகங்கள் சமூகத்தின் கண்களில் படக்கூடியவாறு பெரிய எழுத்துக்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளமையானது அவை பெற்றோர் மத்தியில் கூடிய விழிப்புணர்வை ஏற்படுத்தி விடுகின்றன. பாடசாலைக்குப் பாடசாலை சற்று வேறுபட்டவாறு தூரநோக்கு, நோக்கக்கூற்று காணப்பட்டாலும் பொதுவாக மாணவர்கள் நாட்டின் சிறப்பான நற்பிரஜைகளாக உருவாகி நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் சமூகமாக நாளைய சந்ததிகளை மிளிரச் செய்தல் வேண்டும் என்பதையே வலியுறுத்தி நிற்கின்றபோது பெற்றோர்களும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஏதாவதொரு வகையில் உதவும் மனப்பக்குவத்தை அடைவதற்கு இம்மதிப்பீட்டுமுறை உதவி நிற்கிறது என்பதை நினைக்கின்றபோது இத்திட்டம் ஓர் அவசியமான செயற்பாடாகவே கொள்ளலாம்.

இம்மதிப்பீடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு பண்புத்தரமும் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களால் பரிசீலிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுகிறது. இப்புள்ளிகள் வழங்கப்படுவதன் மூலம் பாடசாலையும் அதிபர் ஆசிரியர்களும் ஊக்குவிக்கப்படுகின்றமை என்ற நிலை காணப்பட்டாலும், இவை மாணவர்கள் மத்தியில் குறைவான புள்ளிகள்பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களை தரக்குறைவாக நினைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு, ஆசிரியர்கள் மனக்கிலேசம் அடையும் நிலையும் காணப்படுகிறது. ஏனெனில் கூடுதலாக புள்ளி பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் இவ்விடயங்களை பெரிதாக மாணவர்கள் மத்தியில் கூறுவதன் மூலம் பாடசாலைக்கு பாடசாலை, வகுப்புக்கு வகுப்புக்கு போட்டிகளின் மத்தியில் ஏளனமாகவும், தரக்குறைவாகவும் பேசுவதன் காரணமாக ஒரு புண்பட்ட நிலைக்கு அதிபர், ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளமை தவிர்க்கப்படுதல் வேண்டும்.

பொதுவாக இம்மதிப்பீடுகள் உரியவர்களை ஊக்குவிக்க வேண்டிய கடப்பாடுகளை சகல தரப்பினரும் கைக்கொள்வது சாலச்சிறந்தது. அத்துடன் புள்ளிகளின் இரகசியத்தன்மை பேணப்பட்டு, வெளிவாரி மதிப்பீட்டின்போது கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற பாடசாலைக்கு மற்றும், அதிபர், ஆசிரியர்களுக்கு ஏதாவதொரு முறையில் பரிசில்கள், பாராட்டுக்கள் வழங்கப்பட்டுவது மென்மேலும் தர உறுதிப்பாட்டினை மேலும் வளர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். குறைவான புள்ளிகளைப் பெறுகின்ற பாடசாலைக்கு மற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கு இன்னும் கூடுதலான புள்ளிகளை பெறுவதற்கான அனைத்து ஆலோசனைகளையும் வழங்கிடுதல் அவசியமாகும்.

நாடும் சமூகமும் எதிர்பார்க்கின்ற சிறப்பான சமூக அமைப்பை கட்டியெழுப்பவும், கல்வியில் தர உறுதிப்பாட்டை (Quality Assurance) ஏற்படுத்தி பாண்புசார் முகாமைத்துவத்தின் மூலம் எம்மை நாம் மேலோங்கச் செய்வதற்கான வேலைத்திட்டமாக அமைந்திருந்தாலும் இன்றைய காலத்திற்கேற்ற பாடசாலைகளாக மாற்றம் பெறவைப்பதிலும்தான் இதன் வெற்றி தங்கியுள்ளது. இலங்கையில் சுமார் 10ஆயிரத்தை அண்மித்துள்ள பாடசாலைகளில் எத்தனை வீதமான பாடசாலைகள் பல்வேறு பௌதீக வளப்பற்றாக்குறையுடன் காணப்படுகின்றன என்பதை நான் சொல்லாமலே புரிந்துகொள்வீர்கள் என நினைக்கிறேன்.

இவ்வாறு கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட கட்டிடங்களாக அமையப்பெற்றுள்ள பின்தங்கிய பாடசாலைகளில் உரிய வசதிகளை அளிக்கின்ற போது உண்மையில் தேர்ச்சிமையக் கல்வியின் மூலமான பண்புத்தரங்களை உறுதிசெய்து நாடுபோற்றும் அறிவை அடிப்படையாகக் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்கலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றே கூறலாம். இதனை உணர்ந்து கல்வி திட்டங்களை மாற்றுகின்றபோது பாடசாலையின் பௌதீகவளத்திலும் மாற்றங்களை ஓரளவுக்காவது மாற்றம்பெற வைப்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்பதே வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற பெற்றோர்களின் ஆதங்கமாகும்.

## கண்காணிப்பு முறைமை எவ்வாறு அமையும்?

கண்காணிப்பு முறைமையானது, சொல்லப்பட்ட இலக்குகள், நோக்கங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு உரிய நேரத்தில் பல்வேறு மட்டங்களில் உள்ள கல்விமுறைகளின் செயலாற்றத்தை மதிப்பிட்டுப் புரிந்து கொள்ளும் வகையில், அவற்றிற்குப் பொருத்தமான நடைமுறைகள், செய்முறைகள், தொகை ரீதியான, பண்பு ரீதியான தகவல்கள், தரவுகள் என்பவற்றை முறையாகச் சேகரிக்கவும் பாதுகாக்கவும், பகுப்பாய்வு செய்யவும், பரப்பவும் தேவையான அமைப்புக்களையும் கொண்டிருக்கும்.

தற்போதைய கல்விச் சீர்திருத்தங்கள், விரிவாக்கம், பராமரிப்பு, கடப்பாடு என்பவற்றில் இருந்து தராதரம், மாற்றம், அபிவிருத்தி என்ற பிரதான ஒழுங்கமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன. இத்தகைய சீர்திருத்த முயற்சிகளை முறையாகக் கணிகாணிக்கத் தேவைப்படுவன.

- கல்விமுறையின் பல்வேறு மட்டங்களில் பங்கேற்பு, ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு என்பன உயர்ந்த அளவில் தேவைப்படும்.
- பல்வேறு மட்டங்களுக்கிடையேயும் உயர் தொழில் வல்லுனர்கள், பெற்றோர்கள், தலைவர்கள் என்போருக்கிடையே தொடர்பாடல் வழிமுறைகளை அதிகரித்தல்.
- சகல மட்டங்களிலும் உள்ள கல்வியாளர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் மேம்படுத்தி உயர் தொழில் மயமாக்கல்.
- அதிகார வர்க்க அமைப்புக்கள், செய்முறைகளில் மாற்றங்கள்.
- வெவ்வேறு வகையான தரவுகள், தகவல்கள்.
- மிக நவீனமான பகுப்பாய்வு மாதிரிகள், முறைகள்.
- மிக உயர்தரமான பகுப்பாய்வுத் திறன்களையும் கொண்ட பதவியாளர்கள்.

இச்சவால்களுக்கு எவ்வாறு ஒழுங்கமைப்புகள் முகங்கொடுக்கின்றன என்பதிலேயே கண்காணிப்பு முயற்சிகளின் வெற்றி தங்கி உள்ளது.

Thomas J. Cassidy, Jr
Challenges of Monitoring Education Reform, An International Perspective' in
'Improving Quality in Education Systems'
Harvard Graduate School of Education,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கண வளர்ச்சிக்கு ஈழத்தறிஞரின் பங்களிப்பு

முருகேசு கௌரிகாந்தன்
விரிவுரையாளர்
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

"திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும்
பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம்" – இலக்கணம்

**கூழங்கைத் தம்பிரான் முதல் வீரகத்தி வரை**

மொழியினை உயர்தனிச் செம்மொழி அல்லது தொல்சீர்மொழி (Classical Language) என்றும் உண்ணாட்டு மொழி (Vernacular language) என்றும் அறிஞர்கள் பாகுபாடு செய்வதுண்டு. இவற்றில் தமிழ்மொழி முதலாவது வகையிலடங்கும். செம்மொழி ஒன்றினுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் பலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டும் எழுத்தாளர் மணவை முஸ்தபா, அவற்றுள் ஒன்றாக மொழிக 'கோட்பாடு என்பதனைக் குறிப் - பிடுவர்' மொழிக் கோட்பாடு அல்லது இலக்கணவளம் என்பது செம்மொழிக்குரிய இயல்புகளில் தலையாயது.

"தமிழ்மொழியை வளப்படுத்தும் இலக்கணத் துறையினைப் பல மாணவரும் ஆசிரியரும் வெறுக்கின்றார்கள்" அல்லது அதிலே நாட்டங்கொள்வதில்லை என்றொரு குற்றச்சாட்டு எம்மில் சிலரிடம் உண்டு. இன்று இதிலே பெரிதும் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. சென்ற ஆண்டு (2010) ஜுலை மாதம் புத்தளம் கல்வி வலயத்திலிருந்து பலமுஸ்லிம், தமிழ் ஆசிரியர்கள் தமது கல்வி அதிகாரிகளுடன் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தந்தபோது அவர்களுடன் இலக்கணம், மொழி கற்பித்தல் சம்பந்தமாகக் கலந்துரையாடும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. கலந்துரையாடலின்போது மாணவர்கள் தமிழ்மொழியைத் திருத்தமாகப் பேசவும், எழுதவும் விடயங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளவும் இலக்கணத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பாக அவர்களிடம் மிகுந்த ஆர்வம் காணப்பட்டது. இறுதியிலே அவர்களின் தாகம் என்னவென்றால் தமிழகத்தைவிட, ஈழத்து இலக்கண அருங்கொடைகளையும் அவற்றை ஆக்கியோரையும் முழுமையாக அறியவேண்டும் என்பதாகும். இவர்களைப் போன்றோரது மேற்படி தாகத்தை ஓரளவாவது தணிவிப்பதற்காகவும் இக்கட்டுரையிலே கூறப்பட்டவற்றோடு கூறப்படாது தவறவிடப்பட்ட நூல்களைத் தேடிக் கற்கும் ஊக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் இக் கட்டுரை எழுதப்படுகிறது.

## ஈழத்து இலக்கண முயற்சிகள்

மேற்படி தலைப்பில் முதன் முதலாக ஆய்வுக் கட்டுரையினை பண்டிதர் க. வீரகத்தி (1922 - 1996) அவர்கள் எழுதியுள்ளார். 2 இக் கட்டுரையிலே இவரதும் இவர் முன்னோர் காலத்தவர் பலரதும் இலக்கணப்பங்களிப்புகள் கூறப்படவில்லை. பண்டிதருடைய மேற்படி கட்டுரை சுருக்கமானதாக இருந்தாலும் ஈழத்து இலக்கண முயற்சிகளைப் பற்றி அறிய விரும்புபவர்களுக்கும் எமது கட்டுரைக்கும் அடிப்படையானது.

வீரகத்தி அவர்கட்கு முன்னதாக மகாவித்துவான் F.X.C நடராசா (1911-1997) அவர்கள் பதினேழு இலக்கண நூல்களையும் அதன் ஆசிரியர்களையும் தமது ஈழமுந்தமிழும் (1957) எனும் நூலில் பட்டியற்படுத்தித் தந்துள்ளார்.

## இலக்கண உலகிற்கு ஈழத்தறிஞரின் பங்களிப்புகள்

ஈழத்திலும் இலக்கணம் குரு - சீட கல்விமுறை மூலமும் கற்றும் கற்பிக்கப்பட்டும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. முதன்மை வாய்ந்த இலக்கண நூலானது தனியொரு ஆசிரியரின் பங்களிப்பினால் மட்டும் உருவானது என்பது உண்மையானதல்ல. அது ஆசிரியர் - மாணவர் பலரதும் கூட்டுழைப்பின் விளைவு என்று கூறுவதுதான் உண்மை. எமது கல்விப் பாரம்பரியத்திலே மாணவர் பரம்பரை என்றிருப்பது நாமறிந்ததே. இலக்கணக் கல்வியை எழுத்துருவில் கொண்டுவராமல் கற்பித்தலுடன் மட்டும் நின்றோரது பங்களிப்பினையும் நாம் மறந்துவிடமுடியாது. அத்தகையோரின் எண்ணிக்கை இலக்கணத்தை எழுத்துருவில் கொண்டு வந்தவர்களைவிட அதிகம் என்று கூறலாம். எவ்வாறாயினும் எமது தேவைகருதி அச்சுருவில் கொண்டுவந்தவர்களையும் அவர்களது பங்களிப்பினையும் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

ஈழத்தவரின் பங்களிப்பு என்று கூறும்போது இலக்கண நூல்களுக்கு இவர்களால் எழுதப்பட்ட உரைகள் - உரைவிளக்கங்கள், பதிப்பு முயற்சிகள், புதுநூலாக்க முயற்சிகள் என்றவாறு காணப்படுகின்றன. எமக்குக் கிடைத்த தகவல்களின்படி ஈழத்தவர்களது பங்களிப்பினை அவர்களது வரலாற்று ஒழுங்கின்படி கூறுவது பொருத்தமாகத் தெரிகிறது. இத்தகையதான ஒழுங்கு கூழங்கைத் தம்பிரானிலிருந்து தொடங்கி வந்திருக்கின்றது.

## கூழங்கைத் தம்பிரான் – உரை

ஆறுமுகநாவலரின் இலக்கணப் புலமைக்கு அவர், அவரது தந்தையாரிடம் கற்றமையும் ஒரு காரணம். தந்தையாரான ப.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்பிள்ளை அவர்கள் (1766 - 1842) கூழங்கைத் தம்பிரான் (1999 - 1795) அவர்களிடம் பயின்றவர். இவர் தஞ்சாவூரைச் சேர்ந்தவர். இவரை எண்ணும்போது தென்புலோலியூர் க. கந்தமுருகேசனார் (1902 - 1965) நினைவுக்கு வருகிறார். கந்தமுருகேசனாருக்குக் கால்முடம். இருந்தவாறே தம்மிடம் வரும் மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்கள் கற்பித்து அவர்களை இலக்கண, வித்தகர்கள் ஆக்கிய மூதறிஞர். தம்பிரானுக்கு அவருடைய இடைக்காலத் திலேதான் அவர் பிறந்த தமிழ்நாட்டில் கூழங்கை ஏற்பட்டதாகக் கூறுவர். அக்காலத்திலிருந்து அவர் யாழ்ப்பாணம் வந்து வண்ணைச் சிவன் கோயிலைக் கட்டிய பெருந்தனவந்தரான வைத்திய லிங்கச் செட்டியாரின் ஆதரவில் வாழ்ந்து கொண்டு பலருக்கும் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வந்துள்ளார். அக்காலத்திலேதான் நன்னூலுக்கான காண்டிகை யுரையினை எழுதியுள்ளார். இதனை மிக நீண்ட காலத்தின் பின்னர் 1980இல் ஜேர்மனியிலுள்ள "ஹைடல்பர்க்" பல்கலைக்கழகப் பேராசிரியரான டாக்டர் அ.தாமோதரன் அவர்கள் அரும்பாடுபட்டுக் கண்டெடுத்துப் பதிப்பித்துள்ளார். நூற்பா, கொளு, பதவுரை, உதாரணம் என்ற அமைப்பைக் கொண்டு இவரின் காண்டிகையுரை செல்லும் அருள் பத்மராசன் அவர்களின் ஆய்வு நூல்[3] தம்பிரானது நூலினைப் படிப்பதற்கு நல்ல வழிகாட்டி.

எமக்குக் கிடைக்கும் இலக்கண நூல்களில் தொல்காப்பியம் முதலாவதானதாகவும் முழுமையானதாகவும் இருந்தாலும் நன்னூல் தான் அது தோன்றிய காலத்திலிருந்து (கி.பி.12ஆம் நூற்றாண்டு) இன்றுவரை எமது ஆசிரியர், மாணவர்களால் பெரிதும் பயன் படுத்தப்படுகின்றது. எழுத்து, சொல் ஆகிய இலக்கணங்களைக் கொண்டது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" (நன்462) என்ற இறுதி நூற்பாவின்படி பயனுள்ள பல புதிய விடயங்களையும் அது கொண்டுள்ளது. அத்துடன் காண்டிகை உரை, விருத்தியுரை எவ்வாறு அமைய வேண்டும் (நன்.நூற்பா22,23) என்றும் நன்னூல் விதி கூறியுள்ளது. ஆசிரியர் மாணவர் இலக்கணங்கள், அவருடைய கற்றல் - கற்பித்தல் முறைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாகவும் அதன் பாயிரவியல் குறிப்பிடும். இவ்வாறான சிறப்புகள் நோக்கி எமது ஆசிரியர்கள் அதன் மீது கூடுதல் கவனஞ் செலுத்தியிருக்கிறார்கள்.

### ஆறுமுகநாவலர் – உரை புது இலக்கண நூலாக்கம்

யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்த நாவலர் (1892 - 1879) நன்னூலுக்குக் காண்டி கையுரை (1868) எழுதியதுடன் இலக்கணச் சுருக்கம் (1874), இலக்கண வினாவிடை (1875) ஆகிய புது இலக்கண நூல்களையும் ஆக்கித் தந்துள்ளார்.

நவீன கவிதையின் பிதாமகனாக பாரதியாரைக் (1882 - 1921) கூறுவதுபோல நவீன உரைநடையின் தந்தை என்று நாவலரைக் கூறுவர். எளிமையும் தெளிவுங் கொண்ட உரைநடையினை இலக்கணத்திலும் கையாண்டதால் எமது மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் ஆய்வாளருக்கும் இவரது நூல்கள் மிகவும் பயன்பட்டன. இவரது இலக்கணச் சுருக்கத்திலும் இலக்கண வினாவிடையிலும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் மொழியதிகாரம் என்று இயல்கள் வகுக்கப்பட்டு இலக்கணங் கூறப்பட்ட முறைமையானது நவீன மொழியியல் பார்வை அவரிடம் இருந்ததைக் காட்டுகின்றது. இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகையுரை என்பன எமது மாணவரது இலக்கண அறிவைப் படிப்படியாக விருத்தி செய்யக்கூடிய அரிய துணைகள். க.பொ.த. (சா.த) வரை இலக்கணத்திலே நுனிப்புல் மேய்ந்துவிட்டு உயர் தரங் கற்கச் செல்வோர்க்கும் அடிப்படையான இலக்கண அறிவைக் கொடுக்கவல்லது இலக்கணச் சுருக்கம். இதனால் பொறுமையாக இருந்து கற்பராயின் பின்னர் அதன் பலன் தெரியும். நன்னூற் சுருக்கம் (1872) என ஒரு நூலை சவுந்தரநாயகம்பிள்ளை என்பவர் எழுதியுள்ளார். அது எமது பார்வைக்கு எட்டவில்லை.

### இலக்கண நூற்பதிப்பு முயற்சிகள்

நூற்பதிப்பு முயற்சியில் முதலில் அதிகம் ஈடுபட்டவர்கள் ஈழத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் அவர்களும் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் ஆவர். நாவலர் பதிப்பு நல்லபதிப்பு என்றும் சுத்தப்பதிப்பு என்றும் கூறப்படுகிறது. ஆறுமுகநாவலர் அவர்கள் நன்னூல் விருத்தியுரையினைத் தொடக்கி வைக்கின்றார். பின்னர் இலக்கண விளக்கச் சூறாவளி (1866), இலக்கணக்கொத்து மூலமும் உரையும் (1886), பிரயோக விவேகம் மூலமும் உரையும் (1882) ஆகிய இலக்கண நூல்களையும் பதிப்பித்தார்கள்.

யாழ் ஏழாலையைச் சேர்ந்த சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் (1832 -1901) முக்கியமான பல இலக்கண, இலக்கியங்களைப் பதிப்பித்து தமிழ் வாழ உதவியமையால் தமிழ் தந்த தாமோதரப்பிள்ளை என்று அழைக்கப்படுகின்றார். இவர் தொல்காப்பியம், சொல்லதிகாரம் - சேனாவரையம், நாவலரால் பரிசோதிக்கப்பட்டது. (1868), தொல்காப்பியம், பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் (1885), தொல்காப்பியம், எழுத்ததிகாரம் - நாச்சினார்க்கினியம் (1891), தொல்காப்பியம் சொல்லதிகாரம் - நச்சினார்க் கினியம் (1892) வீரசோழியம் (1881) இறையனார் களவியல் உரை (1883) குட்டித் தொல்காப்பியமாகிய இலக்கண விளக்கம் (1889) ஆகிய இலக்கண நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவற்றோடு கட்டளைக் கலித்துறை என்ற நூலினையும் எழுதியுள்ளார். இவ்வாறான பதிப்பு, எழுத்துப்பணிகளால் இலக்கணத்துறை வளர்ச்சிகண்டது. சி.வை.தா அவர்களின் தொல் காப்பியப் பதிப்புப் பணிகள்தாம் கணேசையரையும் அவற்றுக்கு உரை விளக்கக் குறிப்பெழுதத் தூண்டியிருக்கலாம். கணேசையர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை சி.வை. தாமோதரம் பிள்ளை ஞாபகார்த்த வெளியீடாக வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### மு. சிதம்பரப்பிள்ளை (William Nevins) – புது இலக்கணம்

ஆறுமுகநாவலர் அவர்களை அடுத்து புது இலக்கணம் தந்தபெருமை மு.சிதம்பரப்பிள்ளை எனும் வில்லியம் நெவின்ஸ் (1820 - 1889) அவர்களைச் சாரும். இவர் யாழ்ப்பாணம் சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரின் தமிழ் வியாகரணம் என்னும் இலக்கண நூல் மூன்று பர்வங்களைக் கொண்டது. மூன்றாம் பர்வமாகிய வசனலக்கணம் (1886) மட்டும் எமக்குக் கிடைத்துள்ளது. இது ச. தம்பிமுத்துப் பிள்ளை (1857 - 1921) அவர்களால் அச்சுவேலி ஞானப்பிரகாச அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

### சங்.சிவப்பிரகாச பண்டிதர் – புது இலக்கணம்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, வாக்கிய இலக்கணம் ஆகிய இலக்கணக் கூறுகளைக் கொண்ட இயற்றமிழிலக்கண ஸாரம் - வாக்கிய நிருபணம் எனும் நூலைச் செய்த சங். சிவப்பிரகாச பண்டிதர் (1864 - 1916) யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். சிவ. சங்கரபண்டிதர் (1821 - 1891) அவர்களின் புதல்வர். இவரது மேற்படி நூல் சுபகிருது வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது. பாலமாணாக்கர்கட்கு உபயோகமானதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் இலக்கண தீபிகை அப்பாப்பிள்ளைப் போதகர், 1891 என்று F.X.C நடராசா அவர்களின் நூலில் கூறப்படுகிறது. அது எமக்குக் கிடைக்கவில்லை.

### சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர்

இருபதாம் நூற்றாண்டு முற்பாதியிலே இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து ஆறுமுக நாவலர் மரபிலே தமிழ்க் கல்விமான்களாகப் பிரகாசித்த பலருள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும் மகாவித்துவான் கணேசையரும் ஈடிணையற்றவர்கள் என்பர்[4] இவர்களில் கணேசசையரின் ஆசிரியராகிய குமாரசுவாமிப் புலவர் (1855 - 1922) அவர்கள் சுன்னாகம் இலக்கணக் கொத்தர் பூ.முருகேச பண்டிதர் (1830 - 1898) சுன்னாகம் அ. நாகநாதபண்டிதர் (1814 - 1884), அளவெட்டி வே. கனகசபைப் புலவர் (1829 - 1873) ஆகியோரிடம் முறையாகப் பயின்றவர். இவரது இலக்கண நூல் ஆக்கத்தில் இலக்கண சந்திரிகை (1897), வினைப் பகுபதவிளக்கம் (1913) எனும் இரு நூல்களும் குறிப்பிடத்தக்கவை. தமிழிலே வழங்கும் வட சொற்களை ஒழுங்குபடுத்தி அவற்றின் இலக்கணத்தை இலக்கிய ஆதாரங்களுடன் காட்டுவது இலக்கண சந்திரிகை.

நன்னூலாரால் தமிழ் இலக்கணத்துக்குக் கொண்டு வரப்பட்ட அரியகூறு "பதவியல்" என்பது, அதன் துணைகொண்டு புலவர் தமிழில் வழங்கும் வினையடிகளை எடுத்துக்காட்டி, அவற்றிலிருந்து எவ்வாறு பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் ஆக்கப்படுகின்றன என்பதை வினைப்பகுபத விளக்கத்தில் காட்டுகின்றார். கற்றல் - கற்பித்தலில் முக்கியமானதான அருவ அல்லது கருத்தியல் ரீதியான எண்ணக்கரு விளக்கத்திற்கு புலவரின் இந்த முயற்சி மிகவும் பயனுடையது. இந்த நூலை ஒருதரம் எமது தமிழாசிரியர்களும் மாணவர்களும் படித்துப் பார்க்க வேண்டியதவசியம். வினைப் பகுபத விளக்கத்திற்குத் திறவுகோல் போன்றதொரு நயம்மிக்கதான அணிந்துரையை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் (1899 - 1986) வினைப்பகுபத விளக்கத்தின் இரண்டாம் பதிப்பில் (1967) வழங்கியுள்ளார். புலவரின் மேற்படி இரு நூல்களையும் தனித்தனியாக (1968, 1967) மல்லாகம் பண்டிதர் மாணவர் கழகம் வெளியிட்டிருந்தது. இரண்டு நூல்களையும் சேர்த்து சுபதினி ரமேஸ் அவர்கள் குமரன் புத்தக இல்லம் மூலம் 2009இல் பதிப்பித்துள்ளார்.

குமாரசுவாமிப் புலவர் எழுதிய இலக்கண உரைகள் என்ற வகையில் யாப்பருங்காலப் பொழிப்புரை (1900), வெண்பாப்பாட்டியல் பொழிப்புரை (1900), தண்டியலங்காரப்புத்துரை (1903). யாப்பருங்கலக் காரிகைப்புத்துரை (1912), நம்பியகப்பொருள்புத்துரை (1912) என்பன காணப்படுகின்றன. "மாணவர்கள் எளிதில் உணரக்கூடியவாறு விரிந்த காரிகையுரையைச் சுருக்கி வெளிப்படுத்தவேண்டுமென்பது சங்க நோக்கங்களில் ஒன்று. அவ்வேலையை சங்கத்தின் முக்கிய அங்கத்தினரில் ஒருவராய் தாங்கள் வெளியிட்டிருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. தங்கள் நூலை ஆங்காங்குப் பார்த்த அளவில் விஷயங்களை எவ்வளவு தெளிவுபடுத்தக்கூடுமோ அவ்வளவு தெளிவுடனும் உதாரணச் செய்யுள்களுடனும் விளங்கா நின்றது. இத்தகைய உபகாரத்தைத் தமிழகம் பெரிதும் உணர்ந்து பாராட்டக் கூடுமென்றே நம்புகிறேன் என்று யாப்பருங்கலக் காரிகைப் புத்துரைக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத் தபாகர் ஸ்ரீமத் பொ. பாண்டித்துரைத்தேவர் உரையாசிரியர்க்கு எழுதிய வியப்புரையிலிருந்து இவரின் உரைத்திறனை உணரலாம்.

குமாரசுமிப் புலவர் அவர்களின் மேற்படி உரைகளுடன் உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் (1830-1910)அவர்களின் யாப்பருங்கலக் காரிகையுரையும் வல்வை ச. வையித்தியலிங்கம்பிள்ளை (1852 -1901) அவர்களின் நம்பியகப் பொருளுரையும் குறிப்பிடத்தக்கன.

### புலோலி வ. குமாரசுவாமிப் புலவர் – உரை விளக்கம்

ஈழத்தவர்கள் நன்னூல் இலக்கணத்தையும் எவ்வளவு நுணுக்கமாகவும் ஆழமாகவும் ஆர்வத்துடனும் பார்த்திருக்கிறார்கள் என்பதற்கு புலோலி வ. குமாரசுவாமிப் புலவரின் நன்னூற் காண்டிகையுரை விளக்கம் (1902) தக்க சான்று. இவர் ஆறுமுகநாவலர், ந.ச. பொன்னம்பல பிள்ளை உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர் ஆகியோரிடம் கற்றமையால் வந்த புலமை மற்றும் மாணவர்களுக்குக் கற்பித்தலால் பெற்ற அனுபவம் என்பற்றைக் கொண்டு இந்த உரை விளக்கத்தைச் செய்துள்ளார். உரை விளக்கம் என்ற வகையில் இதுவே முதனூல். இந்நூல் யாழ்ப்பாணம் விவேகாநந்தயந்திரசாலையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

### ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை – விளக்கம், புது இலக்கணம்

நன்னூலினையும் தமிழிலக்கணத்தையும் இலகுவாகப் போதிக்கவேண்டும். எனும் சிந்தனை முயற்சியின் விளைவுதான் மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1858-1917) அவர்களின் நன்னூல் இலகுபோதம் - எழுத்ததிகாரம் (1904), நன்னூல் இலகுபோதம் - சொல்லதிகாரம் (1905), நன்னூல் உதாரண விளக்கம் (1912), இலகுபோத இலக்கணம் (1925 ஒன்பதாம் பதிப்பு), Civilians Tamil Grammar (1912) எனும் நூல்களாகும். இவை நாவலர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

நன்னூல் இலகுபோதங்கள் இலகுவான வினாவும் விடையுமாக அமைந்துள்ளன. "அவ்விலக்கணத்தைத் தாங்கற்குமிலக்கியத்தில் ஒருங்கமைத்துக்காட்டும் வலியிலாராயிருத்தல் கண்டு நூலுணர்ச்சிக்கேற்பச் செய்கையின் பயிற்சியுமாவர்க்கினிது சித்தியாம் வண்ணம் அவ்வப்பாகு பாட்டிற்கேற்ப உதாரணங்களை எடுத்துக்காட்டி இலக்கணங்களைக் கூறி முடிப்பின் உபயோகமாகுமென்பது கருதியே இந்நூல் செய்தாம்[5] என நன்னூல் உதாரண விளக்கம் எழுதப்பட்டதன் நோக்கத்தை ஆசிரியர் கூறியுள்ளார். இந்நூலின் நான்காம் பதிப்பை பண்டிதர் க. வீரகத்தி 1974இல் பதிப்பித்துள்ளார். இலகுபோத இலக்கணம் அக்கால நான்காம் ஐந்தாம் தரத்துக்கானது.

### த. கைலாசப்பிள்ளை, ம.ந.ஞானமுத்து –புது இலக்கணம்

வசனத்தொடை - த. கைலாசபிள்ளை - 1906 இலக்கணச் சங்கிரகம் 1ம், 2ம் பாகம் ம. ந. ஞானமுத்து - 1986 என F.X.C நடராசா பட்டியலில் தந்துள்ளார். இவை எமக்குக் கிடைக்கவில்லை. இலக்கண சங்கிரகம் பதவியல் வரையானதொரு நூல் இக்கட்டுரை ஆசிரியரிடம் உண்டு. ஆசிரியர் பெயர் முதலான விபரங்கள் தெரியவில்லை. வினா விடை, நன்னூல் சூத்திரம், பயிற்சி, இடையிடையே குறிப்பு என்றவாறான அமைப்புடன் உள்ளது. இது ம.ந.ஞானமுத்துவின் 1ம் பாக இலக்கணநூலாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேர் பொன். இராமநாதன் - நன்னூலைத் தழுவிய விரிவான விளக்கம்**

நன்னூல் நூற்பாக்களைத் தழுவி இலகுவான உரைநடையில் விரித்து எழுதும் முயற்சியை ஸ்ரீமான் பொன்னம்பலம் இராமநாதன் (1851 - 1930) அவர்களது செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (1927) மூலம் காண்கிறோம். இது எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் கொண்டது. தமிழ் எழுத்துக்களின் ஒலிகள் மொழியியல் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் சென்னை அடிசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**அ.பொன்னையா, A. பார் குமாரகுலசிங்கம் - புது இலக்கணம், பாடநூல்**

தமிழ், ஆங்கிலப் பாடசாலைகளில் தமிழிலக்கணத்தைச் சிரமப்பட்டுக் கற்கும் மாணவர்களைக் கருத்திற்கொண்டு மிகவும் இலகுவான முறையில் இலக்கண நூல்களை எழுதும் முயற்சியினை திரு. அ. பொன்னையா (A.P) அவர்களும் திரு.A. பார் குமாரகுலசிங்கம் (A.Bar Kumarakulasinghe) மேற்கொண்டுள்ளனர். நவீன கற்பித்தல் உத்திகளுள் ஒன்றான அட்டவணையைப் பயன்படுத்தும் முறையினை யாழ். கோப்பாயைச் சேர்ந்த அ.பொ. அவர்கள் தமது தமிழிலக்கணம் (1928) நூலில் சிறப்பாகக் கையாண்டு விளக்கும் திறனைக் காண்கின்றோம். தமிழ் இலக்கணமும் அதற்கான ஆங்கிலப் பதங்களும் கொண்டதாக மட்டக்களப்பில் வாழ்ந்த A. பார்குமாரகுலசிங்கம் அவர்களின் Hand Book of the Tamil Language and Grammar (1929) எனும் நூல் காணப்படுகிறது.

இவர்களைத் தொடர்ந்து ச.ஜகநாத ஐயர் பாட்டியல் வினாவிடை (1933) எனும் நூலையும் அருட்சகோதரர் சவரிமுத்து அவர்கள் இலக்கணத்தீபம் எனும் நூலையும் இயற்றியுள்ளனர். இவை எமது பார்வைக்குக் கிடைக்க வில்லை.

**மகாவித்துவான் சி. கணேசையர் - உரை விளக்கம், இலக்கணக் கட்டுரைகள்**

வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பலபிள்ளை (1836 - 1902) உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை (1847 - 1930) சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் ஆகியோரின் மாணவராகிய புன்னாலைக்கட்டுவன் மகாவித்துவான் சி.கணேசையர் (1878 - 1958) அவர்கள் தாம் கற்ற - கற்பித்த அனுபவங்களைக் கொண்டு தொல்காப்பியம் முழுமைக்கும் உரைவிளக்கம் தந்துள்ளார். இவரது எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம் 1937 இலும் சொல்லதிகாரம் சேனாவரையம் 1938 இலும் பொருளதிகாரம் பேராசிரியம் - இரண்டாம் பாகம் 1934 இலும் பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் - முதற்பாகம் 1948இலும் வெளிவந்தன. இவை சுன்னாம் திருமகள் அழுத்தகத்தில் ஈழகேசரி நா. பொன்னையா அவர்களால் பதிப்பிக்கப்பட்டன.

தரமான உரைவிளக்கக் குறிப்புக்களுடன் காணப்படும் ஒவ்வொரு நூலின் இறுதியிலும் அநுபந்தமாகப் பல இலக்கணக் கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. எழுத்ததிகாரத்திலே அளபெடை, போலி எழுத்து ஆகிய கட்டுரைகளும் சொல்லதிகாரத்திலே தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி, பிறிது பிறிதேற்றல், ஆறனுருபு பிறிது பிறிதேற்றல் இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும், தொகைநிலை ஆகியவையும் பொருளதிகாரம் முதற் பாகத்திலே சிறுபொழுதாராய்ச்சி என்பதும் இணைக்கப்பட்டுள்ளன. இவை முன்னர் "செந்தமிழ்" என்ற சஞ்சிகையில் வெளிவந்தவை. ஆய்வாளருக்குப் பயனுள் ளவை.

பயனுள்ள மேற்படி நான்கு தொகுதிகளையும் வெளியிட குமரன் பதிப்பகம் பெரும் முயற்சி எடுத்தது. அதற்கிடையில் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு (2008) பெயர்பெற்றது.

**க.சு.நவநீதகிருஷ்ணபாரதியார் - புது இலக்கணம்**

தமிழிலக்கணத்தைப் பல்வேறு நுட்ப அணுகுமுறைகளைக் கையாண்டு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டு அதற்காக நீண்டகாலமாகப்பாடுபட்டோரில் பண்டிதமணி க.சு.நவநீதகிருஷ்ணபாரதியார் (1889 - 1952) அவர்கட்கு முக்கியமானதோர் இடமிருக்கிறது. தஞ்சாவூரைச் சேர்ந்த இவர் இலங்கைக்கு வந்தபின்னர் தாம் வாழ்ந்த மாவிட்டபுரம் எனும் ஊரின் பெயரை முதலாகக்கொண்டு மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் என்று தமது பெயரை மொழிமாற்றம் செய்தும் வழங்கிவந்தவர்.

இவர் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா பண்டித ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இருந்து இலக்கண, இலக்கிய ஆளுமையுள்ள பல அறிஞர்களை உருவாக்கியுள்ளார். இதனை அவருடைய மாணவர் ஒருவர் கூறும் பின்வரும் கூற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம். "செந்தமிழ்" இலக்கண விளக்கம் என எம்மால் எழுதி வெளியிடப்பட்ட நான்கு நூல்களும் ஆசிரியர் பண்டிதமணி க.சு.நவநீதகிருஷ்ண பாரதியார் கூற யான் எழுதியவென்பதே எனது கருத்து.

இத்தகைய பெருமைக்குரிய நவநீத கிருஷ்ணபாரதியார் தமது பெயரில் பாரதீயம் முதலாம் பாகம் (1947) பாரதீயம் - இரண்டாம் பாகம் (1948) பாரதீயம் - மூன்றாம் பாகம் ஆகிய சிற்றிலக்கண நூல்களை எழுதிவெளியிட் டுள்ளார் பொருத்தமான படவிளக்கங்கள் உதாரணங்கள், அட்டவணைகள் மூலம் இலகுவான நடையில் எழுதப்பட்ட புது இலக்கண நூல்கள் இவை.

**அண்மைக்கால இலக்கண ஆசிரியர்கள்**

மேற்படி இலக்கண ஆசிரியர்களை
1. பல்கலைக்கழகத்திலே பணியாற்றிய அறிஞர்கள்
2. பல்கலைக்கழகத்துக்கு வெளியே இருந்து பணி யாற்றியவர்கள் எனப்பகுத்து அவர் பணிகளை நோக்கலாம்.

பல்கலைக்கழகத்திலே இருந்து பணியாற்றியவர்கள் என்ற வகையில் பேராசிரியர்களான விபுலானந்த அடிகள் (1892 - 1947), க.கணபதிப்பிள்ளை (1903 - 1968) சு. வித்தியானந்தன் (1924 - 1989), ஆ.சதாசிவம் (1926 - 1988) ச.தனஞ்சயராசசிங்கம் (1933 - 1977), ஆ. வேலுப்பிள்ளை, அ. சண்முகதாஸ், சு.சுசீந்திரராசா, எம். ஏ. நுஃமான், திரு. எஸ். ஜே. யோகராசா, கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் முதலானோரைக் குறிப்பிடலாம். இவர்களின் பணிகள் பெரிதும் மொழியியல் சார்ந்து காணப்படுகின்றமை குறிப்பிடப்படவேண்டியதாகும்.

இவர்களிலே விபுலானந்த அடிகள், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை. பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோர் தமது கற்பித்தலாலும் நெறிப்படுத்தலாலும் இலக்கணப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமையாளர்களை உருவாக்கிய பெருமைக் குரியவர்கள். அராலியைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி ஆ.சதாசிவம் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதருங்கூட. இவர் எழுதிய இலக்கண நூல்களாக தமிழ் வினைச்சொற்களின் அமைப்பு தொகுதி I, தொகுதி II (1956), Sumerian A Dravidian Language (1965), தமிழ்மொழி வரலாறு (1966) முதலானவை காணப்படுவதனை பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் அவர்கள் தரும் பட்டியலிலிருந்து8 அறியக் கூடியதாக உள்ளது. "திராவிடத்தாய், தமிழில் வேர்ச் சொற்கள், தொல்காப்பியரின் இலக்கணக்கொள்கைகள், குமரித்தமிழ் அல்லது சுமர்மொழி, நன்னூலிலக்கணமும் மொழியியற் கோட்பாடுகளும் முதலான கட்டுரைகளையும் கலாநிதி சதாசிவம் பல்வேறு சஞ்சிகைகளிலே எழுதியுள்ளார். பேராசிரியர் கலாநிதி ச. தனஞ்சயராசசிங்கம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் (1901 - 1880) அவர்களிடம் மொழியியல் பயிற்சி பெற்றதாக அறிகிறோம். கலாநிதி தனஞ்சயராசசிங்கம் யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழி தொடர்பாகவும் ஆராய்ந்து பல மொழியியல் கட்டுரைகளை சஞ்சிகைகளில் எழுதியிருக்கிறார்.

பேராசிரியர் டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய பல நூல்களுள்ளே தமிழ் வரலாற்று இலக்கணம் (1965) என்பதும் ஒன்று இது வரலாற்று மொழியியலின்பாற்பட்ட ஆய்வு நூலாகும். பலபதிப்புகள் கண்டது. இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்தில் சிந்தனை சஞ்சிகையில் பல இலக்கண ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். இவர் தமிழ்மொழி இலக்கண இயல்புகள் (1982) எனும் நூலினை எழுதியுள்ளார். "தமிழ் இலக்கணம் பற்றி அறிய வேண்டியவற்றை மரபுவழிநின்று மொழியியல் நோக்கில்9 இதனை எழுதியுள்ளார். இந்த நூலின் இரண்டாவது பதிப்பில் (1989) பொருத்தமான இடங்களில் யப்பானிய - தமிழ்மொழி இயல்புகள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே மொழியியல் துறைத்தலைவராக இருந்த பேராசிரியர் கலாநிதி சு. சுசீந்திரராசா அவர்கள் Jaffna Tamil Phonology and morphology (1993) எனும் நூலை எழுதியுள்ளார். இவரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட மொழியாய்வுக் கட்டுரைகள் டாக்டர் சு. இராசாராம், ஆர். சுபதினி ஆகிய இருவராலும் தொகுக்கப்பட்டு தமிழ்மொழியியற் சிந்தனைகள் (1999) எனும் நூலாக வெளிவந்திருக்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய கலாநிதி எம். ஏ.நு:்மான் அவர்கள் அடிப்படைத் தமிழ் இலக்கணம் (1999) எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார். மரபும் மொழியியலும் கலந்து இந்நூல் அமைந்து காணப்படுகின்றது. "ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல் ஒரு மொழியியல் அணுகுமுறை" (2002) என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார். பலரது மொழியியல் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய தொடர்பாடல் மொழி நவீனத்துவம் (1993) எனும் நூலைப் பதிப்பித்துள்ளார். களனிப் பல்கலைக் கழகத்திலே விரிவுரையாளராக இருக்கும் திரு. எஸ்.ஜே.யோகராசா அவர்கள் முல்லைத் தீவுப் பேச்சுத் தமிழ் பற்றிய மொழியியல் ஆய்வு (2001) எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் அவர்கள், தமிழில் ஐந்திலக்கணமரபு (2006) எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார். தொல்காப்பியம், வீரசோழியம், தொன்னூல் விளக்கம் முதலான இலக்கண நூல்கள் கூறும் ஐந்திலக்கண மரபுகள் இதிலே கூறப்பட்டுள்ளன.

பல்லைக்கழகத்திற்கு வெளியே இருந்து பணியாற்றிய புலமையாளர்கள்

இவ்வகையில் புலவர் நா. சிவபாத சுந்தரனார் (1920 - 1993) கலாநிதி க. சொக்கலிங்கம் (1920 - 2004) பண்டிதர் சு.வேலுப்பிள்ளை (1921 - 2001), பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம், பண்டிதர் க.நாகலிங்கம் (1920-2010) மொழிப்பயிற்சி நூல் வழங்கியோர், பண்டிதர் க. வீரகத்தி (1922 - 1996) போன்றோரைக் குறிப்பிட முடியும். இவர்களில் பெரும்பாலானோர் மரபிலக்கண வழிநின்றே தமது பணிகளை ஆற்றியுள்ளனர்.

தொல்புரத்தைச் சேர்ந்த பொருணூல் விற்பனர் புலவர் நா. சிவபாதசுந்தரனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பன் மொழிப் புலவர் டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்,பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை முதலானோரிடம் இலக்கண, இலக்கியங்கற்றவர். இவர் ஐயனாரிதனார் அவர்களால் இயற்றப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை எனும் நூலுக்கு அரிய ஆராய்ச்சிக் குறிப் புக்களை எழுதியுள்ளார். இவரது புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி முதலாம் பகுதி 1972ஆம் ஆண்டும் அதன் இரண்டாம் பகுதி 1991ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளன.

கலாநிதி வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) இலக்கணத் தெளிவு (1981) எனும் நூலைத் தனித்தும் "உரை நடைத்தெளிவு - ஓர் அறிமுகம்" (1999) எனும் நூலை வாசுகி சொக்கலிங்கம் அவர்களுடன் இணைந்தும் எழுதி வெளியிட்டுள்ளார். இலக்கணத் தெளிவு க.பொ.த (சா.த), உயர்தர மாணவர்களுக்கு அடிப்படை இலக்கண அறிவைத் தரவல்லது உரைநடைத்தெளிவு நூல் மொழியைத் திருத்தமாகப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டல் நூலாகும். இந்த நூலின் முக்கியத்துவம் பற்றித் தமது அணிந்துரையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். இன்றைய தமிழ்மொழிக்குப் புத்திலக்கணம் வகுக்கவேண்டும் என்றும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய சிக்கல்கள் யாவை என்றும் மொழியியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய இலக்கண ஆக்கத்துக்கு இந்த நூலும் பங்களிக்கும் என்பதில் ஐயமில்லை.10

ஒன்பதாம் பத்தாம் தர மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்டது பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு.வே) அவர்களின் அடிப்படை இலக்கணம். இ:்து இன்று பெறுவதற்கு அரிதாகிவிட்டது. இடைநிலை வகுப்பு மாணவர்களிற் பெரும்பாலோனோர் ஆசிரியரின் உதவியின்றிக் கற்கக்கூடிய வகையில் இக்கால உதாரணங்களுடன் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களால் எழுதப்பட்டது. தமிழ் இலக்கணப் பூங்கா (1984) எனும் நூல்.

இலக்கணத்துறையில் நிபுணத்துவம் பெற்றவராகத் (Authority) திகழ்கின்றார்11 என்று பேராசிரியர் சி. சிவலிங்கராஜா அவர்களால் குறிப்பிடப்பட்ட பண்டிதர் க. நாகலிங்கம் அவர்கள் ஐந்திலக்கணங்களுக்கும் புது இலக் கணம் செய்திருக்கிறார். இவரின் இலக்கணப் புலமைக்குப் பெரிதும் காரணம் பண்டிதமணி க.சு.நவநீதகிருஷ்ணபாரதியார். மற்றும் வித்துவான். க. கார்த்திகேசு (1912 - 1974) ஆகியோரிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக ஐந்திலக்கணங்களைக் கற்றதும், தாம் கற்றவற்றைத் தமது மாணவர்களுக்குக் கற்பித்த அனுபவமும், தேடலும், ஆராய்வூக்கமுமே எனலாம். பண்டிதரின் செந்தமிழ் இலக்கண விளக்கம் - முதலாம் பாகம் (2000) செந்தமிழ் இலக்கண விளக்கம் - இரண்டாம் பாகம் - செய்யுளியலும் அணியியலும் (2003), செந்தமிழ் இலக்கண விளக்கம் - மூன்றாம் பாகம் - அகத்திணையியலும் புறத்திணையியலும் (2005), செந்தமிழ் இலக்கண விளக்கம் - நான்காம் பாகம் - மெய்பாட்டியலும் மரபியலும் (2008) என்ற நான்கு நூல்களும் இவரது நீண்டகால அரும்பெரும் முயற்சியின் அறுவடை எனலாம்.

இவரது செந்தமிழிலக்கணம் முதலாம் பாகம் இன்று பெறுவதற்கரிதாகிவிட்டது. இஃது எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் என்பனவற்றைக் கொண்டது. எமது மாணவர், ஆசிரியர், ஆய்வாளர்களுக்கு என்றும் பயனளிக்கக்கூடியது. மேற்படியான நான்கு நூல்களும் தொல்காப்பியம் மட்டுமன்றி நன்னூல், நேமிநாதம், வீரசோழியம், இலக்கணக்கொத்து, பிரயோகவிவேகம், இறையனார் களவியல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற மூல நூல்களையும் உரையாசிரியர் கருத்துக்களையும் அவற்றின் மேற்கோள்களையும் பொருத்தமான இடங்களில் கொண்டிருக்கின்றமையால் தமிழ்மொழி நிலைத்து மேலும் வளம்பெற உதவும் என்பதில் ஐயமில்லை.

### மொழிப்பயிற்சி நூல் வழங்கியோர்

தமிழ் இலக்கணத்தைத்தனித்துக் கற்பிக்கும் போது மாணவரும் ஆசிரியர்களும் அதனை வேம்பெனக் கருதுகின்றனர் என்று நினைத்த பல இலக்கண ஆசிரியர்கள் அதனை இலகுபடுத்திக் கற்பிப்பதற்காக எடுத்த முயற்சியின் ஒரு விளைவுதான் மொழிப்பயிற்சி தொடர்பாக எழுந்த பாட நூல்களாகும்.

இந்த அரிய முயற்சியில் இறங்கியோரின் முன்னோடி ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் நிறுவுனராகவும் கலாநிதி என்ற புகழ்பூத்த சஞ்சிகையின் ஆசிரியராகவும் பாடசாலைகளின் பரிசோதகராவுமிருந்த முகாந்திரம் தி. சதாசிவஐயர் (1882 - 1950) அவர்களாவார். இவரது தமிழ்மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும் முதற் புத்தகம் எனும் நூல் 1939 ஆம் ஆண்டிலிருந்து 1951வரை பன்னிரண்டு பதிப்பு களைக் கண்டது. அக்காலக் கலைத்திட்டத்திற் கேற்ப ஆங்கிலப் பந்திகளைத் தமிழிலே மொழிபெயர்க்கும் பயிற்சிகளும் இதில் உண்டு.

பேராசிரியை செல்வி சௌந்தரம் சந்தன நங்கை கந்தப்பு (1910 - 1977) அவர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியையாகவும் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் (கோப்பாய்) பணி புரிந்த காரணத்தினால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படக் கூடிய இலக்கண இடர்பாடுகளை நன்குஅறிந்து அவற்றை நீக்கித் தெளிவை உண்டாக்கக்கூடிய பலநூல்களை ஆக்கியுதவினார். செந்தமிழ்ப்பயிற்சிமாலை என்ற பெயரில் இவரது நூல்கள் வெளிவந்தன. மூன்றாந்தரம் தொடக்கம் கல்விப் பொதுத் தராதர ஆயத்த வகுப்பு வரையான வகுப்புகளுக்கு ஏழு நூல்கள் வரை எழுதியிருக்கிறார். இவை 1947ஆம் ஆண்டிலிருந்து 1959 வரையான காலப்பகுதிக்குள் வெளிவந்தவை.

ஆரம்பநிலை வகுப்பு மாணவர், ஆசிரியருக்குப் பயன்படும் பாஷையும் வசனப் பயிற்சியும் பகுதி இரண்டு (1951) எனும் நூலை இலங்கை சிறுகதை மூலவர்களுள் ஒருவரான க.தி.சம்பந்தன் (1913 -1995) அவர்கள் எழுதியுள்ளார். பயிலுந் தமிழ் - முதலாம்பாகம் (1952) என்ற நூலை எம்.வி ஆசீர்வாதம் °.ஞ.ஞானப்பரகாசம் ஆகியோர் இணைந்தும் பின்னர் தனித்தனியாகவும் எழுதி வெளியிட்டுள்ளனர். பயிலுந்தமிழ் இரண்டாம் பாகத்தை °.ஞ. ஞானப்பிரகாசம் 1954இல் எழுதி வெளியிட்டார். உயர் தர வகுப்புகளுக்கேற்ற "பைந்தமிழ்ப் பயிற்சி" (1953) எனும் நூலை வித்துவான் சி.ஆறுமுகம், வித்துவான் க.ந. இரத்தினவேல் (1923-2003) ஆகியோர் இணைந்து எழுதி யுள்ளனர். வித்துவான் பொன். முத்துக்குமாரன் (1920 - 1989) தமிழ் மரபு (1955) என்ற நூலையும் பண்டிதர் க. தம்பாபிள்ளை தமிழ்ப் பாஷையும் பயிற்சியும் (1956) தந்தனர். முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி (1896 - 1951) எழுதிய மொழிப் பயிற்சி முதற் புத்தகம் (1956) மொழிப்பயிற்சி மூன்றாம் புத்தகம் (1960) மொழிப்பயிற்சி நான்காம் புத்தகம் (1959) என்பன கிடைத்துள்ளன. இவை அக்காலத்தில் பல பதிப்புக்களைக் கண்டவை. இவர் 1949ஆம் ஆண்டி லிருந்து இவ்வாறான நூல்களை எழுதிவந்திருக்கிறார்.

பண்டிதர் க.யோ. ஆசிநாதன் அவர்கள் 1957ஆம் ஆண்டிலிருந்து வளருந்தமிழ் என்ற பெயரில் மூன்று மொழிப்பயிற்சி நூல்களை எழுதியிருந்தார் பண்டிதர் சி.கா தம்பையா ஆசிரியர் இ. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் இணைந்து ஐந்தாம் வகுப்புக்கான செந்தமிழ்த் தீபம் (1957) நூலை எழுதினாமொழி நூல் விளக்கமும் பயிற்களையும் உடையது இந்த நூல் பண்டித வ. நடராஜன் (1915 - 2000) மொழிப்பயிற்சி ஐந்தாம் புத்தகத்தைத் தனித்தும் மொழிப்பயிற்சி ஆறாம் புத்தகத்தை (1957) பண்டிதர் சு. வேலுப்பிள்ளை அவர்களுடன் இணைந்தும் எழுதியிருந்தார்.

கலாநிதி வ. பொன்னையா அவர்கள் இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறுவோர்க்கும் பிறர்க்குமாக எழுதிய நூல் தமிழிலக்கணமும் உரையமைப்பும் (1958) எனும் நூலாகும் பண்டிதர் க. இராசையா ஆறாம் வகுப்புக்கான பாஷைப் பயிற்சியும் விளக்கமும் (1964) நூலைச் செய்தார். நல்லூர் சாதனா பாடசாலையின் ஆசிரியராக இருந்த க.பே முத்தையா அவர்கள் கலாநிதி வ. பொன்னனையா அவர்களது நூலைப்போல விரிவானதான தமிழ் அறிவு (1966) எனும் நூலைத் தந்துள்ளார். இந்த நூல்களைப் பற்றி பண்டிதமணி அவர்களின் வார்த்தையிற் கூறுவதாயின் இனியவசனங்களில் விடயங்களை விளக்கிச் செல்லும் உரித்த வாழைப்பழக்கள் இவை.

### பண்டிதர் க. வீரகத்தி – புது இலக்கணம் ஆய்வு

நிறைவாக பண்டிதர் க. வீரகத்தி அவர்களின் இலக்கணப் பங்களிப்பினை நோக்கு மிடத்து மரபிலக்கணம் நவீன மொழியியல் என்பன சார்ந்து தமது பணிகளை ஆற்றியுள்ளார். கரவெட்டியைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருநெல்வேலி பரமேஸ்வரா பண்டித, ஆசிரிய கலாசாலையில் பண்டிதர் க. நாகலிங்கம் அவர்களுக்கு முன்னர் பண்டிதர் பட்டமும் பயிற்சியும் பெற்றவர். பேரறிஞர் கந்தமுருகேசன் (1902 - 1965) அவர்களிடம் குரு - சீட முறையில் இலக்கிய. இலக்கணங்களைக் கற்றவர். பல பாடாசலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். வாணி கலைக்கழகம் நிறுவி பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தவர். இவற்றின் மூலம் பெற்ற அனுபவமும் ஆய்வும் பல இலக்கண நூல்களையும் எழுதத் தூண்டியிருக்க வேண்டும்.

இவர் இதுவரை ஏழு இலக்கண நூல்களை எழுதியுள்ளனர். இவரது முதலாவது இலக்கண நூல் மொழித்தேர்ச்சியும் இலக்கணமும் (1955)கு.வி. செல்வத்துரையுடன் இணைந்து எழுதியது. எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணவிளக்கம் (1968) இலக்கண விளக்கம் விரிவு (19673) சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு (1969), கடலும் படகும் (1971), இலக்கண விதி மூலங்களும் விதிகளும் (1984), பிற்கால இலக்கணமாற்றங்கள் - எழுத்து (1911) என்பனவாகும்.

இவருடைய இலக்கண விளக்கம் க.பொ.த(சா.த) உயர்தர மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடியது ஏனையவை பெரிதும் ஆய்வாளர்களுக்குப் பயனளிக்கக்கூடியவை.

இவருடைய நிறைவான இலக்கண ஆய்வு நூல் பிற்கால இலக்கண மாற்றங்கள் - எழுத்து என்பதாகும். இ∴து இவர் தஞ்சைப் பல்கலைக்கழகத்திலே சிறப்பாய்வாளராக இருந்து 1986இல் சமர்ப்பித்தது. இவ்வாண்டு (2011) கொழும்பு - சென்னை குமரன் புத்தக இல்லத்திலிருந்து வெளிவந்திருக்கிறது. உயர் தரங் கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பட்ட மேற்படிப்பை மேற் கொள்வோர்க்கும் ஆய்வாளர்களுக்கும் பய னுள்ள நூல் இதுவாகும்.

## நிறைவுரை

மேற்குறிப்பிட்ட தகவல்கள் கருத்துக் களின் அடிப்படையிற் பார்க்குமிடத்து, ஈழத்த வரின் இலக்கணப் பங்களிப்புக்கள் குறைத்து மதிப்பிடப் படுவதற்குரியவையல்ல என்று தெரி கிறது. இன்னும் ஈழத்தவர்களால் எழுதப்பட்டு நூல் வடிவில் வராதும் (கட்டுரை வடிவில் உள்ளவையும்) நூலாக வந்தும் பலரால் அறியப்படாதும் பல ஆக்கங்கள் உள்ளன. மரபிலக்கணங்களைப் புறந்தள்ளி நவீன மொழியியல் வளரமுடியாது. மரபிலக்கணங் களிலும் அறிவியற் பார்வையுண்டு. எனவே ஈழத்தவரின் மறைந்திருக்கும் இலக்கண ஆக்கங் களை அரிதின் முயன்று கண்டுபிடித்து வெளிக் கொணர வேண்டும். இதன்மூலம் தமிழ்மொழி மேம்பாட்டுக்கான எமது அரிய முயற்சிகளையும் அனைவரும் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்த முடியும்.

## அடிக்குறிப்புகள்

1. முஸ்தபா, மணவை "செம்மொழியாக தமிழ் அறிவிக்கப்படும்! மெல்லத் தமிழினி வளரும்" தினகரன் வாரமஞ்சரி, 20.06.2004 ப.14
   1) தொன்மை
   2) தனித்தன்மை
   3) பொதுமைப்பண்பு
   4) நடுவுநிலைமை
   5) தாய்த்தன்மை
   6) பண்பாட்டு கலை, பட்டறிவு வெளிப்பாடு
   7) பிறமொழித் தாக்கமில்லாத தன்மை
   8) இலக்கிய வளம்
   9) உயர் சிந்தனை
   10) கலை இலக்கியத்தனித் தன்மை வெளிப்பாடு
   11) மொழிக்கோட்பாடு

2. வீரகத்தி க. (1974) "ஈழத்து இலக்கண முயற்சிகள்" நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர் பக். 98 - 100

3. அருள் பத்மராசன், த. (1998), நன்னூலுக்குக் கூழங்கையர் உரைத்திறன், ஜெயா பதிப்பகம், சென்னை.

4. வேலுப்பிள்ளை M. "இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறை" சிந்தனை, கார்த்திகை - 1984 ப. 93

5. முத்துத்தம்பிப்பிள்ளை, M. (1973 மூன்றாம் பதிப்பு) நன்னூல் உதாரண விளக்கம் பதிப்புரையில்

6. நடராசா, F.X.C (1957) (தொ.கு.) ஈழமும் தமிழும், கலைமகள் வெளியீட்டு. மட்டக்களப்பு பக். 30

7. நாகலிங்கம், க. (2008) செந்தமிழ் இலக்கண விளக்கம், நான்காம் பாகம், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம். ப. ஏஊ

8. கனகரத்தினம், வை. (19988) பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களின் நினைவுமலர். ப. 49

9. வித்தியானந்தன் சு. (1982) பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் தமிழ்மொழி இலக்கண இயல்புகள், அணிந்துரை, ப. ஏஊ

10. சண்முகதாஸ், அ. (1999) சு. சொக்கலிங்கம், வாசுகி சொக்கலிங்கம் ஆகியோரின் உரைநடைத் தெளிவு ஓர் அறிமுகம், அணிந்துரை ப. ஏஊஊ

11. சிவலிங்கராஜா எஸ். (2003) க. நாகலிங்கம் அவர்களின் செந்தமிழ் இலக்கண விளக்கம் அணிந்துரை, பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம். ப. எஊ

> மனிதத் தன்மையினை மனிதர் பெற உறுதுணையாய் விளங்குவது கல்வி
>
> \- வில்லியம் வேட்ஸ்வர்த்

> மன இருளை நீக்கி அறிவாகிய ஒளியைப் பரப்பும் கல்வி எல்லா மக்களையம் சென்றடைய வேண்டும்.
>
> \- பௌத்த மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு மற்றும் மறதி

**நினைவு என்றால் என்ன?**

நினைவு என்பது ஒருவகை மனக்களஞ்சியம்



என்று நினைப்பது நமக்கு எளிதாகத் தோன்றுகின்றது. ஆனால் அது உண்மையன்று! பகுத்தறிவு உலகத்தில் நினைவு மூளையுடன் இணைந்து பேசப்படுகின்றது. நாம் கற்றதை மனதில் இறுத்தி வைக்க உதவும் ஒரு முறை தான் நினைவு ஆகும். நாம் அறிந்தவற்றை நினைவுபடுத்திக் கொள்ளுதலே நினைவு ஆகும். இந்த நினைவு ஒவ்வொரு தனிமனிதனிடமும் இருக்கிறது. அது ஏதாவது ஒன்றினை நினைவில் வைக்கும் ஒரு செய்கையாகும்.

நினைவு என்பது செயல்திறமும் இயக்க இயல்பும் உடைய ஒரு சிக்கலான செயல்முறையாக இருந்து கற்ற பொருள்களோடு நிலையான பயன் விளைவைக் கொண்டுள்ள செயல்முறை என்று வரையறுக்கலாம். நாம் அதிகமாகக் கற்கும் போதும் நம் அனுபவம் விரிவடையும் போதும் நம்முடைய நினைவை விருத்தியடையச் செய்கிறோம். எல்லாச் செய்திகளும் மூலப்பொருளாக இருக்கின்றன. இந்த செய்தி நமது நினைவாற்றலுக்கு நமது சூழ்நிலையில் இருந்து பெறப்படும் நினைவுகளெல்லாம் வெளியே இருந்து பெறப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு அடுத்துப் பயன்படுத்த உதவும் வகையில் நம் நினைவில் தயாராக வைக்கப்படுகின்றன. எனவே நினைவு என்பது தேவை நேரும் போது பயன்படுத்திக் கொள்ளக் கூடியதும் ஒருங்கிணைக்கப் பெற்றதும் ஒரு விதச் சிறப்புத் தன்மை கொண்ட தூண்டல்களின் தொகுதி தான் என்று சுமித், சுமிதி என்ற இரு ஆசிரியர்களும் வரையறுக்கின்றனர். நினைவு அடிக்கடி செயலில் ஈடுபடுத்தப்படுகின்றது. அது சாதாரண செயல் சிக்கலான செயல் இரண்டினையும் செய்யவல்லது. இது ஒரு விருந்தில் அல்லது திருமணத்தில் கண்ட ஒருவரை அடையாளம் கண்டறிதல் போன்ற சாதாரண செயலாகும். "ஒத்தெல்லோ" நாடகத்திலிருந்து ஒரு பகுதியைத் தலைகீழாக ஒப்புவித்தல் அல்லது பிளாட்டோவின் தத்துவத்தை விவரிப்பது போன்ற சிக்கலான செயலாகவும் இருக்கக்கூடும்.

**நினைவு வகைகள்**

நினைவு பற்றிய வரையறைகள் ஒரு செயல்முறையை பற்றிய சில விளக்கங்களாக இருக்கின்றன. இச்செயல்முறை சில நடத்தையின் வெளிப்பாடாகும். எனவே நினைவு என்பது நடத்தையின் வெளிப்பாடுகளென வரையறுக்கலாம். இந்த நடத்தையின் வெளிப்பாட்டினைப் பரிசோதனை மூலம் ஆராய முடியும். நினைவு என்பது ஏராளமான செய்திகளின் களஞ்சியம் எனில் இந்தச் செய்திகள் அங்கே எவ்வாறு சென்றன? பயன்படுத்துவதற்காக அச்செய்திகளை எம்முறையில் பெறுகிறோம். இப்படிச் சேமிக்கப்பட்ட செய்திகளை நாம் பல்வேறு சமயங்களில் பல்வேறு காரணங்களுக்கு பயன்படுத்துகிறோம் என நம்பப்படுகிறது. இக்கருத்து நினைவில் பலவகைகள் இருப்பதாக எண்ணத் தூண்டுகிறது. இந்த வழியில் முதலில் சிந்திக்கத் தொடங்கிய பெருமை வில்லியம் ஜேம்ஸ் என்ற அமெரிக்காவின் புகழ் வாய்ந்த உளவியல் வல்லுனரைச் சாரும். இவர் முதன்மை நினைவுகளை இரண்டாந்தர நினைவுகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டினார். முதன்மை நினைவு அல்லது உடனடி நினைவு என்பது தற்சமயத்தில் நிகழும் எண்ணங்களாகும். இரண்டாந்தர நினைவு என்பது பழைய செய்திகளின் தொகுப்பாகும்.

வில்லியம் ஜேம்ஸின் காலந்தொட்டு இன்று வரை நினைவு முறைகள் பற்றிய அனேக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதன் விளைவாக ஏராளமான விபரங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் தான் நினைவில் பல வகைகள் இருக்கக் கூடும் என எண்ணும்படி செய்கின்றன. அவைகளைக் குறுகிய கால நினைவு நீண்ட கால நினைவு என்றும் அழைக்கலாம்.

**குறுகிய கால நினைவு**

குறுகியகால நினைவு சில சமயங்களில் புலனுணர்ச்சி படிவங்களுக்கு சமமானதாக கருதப்படுகின்றது. ஆனால் புலனுணர்ச்சிப் படிவங்கள் மிகக்குறுகிய வாழ்வினை உடையதாகையால் அவைகளைக் காட்டிலும் குறுகிய கால நினைவு சிறந்ததாகும். புலனுணர்ச்சி படிவங்களோடு ஒப்பிடும் போது குறுகியகால நினைவு நிரந்தரமானதாகும். குறுகிய கால நினைவு நொடிப்பொழுது நிற்கக்கூடியது. ஆனால் தீவிரமுடையது. அது கவனவீச்சினை ஒத்ததாகும். குறுகியகால நினைவின் ஆற்றல் ஓர் எல்லைக்குட்பட்டதாகும். அது மிகச்சில செய்திகளையே கொள்ளக்கூடியது. எனவே குறுகிய கால நினைவென்பதனை நீண்டகால நினைவு போலல்லாது ஓர் எல்லைக்குட்பட்ட ஆற்றலைக் கொண்டதும் செய்திகளை மிகக்குறைந்த காலமே பாதுகாக்கவல்லதுமான நினைவு செயல்முறையின் பண்புக்கூறுகள் என்று வரையறுக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.செய்திகள் தற்காலிகமாக குறைந்த நேரமே இருத்திவைக்கப்படுகின்றன. எனவே செய்திகள் திரும்பத்திரும்ப செய்தலை மௌனமாகவும் செய்யலாம். உரத்து சத்தமிட்டு பேசியும் செய்யலாம். சான்சாக நீங்கள் ஒருவரின் முகவரியை எழுதும் போது அவரின் இடத்துக்குரிய முகவரி இலக்கத்தை எழுதுகிறீர்கள். உடனே மறந்துவிடுகிறீர்கள். அதனை எழுதுவதற்கு எடுத்துக்கொள்கின்ற நேரமே நினைவில் வைத்திருக்கின்றீர்கள். இதனைப் போன்ற குறுகிய கால நினைவு பயன்படுகின்ற நிகழ்ச்சிகள் எமது அன்றாட வாழ்வில் தினமும் நிகழ்கின்றன.

வாய்மொழிச் செய்திகளை குறுகிய காலம் நினைவிலிருத்தல் சம்பந்தமாக எல் பீட்டர்சன், எம்.ஜே.பீட்டர்சன் என்ற இருவரும் ஒரு பரிசோதனையை மேற்கொண்டனர். இச்சோதனையில் ஆட்படுவோனுக்கு ஒரு தூண்டல் முறை மிகக்கறைந்த நேரமே அளிக்கப்பட்டது. சி.எச்.ஜே. மூன்று மெய்யெழுத்துக்கள் கொண்ட பொருளற்ற அசைச்சொல் ஒன்று உரக்கச்சொல்லப்பட்டது. இச்சோதனையில் ஆட்படுவோனின் பணி சி.எச். ஜே. ஐயை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் ஆட்படுவோன் அந்த அசைச் சொல்லை சொல்லிப் பார்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. குறிப்பு கொடுக்கும் வரை 506 என்ற எண்ணை பின்பக்கமாக எண்ணும்படி ஆட்படுவோனுக்கு சொல்லப்பட்டது. குறிப்புக் கிடைத்தவுடன் 3,6,9,12,15 அல்லது 18 நிமிடங்களுக்கு பிறகு நினைவுக்கழைத்தல் முற்றிலும் முடியாது போய்விட்டது. ஒத்திகை அல்லது சொல்லிப் பார்க்க முடியாது போய்விடும் போது நினைவு இழப்பு மிக வேகமாக இருக்கிறது. என்பதனை இச்சோதனை காட்டுகிறது. இச்சோதனையில் மறதி அதிதீவிரமாக இருந்தது என்றோ அல்லது கற்றல் நடைபெறவில்லை என்றோ நாம் சொல்லலாம். இத்தகைய விளைவு முதல் சிறு முயற்சிகளிலே விளைந்து விடுவதில்லை. மாறாக பல முயற்சிகள் செய்த பின்னர் தான் ஏற்படுகிறது. இதில் முன் அனுபவங்களில் குறுக்கீடு இருக்கிறது என்பதனை இது காட்டுகிறது. இது செய்வினை சார்பான குறுக்கீடு எனப்படுகிறது. செய்வினை சார்பான குறுக்கீடு என்பது முன்னர் கற்றவை, தற்போது கற்பனவற்றின் நினைவில் குறுக்கிடும் செயலாகும். கற்றவற்றை சிறிது நேரமே நினைவில் வைத்துக்கொண்டு பின்னர் மறந்து விடுவது குறுகிய கால நினைவில் அடங்கும். கற்றவை நினைவில் இருக்க வேண்டும் எனில் அது நீண்ட கால நினைவில் சேமித்து வைக்கப்பட வேண்டும். அதற்கு கற்றவற்றினை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்து ஒத்திகை நடத்த வேண்டும். இப்படிப் போதுமான அளவு செய்தால் அது நிரந்தரமாக சேமித்து வைக்கப்படுவதற்காக நீண்ட கால நினைவுக்கு மாற்றப்படுகிறது. செய்திகள் குறுகிய கால நினைவில் மிக வேகமாக மறைந்து போகின்றன.

**நீண்ட கால நினைவு**

நீண்ட கால நினைவு என்பது நினைவு தொகுப்பில் செய்திகளை பதிவு செய்து வைக்கும் நிலையாகும். அது கற்ற பொருளை நீண்ட காலத்திற்கு நினைவில் இருத்தலை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இது செய்திகளைப் பெறுவதில் மிகச் சிறந்த ஆற்றலை கொண்டிருக்கின்றது. நீண்ட கால நினைவு என்பது குறகிய கால நினைவு போல் அல்லாது நினைவுச் செயன்முறையின் நிலையான உறுப்பு என்று வரை வரையறுக்கலாம். நிண்ட கால நினைவுக்கு வேண்டியதெல்லாம் மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்துக் கொள்ளும் ஒத்திகைதான்.

நீண்ட கால நினைவு சம்பந்தமாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அச்சோதனைகள் எல்லாம் கற்றவற்றினை நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நினைவிறுத்தல் மட்டுமே ஆராய்ந்தன. ஒரு குறிப்பிட்ட செய்தியினைச் சொல்லிப் பார்த்து ஒத்திகை செய்து கொள்ளாவிட்டால் அது சில நிமிடங்களுக்குப் பின்னர் நினைவில் இருந்து மறைந்து விடுகிறது. இத்தகைய ஒத்திகை வரையறையற்றதன்று. நிறைய விபரங்களை ஒரே சமயத்தில் ஒத்திகை பார்த்துக்கொள்ள முடியாது. செய்திகளை நீண்ட கால நினைவிற்கு மாற்றுவதற்கு அநேக ஒத்திகைகள் செய்யப்பட வேண்டும். இச்செயல் முறையில் குறகிய கால நினைவு செய்யும் வேலை ஒழுங்குபடுத்துதல் ஆகும். ஒழுங்குபடுத்துதல் என்பது பொதுத்தமான ஒரு தூண்டலுக்கு செய்திகள் நினைவிற்கு வரும் வண்ணம் நீண்ட கால நினைவில் ஒரு சுருங்கிய வடிவத்திற்கு கொண்டு வரும் பொருட்டு செய்திகளை மாற்றியமைத்து சிரமப்படுத்தும் செய்கையாகும். ஆனால் இச்செய்கை நாம் உணர முடியாதபடி சாதுர்யமாக நடைபெறுகின்றது.

இதை ஒழுங்குபடுத்தும் செயலால் நீண்ட கால நினைவில் செய்திகள் நிலையானதாக இருக்கும்படி தொகுக்கப்படுகின்றன. கற்ற செய்திகள் ஒத்திகை பார்த்தல், மாற்றியமைத்தல், ஒழுங்குபடுத்துதல் ஆகிய செயல்களுக்குப் பின்னரே இந்த நிலையை அடைகின்றன. புதிய செய்திகள் நீண்ட கால நினைவிற்குள் புகுத்தப்படும் போது பழைய செய்திகள் மீண்டும் மாற்றியமைக்கப்படுகின்றன.

மேலும் நீண்ட கால நினைவில் சேகரித்து வைக்கப்பட்ட செய்திகள் நாம் விரும்பும் வண்ணம் மாற்றியமைக்கப்படுகின்றன. இந்தச் செய்திகள் நீண்ட கால நினைவில் நிலையானதாகும். தூண்டல் போதுமானதாக இல்லாவிட்டால் சில நேரங்களில் இதனை நம்மால் நினைவுக்கழைக்க முடியாது போய்விடும். நமக்குத் தெரியாத செய்திகளைக் காட்டிலும் நன்கு பழக்கமான செய்திகள் எளிதாக தன்னியலாக்கி வகைப்படுத்தப்படுகின்றன.

**மறதி என்றால் என்ன?**

நமது அன்றாட உரையாடலில் மறதி என்ற சொல்லை பல முறை பயன்படுத்துகிறோம். நல்ல நோக்கம், தீய நோக்கம் அது பயன்படுத்தப்படுகின்றது. அது கற்றல் செயல்முறையில் உள்ளடங்கி இருக்கிறது. மறதி நினைவு கொள்ளுதலுக்கு எதிர்மறையானது. அது நினைவிலிருத்தின் தோல்வியாகு மென்றும் சொல்லப் - படுகின்றது. நாம் கற்பதின் பெரும் பகுதியினை மறந்து விடுவதாக எண்ணிக் கொண்டிருக்கின்றோம். மறதி அறிதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலோடு தொடர்பு கொண்டிருப்பதால் உளவியலாளர்கள் அச்செயல் பற்றி முழுமையாகக் கற்றறிய முயல்கின்றனர்.

மறந்து போனவைகளை அடிக்கடி பின்னோக்கிப் பார்த்தும் அல்லது கற்றும் திரும்பவும் மீட்டுக் கொள்கின்றோம் என்பது உண்மையாகும். எனினும் மறதியை பற்றி உண்மைகளையும் நியதிகளையும் பற்றி அதிகம் அறிந்து கொள்வது மறதியின் மீதான நமது கடப்பாடு மேலும் நல்ல விளைவினைத் தரும். நாம் நினைவில் வைத்துக்கொள்ள விரும்புவனவற்றையும் மறக்க முடியாமையும் பொதுவாக நமது வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் ஒரு சிரமமாகும். மக்கள், தமது வாழ்வில் நிகழ்ந்த மகிழ்ச்சியற்ற செய்திகளை மறக்க முடியாத போது துன்பமடைகின்றார்கள். தாம் செய்ய இறங்கத்தக்க செயல்களை மறப்பதற்கான ஆற்றலை அருளும்படி இறைவனை வேண்டிக் கொள்வதும் உண்டு.

எப்படி மறப்பது? என்ற வினாவிற்கு உளவியலாளரிடம் ஏதாவது விடை உண்டா, ஆம் விடையிருக்கின்றது. அதற்கான விடை பின் கண்டவிதமாக கொடுக்கப்பட்டிருக்கின்றது.

- நீங்கள் எதையாவது மறந்துவிட விரும்பினால் நினைவில் கொள்வதற்கு கடைப்பிடிக்கும் விதிகளைக் கைவிட்டு விடுங்கள்

- ஒன்று நிகழ்ந்த பிறகு அல்லது கற்ற பிறகு அதனை மீண்டும் நினைத்துப் பார்ப்பதில் ஒருபோதும் ஈடுபட வேண்டாம்.

- துன்பம் நிகழ்ந்த இடத்திலிருந்து ஓர் இடமாற்றம் இருப்பது நல்லது

- தீவிரமான உடல் உழைப்பில் அல்லது வேறு புதிய செயல்களில் நீங்கள் களைத்துப் போகும் வரை ஊங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு அயற்சியினைத் தந்து ஆழ்ந்த உறக்கத்தினைக் கொடுக்கும் அதன் விளைவாக சிந்திக்க அல்லது மீண்டும் நினைத்துப் பார்க்க வாய்ப்பிருக்கிறது.

- நடந்தவற்றை ஓர் இறுதியான நியாயவாத முடிவுக்கு விட்டுவிடுங்கள். அதனை முற்றுப்பெற்ற அத்தியாயமாக செய்வதன் மூலம் மறதி எளிதாகிறது. இந்த அணுகுமுறையில் ஓர் வினை பாதியில் நிற்காமல் முற்றுப் பெற்று விடுவதால் பாதுகாத்து வைக்கும் தன்மை ஆற்றலிழந்து போய்விடுகின்றது.

- கடைசியாக மறந்துவிடுவதற்கு காலம் நமக்கு உதவுகிறது காலம் சிறந்த நிவாரணி என்று சொல்லப்படுவது வெறும் காலத்தின் தன்மை பற்றி அன்று. ஆனால் அந்த இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ காரியங்கள் நிகழ்கின்றன.

மறதி எப்போதும் நம்முடைய பிரதி கூலத்திற்காகவே இருக்கும் என்ற அவசியம் இல்லை. ஓரளவு மறதி மனித உயிர்களுக்கு கிடைத்த மறைமுகமான ஒரு வாழ்த்தாகும். எனினும் வாழ்வில் நாம் மறக்கக் கூடாத செய்திகள் பல இருக்கின்றன. மறதி ஏற்படும் போது என்னதான் நிகழ்கிறது என்பதனை அறிந்து கொள்வது அவசியமாகும்.

மறதி என்பது நினைவிலிருத்தல் மறதி நோயாகவோ அல்லது நினைவுக்கழைத்தல் மறதி நோயாகவோ இருக்கக்கூடும். மறதி நோய் என்பது ஒட்டுமொத்தமாகவோ அல்லது அரைகுறையாகவோ நினைவிழந்து போவதாகும். நினைவிலிருத்தல் மிகவும் பலவீனமாக இருக்கின்றது. எனவே நினைவிலிருத்தலை வலிமையாக்க மேலும் கற்றல் அவசியமாகும். நினைவுக்கழைத்தல் மறதி நோயைச் சமாளிக்க பெருமளவு ஊக்குதல் தேவைப்படுகிறது. நினைவுக்கழைத்தல் செயலிலுள்ள முட்டுக்கட்டையின் காரணமாக தான் நினைவுக்கழைத்தல் மறதி நோய் ஏற்படுகிறது. இந்த முட்டுக்கட்டை அச்சம், கவலை, தன்தெளி உணர்வு நிலை போன்ற மனவெழுச்சி சார்ந்த தொல்லைகளினால் ஏற்படுகின்றது.

மறதி என்பது கடந்து செல்கின்ற காலத்தோடு அமைதியாக செல்கின்ற ஒரு மந்தமான செயல்முறை என்று நாம் எண்ணிக்கொண்டு இருந்திருப்போம். ஆனால் மறதி ஒரு சுறுசுறுப்பான செயல்முறை என்று பரிசோதனையாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். சான்றாக ஒரு கதையினை நினைவுக்கழைக்கும் போது சில விவரங்களை மறந்து விடுகின்றோம் என்பதை பொதுவாக நாம் ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் மறந்து விட்ட இடங்களில் முயற்சி ஏதும் இன்றி நம்மை அறியாமலேயே சில துணை விவரங்கள் சேர்க்கப்படுகின்றன. மேலும் மூலத்தில் இருப்பதை அப்படியே நாம் நினைவு கூர்வதாக உறுதியாக நம்பிக் கொண்டிருக்கின்றோம். கவர்ச்சியான இந்தக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி பற்றி பரிசோதனைகள் மேற்கொண்ட உளவியல் வல்லுநர்கள் பலருள் கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தை சார்ந்த பேராசிரியர் பார்லெட் என்பவர் மிகவும் குறிப்பிடத்தகுந்தவர் ஆவார்.

தொடரும்

**நன்றி**
**கல்வி உளவியல்**
**சென்னை பல்கலைக்கழகம்**

> தான் பெற்றுள்ள அறிவினையும் ஆற்றல்களையும் இன்று பிறந்து வளரும் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த மனித சமூகம் மேற் கொள்ளும் பல்வேறு சேவைகளின் தொகுப்பே கல்வியாகும்.
>
> \- ஜோன் டுயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஆசைச் சட்டம்பியார்

ஈழகேசரி
28.04.1946.

செல்லத்துரை சட்டம்பியார் அந்த வீட்டை விட்டுப்போய் வாரமும் ஒன்று கழிந்து விட்டது. அவரிருந்த அறையில் இப்போது அவரை ஞாபகப் படுத்துவதற்குக் கிடந்தது ஆகக்கூடிய அவரது மூக்குத்தூள் டப்பியொன்று தான். அதையுங் கொண்டு சண்டையிட்ட வண்ணம் வீட்டினுள்ளே நுழைந்த இரு பிள்ளைகள் "கும்" "ராணி" என்னுமிருவரும். ஐந்து வயது வரைக்கும் குழந்தையின் வளர்ப்பு முழுவதும் ஆயாமாரின் பொறுப்பில் இருந்தபடியால் அந்தப்பருவத்து (இன்பங்களையோ) தொந்தரவுகளையோ அனுபவிக்காததாய் "விஸ்ஸா"வுக்கு பெற்றோரிட்ட பெயர் விசாலா(ம்) – வசதி வாய்க்கவில்லை. அப்பொழுதும் அவர்களைப் பார்ப்பதும் மேய்ப்பதும் பணிப் பெண்களுடைய வேலையேயாகும். பிள்ளைகளுக்கு படிக்கும் வயது வந்துவிட்ட படியாலும் சுதேச பாஷைகளுக்கு மதிப்பு ஏறத் தொடங்கிவிட்ட படியாலும் வீட்டிலேயே இதற்கென ஒரு சட்டம்பியாரையும் வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமொன்று சில பணக்கார வீடுகளிலே ஏற்பட்டுக் கொண்டது. சட்டம்பியார் இல்லாத வேளைகளிலே பிள்ளைகளை வீட்டில் வைத்துச் சமாளிப்பதென்றால் விஸ்ஸாவுக்கு ஒரே தலையிடிதான். ஆனால் அதே பிள்ளைகளைச் சட்டம்பியார் சற்றே உரத்த குரலிலே உறுக்கி அதட்டினாலே போதும் உடனே விஸ்ஸாவுக்கு கண்ணீர் ஆறாப் பெருக ஆரம்பித்துவிடும். குழந்தைகள் பண்ணும் அமளியைப் பொறுக்க முடியாத விஸ்ஸா வெளி விறாந்தையில் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த தன் புருஷனருகே சென்று "புதுச் சட்டம்பியார் எப்போது வருகிறார்? ஒருவரையும் இன்னும் ஒழுங்கு பண்ண - வில்லையோ?" என்று பெருந்தொகைப் பணம் செலவிட்டு அரிதிற் படித்து ஓரளவிலே வீட்டுப் பாஸையாகிய இங்கிலீசிலே கேட்டாள்.


உடனே "போய்" (பையா) என்று இராட்சத தொனியிலே சப்தமிட்டார் மிஸ்டர் நாகலின்கன் (நாகலிங்கம்) 'Coming Sir' (இதோ வந்துவிட்டேன்) என்று ஆங்கிலத்திற் சொல்லிக் கொண்டே அவர் முன்னிலையில் வந்து நடுங்கி நின்றான் ஒரு "றாமன்".



© Alex Bannykh * www.ClipartOf.com/56221

'இன்னைத் தபால் இன்னும் வரக்காணோம். தபாற்காரர் வேலை நிறுத்தம் செய்யத் திடீரென்று தொடங்கினாலும் தொடங்கி இருக்கலாம். எதற்கும் நீ தபாற்கந்தோருக்கு போய் தபால் பார்த்துவா" என்று கட்டளையிட்டார் லிங்கன்.

'அப்படியே செய்கிறேன்'



என்று பணிவுடன் சொல்லிவிட்டுப் போன றாமன் கால் மணித்தியாலத்திற்குள்ளாக நாலைந்து காகிதங்களுடன் வந்து சேர்ந்தான். லிங்கன் காகிதங்களை வாங்கி உடைத்து வாசித்த பின்பு மனைவியை அழைத்து ''மிஸ்டர் ஆறுமுகம் என்றொருவரை ஒழுங்கு படுத்தியிருக்கிறார்களாம். வருகிற திங்கட் கிழமை கட்டாயம் வந்து சேருவாராம்" என்றார்.

விஸ்ஸா: 'வருகிறவர்கள் ஏதாவது கல்யாணமென்றும் அதென்றும் இதென்றும் சாக்குப் போக்குச் சொல்லி அடிக்கடி அவ்விடத்தை விட்டு போய்விடுகிறார்களே. இவர் எப்படிப் பட்டவரோ தெரியவில்லை' என்றிழுத்தாள். லிங்கன் "குறைந்தது இரண்டு வருஷமாவது நின்றுபிடிக்க வேணும் என்று சொல்லியிருக்காம். எதற்கும் ஆள்வந்து சேரட்டும். நாங்களும் நறுக்காய்ப் பேசிக்கொள்வோம்."

விஸ்ஸா: எப்படியும் பிள்ளைகள் சந்தோஷமாயிருக்க வேணும். சட்டம்பியாரென்றால் செல்லத்துரைச் சட்டம்பியாரைப்போல் வந்து வாய்க்கவேணும் எந்த நேரமும் அவர் மடியிலேதான் காணலாம் பிள்ளைகளை. அவர் செல்லமாய் நடத்தினபடியாலல்லவோ பிள்ளைகள் எங்களை எள்ளளவும் நினைக்காமல் நாள் முழுவதும் அவரோடேயே பொழுது போக்கி வந்தார்கள்."

லின்கன்: ''எதுவும் கணக்கு வழக்காய் அளவாயிருக்கவேணும். அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சு. நீ அளவுக்குமிஞ்சி காட்டுகிற செல்லத்தினாலேதான் பிள்ளைகள் உருப்படுகிறார்களில்லை. இத்தனை சட்டம்பிமார் வைத்துப் பார்த்தும் ஒரு மண்ணாவது இன்னும் மூளையிலேறவில்லையே"

விஸ்ஸா: "என்னவோ இப்போதே சொல்லிவைக்கிறேன். எந்தக் கவுணரானாலும் சரி, என் பிள்ளைகளின் மேலே மாத்திரம் கைவைக்க விட மாட்டேன். படிப்பிக்கிறதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்காமற் படிப்பிக்கட்டும். அவருக்கென்ன! சம்பளந்தானே தேவை.

லின்கன்: அதெல்லாம் அவர் வரட்டும். பேசிக்கொள்வோம்"

மேலே ஒவ்வொருவரும் தத்தம் கருமத்தின்மேற் செல்லலாயினர்.

திங்கட்கிழமையும் வந்தது. ஆறுமுகச் சட்டம்பியாரும் வந்து சேர்ந்தார். வந்தவரை உபசரித்து, அவருக்கு வேண்டுவனசெய்து, நிபந்தனைகளையும் பேசி முடித்து, அவரை அவருக்குரிய விடுதியறையிற் சேர்த்தார்கள்.

"காட்டுப்பூனை போன்ற அவரது கடுகடுத்த முகத்தைப் பார்க்க எனக்கே பயமாயிருக்கும்பொழுது பிள்ளைகளுக்கு எப்படித்தான் படிப்பு ஏறப்போகுதோ தெரியாது" என்று சற்றே ஏக்கங்கொண்டாள் விஸ்ஸா.

"படிப்பைப்பற்றி உனக்கே இவ்வளவு கவலை ஏற்படுகிறது நல்ல சகுனந்தான். அந்தக் கவலையை இப்போதைக்கு சட்டம்பியாருடன் விட்டால் நல்லது. நாங்கள் கண்மூடினால் இந்தப் பிள்ளைகளுக்கு நடக்கிறதைப் பற்றி ஏதாவது அறியப்போகிறோமோ? படிக்கிற வேளையிலாவது அவர்களுடைய செல்லத்தை நினைக்காமற் கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டிரு. அவர்கள் உருப்படுவார்கள். அது கிடக்க, சட்டம்பியார் இன்றைக்குத்தானே வந்திருக்கிறார். அவருடைய தோற்றத்தைக் கொண்டு அவருடைய குணத்தைக் கணிக்காதே. பலாப்பழம் போல உள்ளே தித்திப்பும் வெளியே முள்ளுமாயிருக்கினும் இருக்கலாம்" என்று சமாதானம் பண்ணினார் லிங்கன்.

பிள்ளைகளும் கொலைக்களத்திற்குச் செல்வார்போல வெகு அச்சமுடையராய்ப் படிப்பறைக்குப் போகலாயினர்.

"வரலாம் வரலாம். வந்து உட்காரலாம்" என்று அதிகார தோரணையிலே சொல்லி எதிரிலிருந்த கதிரைகளைச் சுட்டிக் காட்டினார். வீட்டுக்குக் காகிதமெழுதிக் கொண்டிருந்த சட்டம்பியார்.

காலிற் சப்பாத்து கிரீச் கிரீச் என்று சப்தமிட உள்ளே மெதுவாக நுழைந்தனர் பிள்ளைகளிருவரும். உள்ளங்காலில் இருந்து உச்சிவரையும் அவர்களை ஏறிட்டுப் பார்த்துச் செருமிக் கொண்டு பின்வருமாறு உறுமினார் சட்டம்பியார்.

"கிட்டவாருங்கள். உங்கள் காலுக்குச் சப்பாத்து அவசியம் தேவைதானா? ஆண்டவன் தந்தகாலை ஏன் இப்படித் தோலினாலே மூடி வரைந்து இறுக்கிக் கட்டி பலவீனப்படுத்தி அலங்கோலமாக்குகிறீர்கள்? கழற்றி எறியுங்கள். சுத்தமான காற்று கொஞ்சமாவது காலில் படட்டும். ஒருவேளை காலிலே அழுக்குப் பிடிக்கும் என்றெண்ணமோ? இது ஆருடைய வீடு? உங்களுடைய வீடுதானே! உங்களுடைய வீட்டை ஆர் சுத்தமாய் வைத்திருக்க வேண்டாமென்பது? கழற்றுங்கள் சப்பாத்தை. இந்த அறையினுள்ளே நீங்கள் வெறுங்காலுடனேதான் புழங்கவேண்டும்"

இதைக்கேட்ட பிள்ளைகள் ஏதோ இடிவிழுந்தது போலத் திகிலடைந்து, ஒன்றும் செய்ய முடியாதவர்களாய் சிறிது நேரம் மிரள விழித்துக்கொண்டு நின்றுவிட்டு பின்பு ஒருவாறு சப்பாத்தைக் கழற்றிச் சுவரோரமாக வைத்துவிட்டுத் தங்கள் ஆசனத்தில் உட்காரலாயினர்.

உட்கார்ந்த பின்பு, தாம் அறியவேண்டிய விஷயங்களைப் பிள்ளைகளிடம் விசாரிக்கலானார் சட்டம்பியார்.

"தம்பீ! உன் பேரென்ன?"

((மெதுவான குரலிலே) "கும்"

சட்டம்பியார் "என்ன?" என்று காதிற் கையைச் சேர்த்துச் சற்றே குனிந்து உறுமினார்.

"கும்" என்ற மறுமொழியே மீண்டும் வந்தது.

"அதென்ன 'கும்' என்றால்? முழுப்பெயரையுஞ் சொல்லு"

"குமாரசுவாமி"

"தெய்வமே! ஆண்டவனை நினைவூட்டும் அருமந்த பேரை இப்படியா கொலை பண்ண வேண்டும்? நான் கூப்பிடும் பொழுது முழுப்பெயரையுந்தான் சொல்லிக் கூப்பிடுவேன். கதிர்காமத்தையனை, நல்லூர்க்கந்தனை, செந்தூர்தேவனை நினைப்பூட்டி எங்கள் பிறவிப்பிணியை தீர்க்கிற திருநாமத்தைக் கொலை பண்ணாதே"

"பிள்ளை! உன் பேரென்ன?"

"றாணி"

"என்ன றாணி"

"கமல றாணி"

"நல்லது, அந்த லஷ்மிகரமான பெயர் முழுவதும் என் காதிலே விழவேணும்"

"சரி - எங்கே - உங்கள் புத்தகங்களை பார்ப்போம். எடுங்கள்"

"புத்தகங்கள் சட்டம்பியார்தான் வைத்தெடுத்துத் தருகிறவர் எங்களிடம் இல்லை"

"படிக்கிறது யார்? நீங்களா? சட்டம்பியாரா? இந்த நிமிஷம் கொண்டு வந்து காட்டவேணும் புத்தகங்களை - உ ம் ம்!

"உந்த மேசையின் லாச்சியினுள்ளேதான் வைத்தவர் பழைய சட்டம்பியார்"

"இப்புறம் வந்தெடுங்கள் கெதியாய்"

வாயில் விரல் சூப்பிய வண்ணம் மேசையருகே மெதுவாகப் போனார்கள்.

"வாயில் விரலை எடுங்கள். பசித்தால் வீட்டுக்குப்போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது சாப்பிட்டு வாருங்கள். முதலிலே கையைக் கழுவி வாருங்கள்."

பெருமூச்செறிந்து கொண்டு அடுத்த அறையொன்றிற்குப் போய் கை கழுவின பின்பு, திரும்பி வந்து மேசை லாச்சியினுள்ளிருந்த தங்கள் புத்தகங்களை எடுத்து அம்மேசையின் மேல் வைத்தார்கள்.

"ஏன் இந்தப் புத்தகமெல்லாம் இவ்வளவு அழுக்கேறி உருவங்கெட்டுக் கிழிந்து போயிருக்கு? ஒவ்வொரு புத்தகமும் உறையிட்டுச் சுத்தமாய் வைத்திருக்க வேணும். இப்பொழுதே எனக்கு முன்னாலிருந்து சீா்படுத்துங்கள் பாா்ப்போம்"

அவா்கள் புத்தகங்களைச் சீா்படுத்திக் கொண்டிருக்கும் பொழுது அவா்கள் மீது கவலைகொண்டு வீட்டில் ஒரு கருமமும் பாா்க்க முடியாதவா்களாய் தவித்துக்கொண்டிருந்த விஸ்ஸா அவா்களைப் பாா்க்கும் பொருட்டு அங்கே சென்று அடிமேல் அடிவைத்து மெதுவாக அவா்களருகே போய்க்கொண்டு "சட்டம்பியாா்! இன்றைக்கெப்படி? எல்லாம் ஒழுங்காய் நடைபெறுகின்றது தானே? என்று கேட்டாள். "பிள்ளைகள் படிக்குமிடத்திலே பிற அலுவல்களுக் - கிடமில்லை. படிப்பறையினுள்ளே திறந்த வீட்டினுள் நாய் புகுவது போல் ஒருவரும் வரவேண்டாம்" என்ற பதில் காதில் விழுந்ததே அவளுக்கு தலை கிறுகிறுக்கத் தொடங்கி விட்டது. அவா் தன் பிள்ளைகளுக்கு கட்டளை இடும்பொழுது அவா்கள் ஆடாமல் அசையாமல் சித்திரப்பாவை போலிருந்து கேட்டுப் பணிகளை நிறைவேற்றுதலையும் அவருடைய தொனி ஏதோ எளியாா் வீட்டுப் பிள்ளைகளை ஏவுதல் போலிருத்தலையும் அவள் கண்டாள். சப்பாத்துக்கள் சுவரோரமாய் இருப்பதையும் பிள்ளைகள் வெறுங் காலோடிருப்பதையும் ஆத்திரம் துக்கம் எல்லாவற்றையும் அடக்கிகொண்டு தலைகுனிந்த வண்ணம் வந்த வழியே திரும்பிவிட்டாள் விஸ்ஸா.

அன்றெல்லாம் தான் கண்ட காட்சியையிட்டுப் புருஷனிடம் பிணங்கினாள். ஆனால் அவரோ, "சிவபூசையிலே கரடி விட்டாட்டுவது போல நீயேன் பிள்ளைகளுடைய படிப்பு வேளையில் அங்கே போனாய்? படிப்பறையை என்னத்திற்காக வீட்டினின்றும் இவ்வளவு தூரம் தள்ளிக் கட்டி வைத்திருக்கிருக்கிறோம்? சட்டம்பியாா் தனக்கு ஏதாவது வேணுமென்றால் அவா் தானாகவே எங்களுக்குத் தெரிவிப்பாா். வரமுந்தியே அவரைக் கலைக்க முயலாதே. அவா் கண்டிப்பானவரென்று கேள்விப்பட்ட படியினாலேதான் அப்படியானவரையும் ஒருமுறை பாா்ப்போம் என்று நான் உடன்படலானேன். எதற்கும் அவசரப்படாதே. இனிமேல் ஆகவேண்டியதைச் செவ்வனே செய்துகொள்" என்று சற்றே கண்டிப்பாகத்தான் மறுமொழி சொன்னாா். இதுவும் என் தலைவிதிதான் என்றெண்ணி மௌனஞ் சாதிக்கலானாள் விஸ்ஸா.

அடுத்தது காட்டும் பளிங்குபோலப் படிப்பறையிலிருந்து வந்த பிள்ளைகளின் முகம் அன்றைய அனுபவத்தின் கசப்பைத் தெளிவாகக் காட்டியதை விஸ்ஸா, லின்கனும் அவதானித்திருந்த போதிலும் வெளியே பிள்ளைகளுக்கு உற்சாக வாா்த்தைகளையே சொல்லிக் கசப்பைக் போக்க முயன்றாா் அந்த லிங்கன். முதலாம் நாள் இப்படிக் கழிந்தது.

காலச் சக்கரம் விரைந்து சென்றது. பிள்ளைகளுடைய நடையுடை பாவனை வாழ்க்கை என்னுமிவை எல்லாவற்றிலும் அநேக மாறுதல்கள் உண்டாகிக் கொண்டன. குறித்த நேரங்களிலே அவ்வவ் காரியங்களைச் செய்யத் தலைப்பட்டுக் கொண்டனா். தாங்களே தங்கள் பல்லைத் துலக்கலாயினா். தங்கள் உடைகளைத் தாங்களே களைந்து தோய்த்து உலா்த்தி உடுக்கத் தொடங்கினா். தங்களைப் பொறுத்தவரையிலே ஆயாமாருடைய சேவையையும் வேலைக்காரருடைய சேவையையும் கூடியவரையிலே நீக்கி நடக்க முயலவராயினா். சமயாசார சீலங்களைக் கைக்கொள்லாயினா். தும்பி, வண்ணத்திப்பூச்சி முதலானவைகளை பிடிப்பதுமில்லை. அவைகளுடைய சிறகையொடித்து வருத்துவதுமில்லை. பேச்சிலும் "கீழோராயினும் தாழவுரை" என்னும் மூதுரைக்கு ஓா் இலக்கியமாய் அமையலாயினா்.

இவைக்கெல்லாம் காரணம் யாது?

"அணுக்கள் சோ்ந்தே அண்டமானது. அணுக்களின் குணமே அண்டத்தின் குணமாக பரிணமிக்கிறது. ஆனபடியால் அணுவை நல்லணுவாக்கினால் அண்டம் நல்லண்டமாகும். பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் நல்லவா்களாயிருந்தால் உலகம் முழுவதும் நல்லதாயிருக்கும். பணச்செருக்கு ஆகாது முடிமன்னரும் பிச்சையெடுக்கலாயினா். பணத்திமிரினாலே தொழிலிலே வேறுபாடு கற்பித்து பிறரைத் தாழ்த்திக் கெடவேண்டாம். சாதித்திமிா் ஆகாது. பிறரெல்லாம் தங்கள் சாதிக்கே அடிமைகளாம் என்று இறுமாப்புக் கொண்டெழுந்த ஹிற்லரின் வீழ்ச்சியை நீங்கள் காணவில்லையா? இப்பொழுது அவருடைய நாடே உலகத்திற்கு அடிமையாகிவிட்டது. நிறத்திமிா் ஆகாது. நிறத்திமிருக்கும் அதோ கதிதான். நிறத்திமிா் கொள்ளுகின்ற வீடு ஒவ்வொன்றும் தென்னாபிரிக்காவாகி கொந்தளிக்க, திமிா்கொண்டோரது நீதியெனப்படுவதெல்லாம் பிறருக்கு வாத்தியாா் தனக்கு வாத்தியாரல்ல என்னும் பழிமொழிக்கிடமாகிவிடும். வசையுற்றும் மானமுடையாா் போலப் போலி வாழ்வே வாழ நேரிடும். பிறரைப் பழித்தலாகாது. அவா்களுடைய நிலையில் உங்களை வைத்துப் பாருங்கள். உண்மை விளங்கும். தெய்வமொன்றுண்டு. தேவ கட்டளைகளை மீற வேண்டாம். மீறாதோரே பெரியோராவாா்." என்றிப்படியான போதனைகளை இடித்திடித் துரைத்த பின்பே சட்டம்பியாா் தினசரிப் பாடங்களை ஆரம்பிப்பது வழக்கமாகிவிட்டது. கற்ற போதனைகளை சாதிக்கவும் பயிற்றி வந்தாா். ஆதலினாலே பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேற்பட்ட கசப்பு நாளடைவில் அறவே தொலைந்து விட்டது.

பிள்ளைகளுடைய வாயில் இருந்து "அவா் மிகவும் நல்லவா்" என்பதைத் தவிர வேறெவ்விதமான அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்த முடியாமற் போன விஸ்ஸா இரண்டாம் வருட முடிவிலே தனது பிடிவாதத்தினாலும் தலையணை மந்திர வலிமையினாலும் ஒருவாறு ஆறுமுகச் சட்டம்பியாரை நீக்குவித்து வேறொவரை அமா்பித்துக் கொண்டாள். பிள்ளைகளோ மடியில் வைத்துச் செல்லம் பண்ணின செல்லத்துரைச் சட்டம்பியாரை நினைத்து ஒரு சொட்டுக் கண்ணீராயினும் விடாதவா்கள் ஆறுமுகச் சட்டடம்பியாா் பிரிவை ஆற்றாது கண்ணீா் பெருக்கிக்கொண்டு இப்போது மேல்வந்த புதுச்சட்டம்பியாரிடம் படித்துக் கொண்டிருக்கின்றனா்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல் எண்ணக்கருக்கள்

க. சண்முகலிங்கம்

**கல்வியும் சமூக அசைவியக்கமும்.**

சமூக அமைப்பின் கீழ்படிநிலைகளில் உள்ள சமூக குழுக்களும் தனிநபர்களும் சமூக அமைப்பின் மேல்நிலைக்கு உயர்ந்து செல்வதை சமூக அசை - வியக்கம் (Socialmobility) என்ற எண்ணக்கரு மூலம் விளக்கலாம். சமூகம் பிரமிட் போன்ற அமைப்பை கொண்டதாயும் படித்தர அமைப்பை உடையதாயும் உள்ளது. இதனைச் சமூக எண்ணக்கரு (Social Stratification) என்ற இன்னொரு எண்ணக்கருவின் மூலம் விளங்கிக்கொள்ளலாம். சமூக அடுக்கமைவில் கீழ் நிலையில் உள்ளோர் மேல் நோக்கி பெயர்ச்சி அடைவதைப் பல காரணிகள் ஊக்குவிக்கும். சமூக அசைவியக்கம் மேல்நோக்கிய பெயர்ச்சியை மட்டுமல்லாமல் கீழ்நோக்கிய பெயர்ச்சியையும் குறிக்கும். முன்னர் உயர்நிலையில் இருந்த சமூக குழுக்கள் சமூகத்தில் ஏற்படும் ஒட்டுமொத்த சமூக அசை - வியக்கத்தின் பயனாக ஒப்பீட்டளவில் தாழ்ந்து போவதும் உண்டு.

சமூக மாற்றங்கள் விரைவாக ஏற்படும் போது சமூக அசைவியக்கம் விரைவுபடுத்தப்படும். சமூக மாற்றங்களில் மிக முக்கியமானதாக விளங்கும் கல்வித்துறை மாற்றம் சமூக அசைவியக்கத்தை விரைவுபடுத்தும். சமூக அசைவியக்கம் என்ற விரிந்த விடயத்தை கல்வியுடன் தொடர்புபடுத்தி சில முக்கிய அம்சங்களை நோக்குவோம்.

சமூக அசைவியக்கத்தை தூண்டிவிடும் கல்விமாற்றம் தானாகவே ஏற்படுவதில்லை. கல்வி மாற்றம் ஏற்படுவதற்குச் சில காரணங்கள் உள்ளன. இவற்றுள் மிகப்பிரதானமானது சமூகத்தின் தொழிற்கட்டமைப்பில் (Occupational Structure) ஏற்படும் மாற்றமாகும். தொழிற்கட்டமைப்பின் மாற்றம் கல்வி நிறுவனக் கட்டமைப்பை மாற்றுகின்றது. தொழிற்கட்டமைப்பின் மாற்றத்தால் புதியவகைத் தொழில்களுக்கான கேள்வி தோன்றும். இக்கேள்வியால் தூண்டப்பெற்ற கல்வி நிறுவனங்கள் புதியவகைத் தொழில்களுக்குத் தேவைப்படும் அறிவையும் திறன்களையும் கொண்ட இளம் தலைமுறையினரை உருவாக்குகின்றன. கல்விநிறுவனக் கட்டமைப்பும் மாறுகிறது.

19ம் 20ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட கல்வித்துறை மாற்றங்களை ஆராயும் போது பின்வரும் விடயங்கள் துலக்கமாகின்றன.

I) **பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் அறிமுகமும் வர்த்தகம்,வங்கித்தொழில், போக்குவரத்து,தொடர்பாடல் ஆகியவற்றில் ஏற்பட்ட முற்னேற்றமும் இலங்கையில் தொழிற்கட்டமைப்பில் மாற்றங்களை உருவாக்கியது.**

II) **ஆங்கிலம் படித்த மத்தியதர வர்க்கம் ஒன்றுக்கான தேவை எழுந்தது. நிர்வாகத்துறையின் கீழ் நிலைப்பதவிகளிலும் வர்த்தகம்,வங்கித்தொழில் போன்ற வற்றிலும் தொழில் புரிவதற்குத் தகைமை உடையவர்களான கல்வி கற்ற வகுப்பினர் தோன்றினர்.**

II **கிராமப்புறங்களின் விவசாயக்குடியான் சமூகத்தில் கல்வியால் முன்னேறலாம் என்ற அவா எழுந்தது. இதன் விளைவாக சமூக அசைவியக்கம் ஏற்பட்டது. சமூக அசைவியக்கத்துக்கான காரணிகள் பலவற்றுள் கல்வியும் ஒன்று என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேணடும். கல்வியை பிற காரணிகளோடு தொடர்புபடுத்தியும் நாம் நோக்குதல் வேண்டும்.**

கல்வியில் ஏற்படும் சமூக அசைவியக்கத்தின் பயனாக தொழில் முயற்சியாளர் வகுப்பு உருவாவதில்லை. கல்வி தொழில் முயற்சியாளர்களை விடச் சேவையாளர் வகுப்பு ஒன்றையே உருவாக்குகிறது. சேவையாளர் வகுப்பு என்பதன் பொருள் யாது? அரசநிர்வாகம், போக்குவரத்து வர்த்தகம், வைத்தியம், பொறியியல், நிலஅளவை, கணக்கியல், வங்கியியல், காப்புறுதி, கல்வி போன்ற சேவைகளை வளங்குவதற்கான பணியாட்தொகுதியினரே சேவையாளர் வகுப்பாகும். சேவையாளர் வகுப்பு சமூகப் படித்தரத்தில் மத்தியில் உள்ளவர்களாதலால் மத்தியதரவகுப்பு என்றும் அக்குழுவினர் அழைக்கப்படுகின்றனர்.

தொழில் முயற்சியாளர் வகுப்பிற்கும் மத்தியதர வகுப்பிற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தொழில் முயற்சியாளர் மூலதனத்தேட்டம் மூலம் உயர்நிலையை அடைகின்றனர். மத்தியதர வகுப்பைச் சேர்ந்த சேவையாளர் வகுப்பு சமூக ஏணிப்படியில் உயர்வதற்குக் கல்வியைப் பிரதான வழியாகக் கொண்டுள்ளது. இலங்கையின் முதலாளித்து வளர்ச்சியை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சாராயவர்த்தகம், பெருந்தோட்டங்கள், காரியச்சுரங்க அகழ்வுத்தொழில் ஆகியவற்றில் தமது மூலதனத்தேட்டத்தை முதலீட்டவர்களான முயற்சியாளர்கள் பெரும் தனவந்தர்களாக மாறியதைக் காணமுடியும். முன்னர் அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களான வரலாறாக இலங்கையின் முதலாளித்துவ வளர்ச்சியின் சமூக மாற்றங்கள் அமைந்தன.

இலங்கையின் மத்தியதர வகுப்பின் பெரும்பான்மையினர் கிராமப்புற விவசாயிகள் மத்தியில் இருந்து தோன்றினர். கிராமப்புறங்களில் ஏற்பட்ட கல்விமாற்றம் இதற்குத் துணைசெய்தது. முதலில் ஆங்கிலக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது விவசாய சமூகத்தின் மேல்நிலையில் இருந்தோர்களான நில உடமையாளர்களர்கள், சிறுவர்த்தகர்கள் , நடுத்தரவிவசாயிகள் ஆகியோரின் குடும்பங்களில் தோன்றிய இளைஞர்களே ஆங்கில கல்வியைப் பெற்று மேல்நிலைக்கு உயர முடிந்தது. இலவசக்கல்வி, சுயமொழிக்கல்வி என்பவற்றின் பயனாக கிராமப்புறங்களின் கீழ்ப் படித்தரங்களில் இருந்தும் பலர் மேல் நிலைக்கு உயரலாயினர். 1950 களுக்குப் பிந்திய காலப் பகுதியில் கல்வியால் ஏற்படும் சமூக அசைவியக்கம் எல்லா மட்டத்தினரையும் தழுவியதாக அமையலாயிற்று. கன்னங்கரா கல்விச் சீர்திருத்தத்தின் முக்கிய பயன்களில் ஒன்று சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவியக்கத்தை கிராமப் புறங்களின் கீழ் மட்டங்களுக்கும் எடுத்துச் சென்றதாகும். கிராமப் புறங்களில் இருந்து தொழில் முயற்சியாளர் வகுப்பு உருவாகுவதற்குப் பதில் மத்திய தர வகுப்பினரான சேவையாளர் வகுப்பு உருவாகுதல் இலங்கையின் பொருளாதார பின்னடைவினதும் தேக்கத்தினதும் அறிகுறியே ஆகும். இந்தியாவின் பல பகுதிகளில் நிலவுடைமையாளர் வகுப்பில் இருந்தும் நடுத்தர, பணக்கார விவசாயிகள் வகுப்பில் இருந்தும் தொழில் முயற்சியாளர் உருவாகின்றனர். இச்செயன்முறையை குலாக்குகள் வகுப்பு முதலாளி வகுப்பாக மாறுதல் என்று கூறலாம். குலாக்குகள் என்ற சொல் ரஷ்ய மொழியில் இருந்து பெறப்பட்டது. அங்கு ஒக்டோபர் புரட்சிக்கு முந்திய கட்டத்தில் உருவான நடுத்தர பணக்கார விவசாயிகள் குலாக்குகள் எனப்பட்டனர். கிராமப் புறத்தின் குலாக்குகள் முதலாளிகளாக மாறும் விருப்பைக் கைவிட்டு விட்டு சேவையாளர் வகுப்பில் சேர்ந்து கொள்வதையே குறியாகக் கொள்ளும் போக்கை குலாக்கில் இருந்து கிளாக்கிற்கு என்று ஒரு இந்திய எழுத்தாளர் குறிப்பிட்டார். இது முன்னேற்றத்தின் அறிகுறி அல்ல. வரலாற்று நோக்கில் இலங்கைத் தமிழ் சமூகத்தின் முக்கிய பலவீனங்களில் ஒன்று அது குலாக்கில் இருந்து கிளாக்கிற்கு என்ற கொள்கையின் படி செயற்பட்டதே ஆகும்.



## பார்வை – 01 (கல்வியியலுக்கானது)

இஸ்லாமிக் புக் ஹவுஸ் கல்வி வெளியீடாக வெளிவந்திருக்கும் சீதா சந்தசீலி சமரசிங்க எழுதிய

01. "நினைவாற்றலை வளர்த்தல்" (மொழிபெயர்ப்பு: எம்.எச்.எம். ஹசன், எம்.எச்.எம். யாக்கூத்)
மாணவர், ஆசிரியர்களுக்கான ஒரு வழிகாட்டல் நூல்.

01. அன்றாட வாழ்வில் அனைவருக்கும் உளவியல் – 1 (எம்.எச்.எம். ஹசன்)

02. "கற்றலில் மாணவர் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் (ஓர் உளவியல் நோக்கு) எம்.எம். பஹீம்)

போன்ற நூல்கள் புதிய சிந்தனை, புதிய பார்வைக்கான கருத்தாடல்களை வெளிக்கொண்டு வந்துள்ளன. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய செயல்முறை ஆய்வுகளுக்கான கல்வியியல் நூல்களாக இவை வெளிவந்துள்ளன. இஸ்லாமிக் புக்ஹவுஸ் கல்வியியல் நோக்கினை பல நூல்களாக வெளிக்கொண்டுவருதலானது கல்விசார் சமூகத்திற்கு செய்யும் பெரும் பங்களிப்பாகும்.


## பார்வை – 02

புதியதோர் ஆசிரிய வாண்மைத்துவ சிந்தனையை உள்ளடக்கமாக கொண்ட புதிய அமைப்பொன்றை கட்டியெழுப்பவும் அதனூடாக ஆசிரிய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்லவும் என நாம் கல்விசார் வளவாளர்கள், கல்வி சிந்தனையாளர்கள் மற்றும் கல்விசார் சமூகத்தினரிடம் இருந்து பல ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டிருந்தோம். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பலர் தமது கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இவ்விடயத்தில் ஆர்வமாயும் உள்ளனர். ஆகவே விரைந்து செயற்பட முன்வரும் கல்விசார் சமூகத்தினருக்கு அகவிழி தனது முழு ஆதரவையும் பங்களிப்பையும் நல்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க வையகம்!** **வாழ்க வளமுடன்!**







உலகத்தில் அமைதியும் ஆன்மிக மேம்பாடும் ஏற்படுவதற்காக சுயமுயற்சியின்
மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றி வருகிறார்.

* விரும்புவோர் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.

* காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.

* தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.



## இலங்கையில் முதன் முதலாய் அறிவுக்கு ஒரு ஆலயம் எழுந்து நிற்கப் போகிறது.

## மனமுவந்து பொற்குவை தாரீர்

*இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை*
53/1A,
Ramakrishna Road,
Wellawatta,
Colombo - 06.
T:P 011-5658412, 071-4042300

*கொட்டாஞ்சேனை தவமையம்*
93 A, நியூ செட்டித் தெரு
கொழும்பு 13.
தொலைபேசி : 0112449645

*கொட்டாஞ்சேனை விவேகா தவமையம்*
விவேகானந்தா மேடு,
கொழும்பு 13.
தொலைபேசி : 077 6034886

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/96/NEWS/2012"

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை,**
202, செட்டியார் தெரு கொழும்பு-11
தொ.பே.இல: 0112422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை,**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ கேசவன் புக்ஸ்டோல்,**
52 டன்பார் வீதி ஹட்டன்.
தொ.பே.இல:051-2222504,051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை,**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா.
தொ.பே.இல: 024-4920733

**அன்பு ஸ்டோர்ஸ்,**
14 பிரதான வீதி, கல்முனை.
தொ.பே.இல 067-2229540

**புக் லாப்,**
20,22 சேர் பொன் ராமனாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:021-2227290,
கை.தொ.இல:077-1285749

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல: 011 - 2688102

**கவிதா ஸ்ரோஸ்**
இல: 05, பஸ் தரிப்பிடம், வவுனியா
தொ.பே.இல : 024 - 2222012

**ரோயல் புக் சொப்**
இல: 79, மெயின் வீதி,
அக்கரைப்பற்று.

**பூபாலசிங்கம் புத்தகக்கடை,**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல:4515775, 2504266

**அபிஷா புத்தகக்கடை**
137, பிரதான வீதி தலவாக்கலை
தொ.பே.இல:052-2258437

**நூர் மொஹமட் நியூஸ் ஏஜண்ட்,**
132, பிரதான வீதி,
கிண்ணியா-03.
தொ.பே.இல:026-2236266

**சாய் புத்தகக்கடை**
92, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13
தொ.பே.இல:2452736

**குமரன் டிரேட் சென்டர்**
18, டெய்லியயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல.: 052-2223416

**பிரியங்கா புத்தகக் கடை**
பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே.இல:077 9303246.

**கொலேஜ் நீட்ஸ் புத்தகக்கடை**
120, பிரதான வீதி, அட்டாளைச்சேனை 14.
கை.தொ.இல.: 077-3034469

**அல்துரசி புத்தக நிலையம்**
28,1/2, புகையிரத வீதி மாத்தளை.
தொ.பே.இல:066-3662228

**மலையக பாட்டாளிகள் கழகம்**
**நவா பென்சி**
13, சென்லியாட்ஸ் பசார், ஹல்கரனோய
தொ. பே : 0522265538 / 0773676666

ISSN 1800-1246

Printed by
**Gowry Printer**
207, Wolfendhal Street,
Colmbo-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org